# தேசிய கவுரவம்

MADRAS

முதலமைச்சர்

எம். பக்தவத்சலம்

தொகுப்பு :

மு. நமசிவாயம்

வள்ளுவர் பண்ணை

பிராட்வே - சென்னை-1

*வெளியீடு 163*

*முதற் பதிப்பு : டிச. 1964.*

பதிப்புரிமை பெற்றது.

---

**விலை ரூபாய் 3—00**

---

*அச்சிட்டோர் :*

*ஜீவன் பிரஸ், சென்னை—5.*

...ARA PUBLIC LIBRARY
15 MAY 1985

# முன்னுரை

தாய் நாட்டின்பால் பற்றும் பக்தியும் மக்களுக்கு இயல்பான உணர்ச்சிகள். பிறந்த நாட்டைக் குறித்துப் பெருமை கொள்வது இயற்கைச் சுபாவம். தேசத்தைப் பாது காப்பதைக் காட்டிலும் உயர்ந்த தர்மமும் சிறந்த சேவையும் வேறு இல்லை. தேசப் பாதுகாப்பைப் போலவே, தேசிய கவுரவத் தைப் பாதுகாப்பதும் உலக மக்களின் மிகப் புனிதமான உணர்வாக இருந்து வருகிறது.

உலகில் வேறு எங்கும் இல்லாத ஒரு நோய் நம் நாட்டில் சிலருக்கு ஏற்பட்டது. தங்களுக்கு ஒரு புதுகோஷம் வேண்டுமென் பதற்காக இவர்கள் நாட்டைத் துண்டாட வேண்டும் என்றனர். எந்த அரசியல் ஞானி யும், எந்தச் சுதந்திர வீரனும் சொல்லாத விபரீத சித்தாந்தத்தைச் சொல்லத் தொடங் கினர். தேசக் கொடிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் கொடியைக் கொளுத்தப் போகிறோம் என்று சிலர் சொன்னார்கள். தேசத்தின் அரசியல் சாசனத்தை எரிக்கப் போவதாகச் சிலர் கிளம்பினார்கள்.

பிரிவினை எண்ணங்களையும் அதன் கிளைக ளான தேசிய கவுரவ அவமதிப்புச் செயல் களையும் தேசம் சகிக்காது. நாட்டின் ஒரு பகுதியாக உள்ள எந்தப் பிரதேசத்துக்கும் பிரிந்து செல்லும் உரிமை கிடையாது என்பதை அமெரிக்கா நூறு ஆண்டுகளுக்கு முன்பே நிர்ணயம் செய்து விட்டது. ஒரு நாட்டுடன் புதிய மாநிலங்கள் வேண்டுமானால் சேரலாம். ஆனால் ஏற்கனவே உள்ள பகுதிகள் பிரி வதற்கு உரிமை இல்லை. பெற்ற தாயானாலும்

குழந்தையை வளர்க்கலாமே தவிர, கெடுக்கும் உரிமை கிடையாது.

ஒரு சிலரின் அரசியல் மாய்மாலம் எப்படி இருந்தாலும் மக்களின் மன நிலையில் எவ்வித ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எல்லையில் சீனத்தாக்குதல் ஏற்பட்டபோது இந்த நாட்டின் ஒருமைப்பாட்டுச் சக்தி எப்படிப்பட்டது என்பது புலனாயிற்று. தேசத்தின் சகலமான பகுதிகளிலும் ஊழிக்கால பிரளயம் போல தேசிய உணர்ச்சி பிரவாகமெடுத்தது. பிரிவினை எண்ணம் புதையுண்டது. தேசத்துக்குப் பலவீனம் ஏற்படுத்தக் கூடிய பிரிவினைப் பிரச்சாரங்களைத் தடுப்பதற்காகவும், தேசிய கவுரவ அவமதிப்புச் செயல்களைத் தடுக்கவும் சட்டமியற்றப்பட்டதை நாடு அறியும்.

தீய சக்திகளை ஒடுக்குவது குறித்தும், தேசத்தின் பாதுகாப்புக்குச் சார்பான இதர விஷயங்கள் பற்றியும் அவ்வப்போது நான் தெரிவித்த கருத்துக்களையும் விளக்கங்களையும் தொகுத்து **'தேசிய கவுரவம்'** என்ற இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தொகுப்பாசிரியர் **மு. நமசிவாயம்** அவர்கள், அரிது முயன்று தகவல்களை எல்லாம் திரட்டி, பொருளை வகைப்படுத்தி, முறையாகக் கோத்து, **வள்ளுவர் பண்ணையின்** ஆதரவில் இந்த நூலை உருவாக்கி யிருக்கிறார். திருப்திகரமான முறையில் இந்நூல் அமைந்தது பற்றி என் பாராட்டுக்களையும், அவரது ஊக்கம் முயற்சிக்கு என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேசிய உணர்ச்சியை வளர்க்கும் நல்ல முயற்சிகள் வளர்வதாக.

சென்னை,
24—12—'64.

**எம். பக்தவத்ஸலம்.**

...MARA PUBLIC LIBRARY
15 MAY 1985

# பதிப்புரை

தமிழக முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களது அறிவு, ஆற்றல், அநுபவம் ஆகியவற்றின் சிறப்புக்களைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்துள்ளனர் என்பது வெளிப்படை.

மக்களது அன்பும் ஆதரவும் ஒருங்கே படைத்துள்ள பெருந் தமிழர் திரு எம். பக்தவத்சலம் அவர்களது அரிய கருத்துக்களைத் தொகுத்து "தேசிய கவுரவம்" என்ற தலைப்பில் வெளியிடுவதில் பூரிப்பும் பெருமையும் அடைகிறோம். முதலமைச்சருக்கு எங்கள் உளங்களிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூலினை நல்ல முறையில் தொகுத்து, வெளியிட உதவிய திரு. மு. நமசிவாயம் அவர்களுக்கு எமது நன்றி.

ந. பழநியப்பன்
வள்ளுவர் பண்ணை.

# தொகுப்புரை

பொதுவாழ்வில் பல்லாண்டுகள் ஈடுபட்டுப் பண்பட்டவர் நமது முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள். பல்வேறு சமயங்களில், பலதரப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிய அவரது தெளிந்த கருத்துக்களைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட விரும்பிக் கேட்டேன். உடன் அனுமதி தந்தார். அதன் விளைவே இந்நூல். அவருக்கு எனது உளங்கனிந்த நன்றி.

'தேசிய கவுரவம்' என்ற இத்தொகுப்பில், நாட்டின் கவுரவம், பாதுகாப்பு, பிளவு சக்திகளின் கேடு, ஒருமைப்பாடு முதலியன பற்றிய தெளிவுரைகள் அடங்கியுள்ளன.

நல்லமுறையில் நூலை வெளியிடும் எனது நண்பர் திரு. ந. பழநியப்பன் அவர்கட்கு எனது நன்றி.

**மு. நமசிவாயம்**
தொகுப்பாளர்

..MARA PUBLIC LIBRARY
15 MAY 1985
MADRAS

# பொருளடக்கம்


1. நூதனமான சட்டம் ... 9
2. பிரிவினைக்கு இடம் கொடோம் ... 21
3. காவிரியும் கங்கையும் ... 42
4. தேர்தலும் பதவியும் ... 54
5. மதுவிலக்குத் திட்டம் ... 62
6. கடுமையான நடவடிக்கை ... 71
7. முன்னேற்றச் சின்னம் ... 81
8. குற்றத் தடுப்பு ... 90
9. பாதுகாப்புப் பொறுப்பு ... 99
10. புனிதத் தன்மை ... 106
11. நிர்வாக நடைமுறை ... 120
12. அரிய சேவை ... 137
13. ஊர்க்காவல் படை ... 148
14. கிராமத் தொண்டர்படை ... 156
15. அக்டோபர் இருபது ... 168
16. பெரும் பொறுப்பு ... 175

## முதலமைச்சரின் பிற நூல்கள்

ஜனநாயகமும் மந்திரிசபையும்

தமிழை வளர்ப்போம் வாரீர்

குடியரசும் மக்களும்

சமுதாய வளர்ச்சி

வளரும் தமிழகம்

பாரதப் பண்பு

MADRAS PUBLIC LIBRARY
15 MAY 1985
MADRAS

# தேசிய கவுரவம்

## 1. நூதனமான சட்டம்

உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும் பல சட்டங்கள் இயற்றப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எல்லா சட்டங்களும் மக்களுடைய நல் வாழ்க்கைக்குத் தான் இயற்றப்படுகின்றன. ஆனால் நம் நாட்டில் ஒரு நூதனமான சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்கான நிர்ப்பந்தம் இங்கு ஏற்பட்டது.

**நூதனமான சட்டம்**

தேசிய கவுரவ அவமதிப்புத் தடுப்புச் சட்டம் செய்ததைத்தான் குறிப்பிடுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னபடி, மற்ற நாடுகளில் இத்தகைய நூதனமான சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கெல்லாம் தேசியக் கொடியை, தேசத்தின் அரசியல் சட்டத்தை அவமதிப்பது என்பதே கிடையாது. அந்த எண்ணமே தோன்றுவதில்லை.

நாட்டைப் பாதுகாப்பதற்கும் மக்களுடைய நல் வாழ்க்கையைக் காப்பாற்றுவதற்கும் இம்மாதிரியான

சட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அந்த நிலைமையில்தான் இந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது.

## சட்டம் எதற்கு ?

அப்போதைக்கப்போதுள்ள நிலைமையைச் சமாளிக்க வேண்டி சட்டம் இயற்றப்படுகிறது. அப்போதைக்கப்போதுள்ள நிலைமையைச் சமாளிக்க, மக்களுக்குப் பாதுகாப்பளிக்கச் சட்டங்கள் இயற்றப் படுகின்றன. ஒரு சிலருக்கு துரதிருஷ்டவசமாக மூளைக்கோளாறு ஏற்பட்டு விடுகிறது. பைத்தியம் பிடித்து விடுகிறது. பைத்தியம் பிடித்தவர்கள் கண்ட படி ஆடுகிறார்கள் என்றால் ஒரு சிலருக்கு அது வேடிக்கையாக இருக்கும். அது வியாதிகளில் கொடிய வியாதி. வேடிக்கையாக இருக்கிறது என்று இருப்பதற்கில்லை. வேடிக்கை விஷயம் என்று சும்மா இருப்பதற்கில்லை. 'லூனசி ஆக்ட்' (பைத்தியக்காரர்கள் சட்டம்) என்று ஒரு சட்டம் வைத்திருக்கிறோம். இந்த மாதிரியான ஒரு சட்டம் எந்த நாட்டிலும் இருக்கிறது. பைத்தியம் பிடிக்கிறது. தீவிரமாகப் போய் விடுகிறது. ஆபத்தை விளைவிக்கக் கூடிய பைத்தியமாக மாறுகிறது. அதற்காகப் பைத்தியக்காரர்கள் சட்டம் இயற்றப்பட்டு, ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் சமாளிப்பதற்காக, பிரயோகிப்பதற்காக, போதிய நடவடிக்கைகள் எடுக்க எல்லாம் அமைக்கப்பட்டு, சட்டம் இருக்கிறது என்பதை அனைவரும் உணருவார்கள்.

## தேசப் பிதா, தேசியக் கொடி

தேசிய கவுரவ அவமதிப்பு தடுப்புச் சட்டம் குறிப்பிடுவதெல்லாம் நம்முடைய நாட்டின் கொடிக்கு ஏற்படக்கூடிய அவமானங்களைத் தவிர்க்கவேண்டும்.

அவ்வாறு யாராவது அவமானம் செய்ய முற்படுவதென்றால், அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும். அவ்வாறே, நம்முடைய தலைவர், நமது நாட்டின் ஒப்பற்ற தலைவர், காந்தியடிகள் அவர்களிடம் நாம் வைத்திருக்கும் சிறந்த மதிப்பிற்குப் பங்கம் ஏற்படக்கூடிய வகையில் யாராவது நடந்து கொண்டால் அதைத் தவிர்க்க, அப்படி நடந்து கொள்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்துத் தண்டனை விதிக்க வேண்டும் என்று இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காந்தியடிகள் ஓர் ஒப்பற்ற தலைவர் என்பது மட்டுமல்ல, நம் நாட்டின் பிதாவாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த நம் நாட்டின் பிதாவைப் பற்றிக் குறைவாக யாராகிலும் எந்த நடவடிக்கையாகிலும் எடுத்துக் கொள்வதென்றால் அதைத் தடுக்கவேண்டும். அதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்ற வகையில் காந்தியடிகளின் உருவம், சிலைகள், படங்கள் இவற்றுக்கு ஏதாவது செய்து, மானத்திற்குப் பங்கம் ஏற்படக் கூடிய வகையில் யாராவது நடந்து கொண்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## புனிதமான தஸ்தாவேஜு

அவ்வாறே நம் அரசியலமைப்புச் சட்டம். நம்முடைய ஜனநாயக ஆட்சிக்கு அடிப்படை அரசியல் சட்டம். சில நாடுகளில், இங்கிலாந்து போன்ற நாடுகளில் இந்த அரசியலமைப்புச் சட்டம், எழுத்து மூலமான அரசியலமைப்பு ஏற்படாமலிருந்தும், அதுவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. வேறு சில நாடுகளிலும் நம் நாட்டிலும் அரசியலமைப்புச் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசியலமைப்புச் சட்டம் என்பது எல்லா வேதங்களுக்கும் வேதமாக, எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒரு வேதம் அது. நமது ஆட்சிக்கும் நல்ல வாழ்க்கைக்கும் அடிப்படையானது. அடிப் படை என்பது மட்டுமல்ல. நாமெல்லோரும் போற்றி, வணக்கத்துடன் பாராட்டக் கூடியது. நமக்கு அது மிகவும் 'புனிதமான தஸ்தாவேஜு' என்று சொல்ல வேண்டும். அத்தகையது அரசியலமைப்புச் சட்டம்.

## அவமதிப்பை அனுமதிப்பதா ?

அரசியல் அமைப்புச் சட்டத்திலே ஏதாகிலும் பிடிக்காமலிருந்தால், அதை மாற்றிக் கொள்ள முயற்சிக்கலாம். ஜனநாயக முறையில் மாற்றிக் கொள்வதற்கு அதில் இடம் கொடுக்கப் பட்டிருக் கிறது. மாற்றப்பட வேண்டு மென்று கருதும்போது நம் பார்லிமெண்ட் சபை அதை மாற்றிக் கொண்டு வரு கிறது, சிற்சில சமயங்களில்.

அரசியல் சட்டத்தை இப்போது மாற்றியது போதாது; இன்னும் குறைகள் இருக்கின்றன; சில சங்கடங்களை மாற்றியாக வேண்டுமென்று சொல்ல லாமே தவிர, மாற்றவில்லை—மாற்றப்போவதில்லை, ஆகவே, இந்த அரசியலமைப்புச் சட்டத்தைக் கொளுத் துகிறேன், அவமதிக்கிறேன் என்று சொன்னால், யார் சொன்னாலும்—அதன் அருமை அவர்களுக்குத் தெரி யாமல் இருக்கலாம்—யாராயிருந்தாலும், அவ்வாறு அவமதிப்புச் செய்வதை, அவமதிப்பு ஏற்படக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்வதை நாம் அனுமதிக்க முடியாது. மக்கள் அனுமதிக்க முடியாது. அரசாங்கம் அனுமதிக்க முடியாது. அவ்வாறு நடந்து கொள்வதென்றால் அதைத் தவிர்க்க வேண்டும் என் பதும் இந்தச் சட்டத்தின் உட்கருத்து.

## வித்தியாசம் இல்லை

அம்மாதிரி கொஞ்ச காலத்திற்கு முன்பு நம் நாட்டின் கொடிக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில், கொடியைக் கொளுத்தப் போகிறேமென்று சிலர் சொன்னார்கள்.

அப்படி யார் சொன்னாலும், பெரியவர்களா யிருந்தாலும், சிறியவர்களா யிருந்தாலும், பத்திரிகை அதிபரா யிருந்தாலும், யாரா யிருந்தாலும்—மனிதர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியது அவசிய மில்லை; பெரிய மனிதர்களா யிருந்தாலும் சரி, சிறிய மனிதர்களா யிருந்தாலும் சரி, ரொம்பச் சிறிய மனிதர்களா யிருந்தாலும் சரி—மனிதர்களைப் பற்றி வித்தியாசம் இல்லை. யார் சொன்னாலும் தவறுதான். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிக்கப்போகிறோம்; ஏதோ அதில் ஒரு மாறுதலைச் செய்யவில்லை; செய்யப் போவதில்லை; அதனால் அதைக் கொளுத்தப் போகிறேமென்று சொன்னார்கள். சொல்லிக் கொள்வது மட்டுமல்ல. இதைச் செய்யப் போகிறோம் என்று ஊர்ஜிதம் செய்தார்கள். ஆகையால்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.

## மானத்திற்குப் பங்கம்

நாம் எந்த விதத்திலும் நம் நாட்டின் மானத்திற்கு எந்தவிதமான பங்கமும் ஏற்பட இடம் கொடுக்க முடியாது, கூடாது. அவ்வாறு யார் பங்கம் விளைவித்தாலும், அந்த முயற்சியில் ஈடுபட்டாலும், அதை அனுமதிக்கக்கூடாது, அதற்குத் தண்டனை விதிக்க வேண்டும். அவ்வாறு நம் நாட்டின் கவுரவத்திற்கு ஹானியில்லாமல் பங்கமேற்படாமல் பாதுகாத்துக்

கொள்ள வேண்டும் என்று, அவ்வகையில்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதற்கான மசோதா சட்ட சபையில் வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், "உங்களுக்கு 150 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்ற தைரியத்தினால் இம் மாதிரி சட்டம் செய்யப் பார்ப்பது சரி அல்ல'' என்று சொன்னார்கள். ஆனால் இது நம்முடைய நாட்டின் மானத்தைப் பொறுத்தது. அதற்கு உரிய சட்டம் அவசியம் என்ற உணர்வோடு அதைக் கொண்டு வந்தோம். கட்சி வேறுபாடு இல்லாமல் இதைப் பார்க்க வேண்டும். கட்சி பலத்தைக் கொண்டு, கட்சி ரீதியாக, இந்தச் சட்டத்தைச் செய்யும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை.

## ஒரு திருஷ்டாந்தம்

இம்மாதிரி விநோதமான குற்றங்கள் புரியக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதால் இம்மாதிரி விநோதமான சட்டம் கொண்டு வரவேண்டி யிருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மதிப்புக் கொடுப்பதற்கு ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமா என்று கேட்பவர்களுக்குப் பதில் சொல்லும் வகையிலே நான் சொன்னேன். அதற்கு, ஒரு திருஷ்டாந்தமும் சொன்னேன். பைத்தியக்காரர்களுக்கு ஒரு சட்டம் இருக்கிறது என்று சொன்னேன்.

எந்த நபரையும் பைத்தியம் பிடித்தவர் என்று சொல்லுவதற்கு நான் யார்? டாக்டர் பார்த்துத் தான் சொல்ல முடியும். நாம் நல்ல புத்தி இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளலாம். ஆனால் டாக்டர் பார்த்துத்தான் புத்திக் கோளாறு இருக்கிறதா, இல்லையா என்று சொல்ல முடியும். அப்படிச் சொல்லக் கூடிய ஆற்றல்—டாக்டருக்குத்தான் உண்டு,

எனக்கு இல்லை. எந்த நபரையும் மறைமுகமாகக்கூட பைத்தியம் ஏற்பட்டு விட்டது என்று நான் சொல்ல வில்லை. நான் சொல்லியது எல்லாம் பைத்தியக்காரர் கள் விஷயத்திலும்கூட அவர்களால் சமூகத்திற்குக் குந்தகம் ஏற்படாமல் அதைத் தடுக்க சட்டமன்றத் திலே சட்டம் செய்திருக்கிறார்கள். "லூனஸி ஆக்ட்" என்று ஒரு சட்டம் உபயோகப்படுத்தத்தான் வேண்டி யிருக்கிறது. பைத்தியக்காரர்களை வெளியே விடுவது ஆபத்து என்றால், அந்தச் சட்டத்தையும் உபயோகப் படுத்தத்தான் வேண்டி யிருக்கிறது. அதைத்தான் அப்போது சொன்னேன்.

## எது சட்ட விரோதம்

இந்தச் சட்டம் எதற்காகக் கொண்டுவர வேண் டும்? இதனால்—சட்ட அவமதிப்பினால்—சமுதாயத் தில் என்ன பாதகம் ஏற்படும்? சமுதாயத்திற்கு ஏதா வது பாதகம் ஏற்பட்டால்தான் சட்டம் வேண்டும் என்று சிலர் சொன்னார்கள்.

சமுதாயத்தின் மானம்தான் அடிப்படையானது. மானம் காப்பாற்றப்பட வேண்டும். மானத்திற்குக் குந்தகம் ஏற்பட்டால் அதைத் தடுக்கத்தான் வேண் டும். அந்த அடிப்படையில்தான் இந்தச் சட்டம் வந்தது. ஆனால் சிலர் சொன்னார்கள். நானும் அரசி யல் சட்டத்தில் நிபுணன் அல்ல. "எனக்குப் பிடிக் காத ஒன்றை நான் கொளுத்துவது எப்படிச் சட்ட விரோதமாகும்?" என்றும் கேட்டார்கள்.

எனக்கு என்னைக் கண்டாலேயே பிடிக்க வில்லை. உயிரின்மேல் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. இருந்தா லும் நானே என் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித் தால் அது சட்டத்திற்கு விரோதம்தான் எனச் சட்டம் இருக்கிறது, இந்தச் சட்டம் அரசியல் அமைப்புகுக்

விரோதமானதா ? அப்படித் தேசத்திற்குப் பொது வான ஒன்றை நான் கொளுத்துகிறேன் என்ருல் அதைத் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்புதான். சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்யலாம் என்று சொல்வது ஒரு விஷயம். சட்டமே பிடிக்க வில்லை யென்ருல் என்ன செய்வது?

## கொடூரமான குற்றம்

ஒரு கொடூரமான குற்றத்தைச் செய்தால், தேசிய விரோதக் குற்றத்தைச் செய்தால் நடவடிக்கை எடுக் காமல் இருக்க முடியாது. குழந்தை ஒரு படத்தைத் தெரியாமல் கிழித்து விட்டால் என்ன செய்வது ? தெரி யாமல் அது செய்து விட்டாலும் இந்தச் சட்டத்தினுல் தண்டிக்கப்பட்டுவிடுமே என்ருர்கள். இது அர்த்த மற்ற வாதம். நாம் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிருேம். இந்தச் சட்டப் பிரகாரம் பதிவாகிற வழக்கு களை எல்லாம் விசாரித்துத் தீர்ப்பு அளிக்கப் போகிற வர்கள் நீதி மன்றத்தவர்கள். இவ் விஷயங்களை எல் லாம் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள மாட்டார் களா ? வேண்டுமென்றே செய்த குற்றம், தெரியாமல் செய்த குற்றம் என்பது எல்லாம் அவர்களுடைய கவனத்திற்கு வராதா? குழந்தை கிழித்துவிட்டது எனச் சொல்லி, வேண்டு மென்றே ஒருவர் கிழிப்பதற்கு வேண்டுமானுல் சட்டம் அனுமதிக்காது என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

## மனித உணர்ச்சிக்கு விடுவதா ?

எதற்காக இந்தச் சட்டம்? மனித உணர்ச்சிக்கே இதை விட்டுவிடலாமே என்ருர்கள். எதற்காக நமக் குச் சட்ட மன்றம்? அநேக சட்டங்களை எதற்காகச் செய்திருக்கிருேம்? எல்லாவற்றையும் மனித உணர்ச்

சிக்கே விட்டுவிடலாமே என்று அவர்களைத் திருப்பிக் கேட்கிறேன்.

சில பேருக்கு அனுவசியமான குழப்பங்கள் எல்லாம் உண்டாகிறது. மக்களுடைய உணர்ச்சி தாறுமாருகப் போகாமல் ஒருமுகப்பட்டு ஒரு பண்பாட்டோடு, ஒரு கட்டுப்பாட்டோடு நாட்டின் நலனுக்குப் பயன்படத்தக்க அளவில் செல்லவேண்டும் என்பதற்காகத்தான் பல சட்டங்களைப் போடுகிறோம். இதில் குழப்பத்திற்கு என்ன இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இந்தக் குற்றத்தைச் செய்வதற்குப் பிறர் தூண்டினுல், இந்தியன் பீனல் கோடு 107—வது பிரிவின்படி நடவடிக்கை எடுக்க வசதி இருக்கிறது.

## உலகத்தின் சொத்து

காந்தியடிகள் தேசத்தின் பிதா என்று நான் சொன்னேன். அவர் தேசத்தின் பிதா என்ற காரணத்தினுல்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அவர் தேசத்தின் சொத்து என்று சொல்லப்பட்டது. அவர் உலகத்தின் சொத்து என்று சொன்னுல்கூட அதை நான் மறுக்கமாட்டேன். காங்கிரசில் ஏகபோக உரிமை கொண்டாடியதுமில்லை, கொண்டாடவுமில்லை. ஆனுல், ஒன்று சொல்கிறேன். உயிர் துறக்கும் வரையிலும் காந்திஜி காங்கிரஸ் மகாசபைக்குப் பக்கபலமாக இருந்தார். வேறு கட்சிகள் காந்தியடிகளிடம் யோசனை கேட்டதில்லை; ஆகவே அவற்றுக்கு அவர் யோசனை சொல்லும் அவசியமும் ஏற்படவில்லை.

காங்கிரஸ் மகாசபைக்கு காந்திஜி கடைசிவரையில் உறுதுணையாக இருந்தார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தபோதிலும், காந்தியடி

களின் உயர்ந்த தன்மையை தன் கட்சியின் நலனுக்கு, கட்சி ரீதியில் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் காங்கிரசுக்கு சிறிதளவும் இல்லை; காங்கிரஸ் அரசாங்கத்திற்கும் இல்லை. எனினும், இன்று காந்தியடிகளைக் குறித்துப் பெருமைப் படுபவர்களும் காந்தியடிகளைப் போற்றுபவர்களும், அவரைக் கொண்டாடி அவர் காட்டிய வழியில் செல்லவேண்டுமென்று விரும்புபவர்களும் காங்கிரசிடம் அபிமானம் உள்ளவர்களே தவிர, காங்கிரசுக்கு முற்றிலும் விரோதமாக இருப்பவர்கள் அல்ல என்பதைப் பார்க்கிறோம்.

## தேர்தலும் காந்திஜி படமும்

ஆனால் காந்தியடிகளின் பெயரைச் சொல்லி வோட்டுக் கேட்கக்கூடாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். தேர்தல் சம்பந்தமாக காந்திஜியின் படத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதை எல்லாக்கட்சிகளும் ஏற்றுக் கொள்ளவேண்டியதுதான். அதற்கான சட்டம் வந்தால் எல்லாக் கட்சிகளும் சட்டத்தின் வரம்பிற்கு உட்படுத்தப்படுவார்கள். நியாயமாக, அதற்கான விதி தேர்தல் சட்டத்தில் வரவேண்டும். ஆகவே, காந்திஜியின் படத்தைத் தேர்தலில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு, தேர்தல் சட்டத்தில் இப்போதுள்ள விதிகள் போதாது என்றால் அந்தச் சட்டத்தைத் திருத்தலாம். ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் காந்திஜியின் படங்களை உபயோகப்படுத்தக் கூடாதென்றால், ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல்களைப் பற்றிய சட்டத்தில், அதற்கான பிரிவைப் புகுத்தலாம்.

## குறைபாடு ஏற்படாது

இந்தச் சட்டத்தினால், ஏதோ நம் நாட்டிற்குக் குறைபாடு ஏற்படும், கெட்ட பெயர் வரும் என்று கருதுவதற்கு அவசியமில்லை என்று குறிப்பிட விரும்பு

கிறேன். குற்றங்கள் நடைபெறுகின்றன. சட்டங்கள் இருந்தாலும் குற்றங்கள் நடைபெறுகின்றன. குற்றம் செய்பவர்களைத் தண்டிப்பதற்காகவும், குற்றங்கள் நடைபெருமல் தடுப்பதற்காகவும் சட்டங்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

இத்தகைய கோரமான குற்றங்கள் நடந்தால், கேவலமான குற்றங்கள் நடந்தால், அதற்கேற்றபடி சட்டங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. சட்டம் செய்வதினுல் ஒரு குறைவும் இல்லை. நிலைமைக்கு ஏற்றவாறு, அவசியத்திற்கு ஏற்றவாறு சட்டங்கள் செய்ய வேண்டும். முன்பே ஏன் இதைச் செய்யவில்லை என்று சிலர் கேட்டார்கள். எப்பொழுது அதற்கு அவசியம் ஏற்படுகிறதோ, நிலைமை அதன் அவசியத்தை ஏற்படுத்துகிறதோ, அப்பொழுதான் சட்டம் செய்யவேண்டும். அந்த நிலைமையிலேதான் இந்தச் சட்டத்தைச் செய்திருக்கிறோம்.

## வேறுபாடு அகல...

காந்தியடிகளின் முக்கியமான இரண்டு கொள்கைகள் என்னவென்ருல், அன்பு நெறி, அகிம்சை இவற்றைத்தான் அவர் வற்புறுத்தி வந்தார். கட்சி வேறுபாடுகள் இருக்கலாம். மாறுபட்ட கொள்கைகள் இருக்கலாம். ஆனுல் காந்தியடிகள் நமக்குப் போதித்துவந்த அன்பு நெறியிலும், அகிம்சையிலும் எவ்விதமான கருதது வேறுபாடுகளும் இருக்க இடமில்லை.

ஒவ்வொரு கட்சியின் எதிர்காலமும் மக்களுடைய ஆதரவைப் பொறுத்திருக்கிறது. ஜனநாயகத்தில் பல கட்சிகள் இருக்க வேண்டியது அவசியம். ஒரே கட்சியாக, ஏகபோக உரிமையோடு இருக்க வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியின் கொள்கையல்ல. இப்பொழுது இருக்கும் இந்த விபரீதமான நிலைமையை

அகற்றுவதற்கு காந்தீய வழியே சிறந்தது. இந்த மாதிரி சட்டம் இயற்றினாலும்கூட, இந்தச் சட்டம் உபயோகிப்பதற்கு இடம் இருக்கும் நிலைமை மாறி இத்தகைய குற்றங்கள் செய்வதற்கு யாரும் முற்படமாட்டார்கள் என்ற அளவிற்குச் சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

நாம் இப்படியெல்லாம் ஆசைப்படுகிறோம். என்றாலும் நடப்பதென்ன ?

**குற்றம் புரியும் எண்ணம்...**

அரசியல் அமைப்புச் சட்டத்தை, தேசக் கொடியை அவமதிப்பதற்காகச் சிலபேர் சிறைக்குப் போனார்கள். எந்தச் சட்டத்திலும் அப்படித்தான். கொலைக்கு ஒரு சட்டம் வைத்திருக்கிறோம். கொலை செய்தவனைத் தண்டிக்க கொலை செய்தவர்கள் தலையை வாங்க, தூக்கு மேடைக்கு அனுப்பப்படுகிறார்கள். அப்படியும் கொலைகள் சில சந்தர்ப்பங்களில் நடைபெறத்தான் செய்கின்றன. அப்படியும் குற்றம் செய்கிறார்கள். சட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றுதான் பார்க்கவேண்டும். இந்தமாதிரிக் குற்றம் செய்யலாம் என்ற எண்ணம் பரவக்கூடாது. அதுதான் சட்டத்தின் நோக்கம். அரசியல் சட்டத்தின் எண்ணம். நாடு, கொடி இவை பற்றி இருக்கும் லட்சியம், பரிபூரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லுகிறேன்.

# 2. பிரிவினைக்கு இடம் கொடோம்

ஜனநாயகம் என்றால் தேர்தல் நடத்தி சட்டசபை, மந்திரிசபை அமைப்பது மட்டுமல்ல. ஜனநாயகத்தில், மக்கள் சுதந்திரமாக வாழ வழியிருக்க வேண்டும். அந்நிய ஆட்சி, அடிமை ஆட்சி, மன்னர் ஆட்சி, சர்வாதிகார ஆட்சி என்றெல்லாம் இருக்கின்றனவே அவற்றிற்கும் ஜனநாயக ஆட்சிக்கும் உள்ள வித்தியாசம் ஜனநாயக ஆட்சியின் கீழ் மக்களுக்கு நியாயமான உரிமைகள் எல்லாம் இருக்க வேண்டும் என்பதுதான்.

## உரிமைக்கு வரம்பு

ஆகையால்தான், நமது அரசியல் சட்டத்தின்படி, நியாயமான உரிமைகளை யெல்லாம் மக்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அவை ஜீவாதார உரிமைகள் என்று சொல்லி, அவை இன்னின்ன என்பது நமது அரசியல் சட்டத்தின் 19-வது ஷரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேசுவதற்கும், கருத்துக்கள் தெரிவிப்பதற்கும், கூட்டமாகக் கூடுவதற்கும்—ஆயுதங்கள் இல்லாமல் கூட்டங்கள் கூடுவதற்கும்—சங்கங்கள் அமைத்துக் கொள்வதற்கும் ஜீவாதாரமான உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மாநில ஆட்சிகளோ அல்லது மத்திய ஆட்சியோ, குறிப்பிட்ட சில

உரிமைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய அளவிலே சட்டங்கள் செய்வதற்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக நாட்டின் பாதுகாப்பு, அமைதியை நிலைநாட்டுவது; நல்ல ஒழுக்கத்திற்குப் பங்கம் இல்லாமல் பாதுகாத்துக் கொள்வது என்ற வகையிலே சட்டங்களை இயற்றுவதற்கு, ஜீவாதார உரிமைகளுக்குக் கூட ஒரு வரம்பு கட்டுவதற்கு அரசியல் சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஜீவாதாரமான உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்பது உண்மைதான். ஆனால், ஜீவாதாரமான உரிமைகள் ஓரளவு பாதிக்கப்பட்டாலும் நாட்டின் பாதுகாப்பு, அமைதியை நிலைநாட்டுவது, நல்லொழுக்கத்தைப் பாதுகாப்பது இதை யொட்டி சட்டங்கள் செய்யலாம் என்பதுதான் கொள்கை. அவ்வப்போதிருக்கும் நிலையை ஆராய்ந்து பார்க்கும்போது, மேலும் சில அதிகாரங்கள் அரசாங்கங்களுக்கு வேண்டும் என்று ஏற்படுகிறது. அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டத்தை, ஜீவாதாரமான உரிமை பற்றிய அரசியல் சட்டத்தைத் திருத்துவதும், புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதும் அவசியமாகிறது.

## பிரிவினைத் தடுப்புச் சட்டம்

நாடு பிரிவினை கோரிக்கை தேச ஐக்கியத்தைக் குலைக்கும், தேசப் பாதுகாப்புக்குக்கேடு விளைவிக்கும் என்பதால் நாடு பிரிவினையைச் சட்ட விரோதமாக்குவது அவசியமாயிற்று. அதற்காக அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

நாட்டின் ஒருமைப்பாடு, நாட்டின் உரிமை, அதைப் பாதுகாக்கும் வகையில்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. நம் நாட்டின் சுயாதிபத்யம், பிரதேச ஐக்கியத்திற்கு விரோதமான எதுவும்

சட்ட விரோதம் என்பது நமது அரசியல் சட்டத்தில் முன்பு தெளிவாக இருக்கவில்லை. பொதுவாக "தேசப் பாதுகாப்பு, பந்தோபஸ்து" என்றிருக்கிறது. "பொது ஜன அமைதி, ஒழுங்கு" என்றிருக்கிறது. இவை மட்டும் போதாதென்று புலப்பட்டது.

நாட்டிற்காகப் பாடுபட்டுச் சுதந்திரம் பெற்றோம், சுதந்திரம் பெற்று அரசியல் அமைப்புச் சட்டத்தை ஆக்கியிருக்கிறோம், அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் குடியாட்சியை ஸ்தாபித்திருக்கிறோம். இந்த நாட்டிற்கு எந்தவிதமான ஹானியும் ஏற்படக் கூடாது. "எனக்கு உரிமை உண்டு, நான் எதை வேண்டுமானாலும் பேசுவேன், இது ஜனநாயகம், நாட்டைத் துண்டாட வேண்டுமென்று நாட்டைத் துண்டாடும் விதத்தில் பேசுவேன்" என்றால் அந்த உரிமை ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல.

**நிலைமையை உணர்ந்து...**

ஆதியில் இந்த அரசியல் சட்டத்தைச் செய்த போது, அதை ஏற்றுக் கொண்டார்களா என்றால் ஏற்றுக் கொண்டார்கள் என்று ஒருக்காலும் சொல்ல முடியாது. ஆனால் அப்போது இவ்வாறு பேசக் கூடியவர்கள் இருப்பார்கள் என்று கருதவில்லை, எதிர்பார்க்கவில்லை என்பதைத்தான் நான் சொல்வேன்.

நாட்டைத் துண்டாட வேண்டுமென்று சொல்லலாம், அது எங்கள் ஜீவாதார உரிமை என்று சிலர் கூறுவார்கள், அப்படிப் பேச முற்படுவார்கள் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தைச் செய்தவர்கள் அப்போது எதிர்பார்க்கவில்லை. நான் ஒரு திருஷ்டாந்தம் கூற விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழக சட்ட மன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்

பட்டது. அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அகௌரவம் தேடுவது, தேசியக் கொடிக்கு அகௌரவம் ஏற்படுத்துவது இவற்றைத் தடுக்க ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. எல்லா நாடுகளிலும் உள்ள நிலை எனக்குத் தெரியாது. பல நாடுகளில் இம்மாதிரி சட்டம் இல்லை. அப்படிச் சட்டம் இல்லை என்பதால் தங்கள் தங்கள் நாட்டின் கொடியை அவமதிக்கலாம், தங்கள் தங்கள் நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை அவமதிக்கலாம் என்ற அர்த்தம் இல்லை. அப்படி யாரும் இருக்க மாட்டார்கள் என்று கருதித் தான் அங்கெல்லாம் அப்படிச் சட்டம் செய்யத் தோன்றவில்லை. ஆனால் நம் நிலையை உணர்ந்து இதைச் செய்யவேண்டுமென்று தோன்றித்தான் அச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று நான் அப்போது குறிப்பிட்டேன்.

## பாதுகாப்பு இன்றியமையாதது

இந்த நாட்டிற்குக் குடியாட்சியை ஸ்தாபித்து ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தை அமைத்திருக்கிறோம். நாம் அன்னிய ஆட்சியை நீக்கிச் சட்டத்தை அமைத் திருக்கிறோம். நம் நாட்டிற்கு எவ்விதமான ஹானியும் ஏற்படக் கூடாது, நம் நாட்டைப் பாதுகாக்க வேண்டி யது முக்கியமானது. சுதந்திரம் பெற்றோம் என்றாலும் அந்தச் சுதந்திரத்தைப் பாதுகாக்க இது இன்றியமை யாதது என்பதை உணர்ந்துதான் 'சுயாதிபத்யம், பிரதேச ஐக்கியம்' இவ்விரண்டும் பாதிக்கப்படக் கூடாது என்று அரசியல் சட்டத் திருத்தம் செய் தோம். முன்னர் 'பொது ஒழுங்கு, அமைதி பாது காப்பு' என்றிருந்தது. இப்போது 'இந்தியாவின் சுயாதிபத்யம், பிரதேச ஐக்கியம்' என்று சேர்க்கப்பட் டிருக்கிறது.

சிலர், இப்போது இது எதற்கு? இப்போது சர்ச்சை எதற்கு? நெருக்கடி நிலை இருக்கிறதே, நாட்டை ஆக்கிரமித்திருப்பவர்களை விரட்டி அடிக்க வேண்டுமென்று ஒரே மனதாக ஈடுபட்டிருக்கும் இந்தச் சமயத்தில் இத்தகைய ஒரு சர்ச்சையைக் கிளப்ப வேண்டுமா, இத்தகைய ஒரு மசோதாவை பார்லி மெண்டில் ஏன் நிறைவேற்றினார்கள் என்றும் சிலர் கேட்டனர்.

## புதிய விளக்கமா ?

நம் நாட்டைப் பாதுகாக்க, அக்கிரமமாக நம் நாட்டு எல்லையை ஆக்கிரமித்திருப்பவர்களை விரட்டியடிக்க வேண்டும். எண்ணற்ற வீரர்கள், தொண்டர்கள், குளிரைப் பொருட்படுத்தாமல், ஆபத்தைப் பொருட்படுத்தாமல் தங்கள் குடும்பங்களை விட்டு, இன்றும் எல்லையில் நின்று நம் நாட்டைப் பாதுகாத்து வருகிறார்கள். மேலும் அவர்கள் எந்தவித தியாகத்தையும் செய்யத் தயாராயிருக்கிறார்கள். எதற்காக? நம் நாட்டைப் பாதுகாக்கத்தான் அவர்கள் நிற்கிறார்கள். இந்த நாட்டைத் துண்டாட வேண்டும், பிரிக்க வேண்டுமென்று ஒருவர் சொல்லலாம். சொல்வது மட்டுமல்ல. இதை ஓர் உரிமையாகக்கூட கொண்டாடலாம், இதுதான் ஜனநாயகம் என்று நமக்கு ஒரு புதிய விளக்கத்தை அளிக்கலாம். அதை அனுமதிப்பது நாட்டின் பாதுகாப்பிற்கு மிகுந்த பாதகத்தை அளிக்கக் கூடியது என்று கருதித்தான் இந்த அரசியல் சட்டத் திருத்தம் செய்யப்பட்டது என்று கூற விரும்புகிறேன்.

இந்தத் திருத்தம் செய்வதற்கு முன்பு, ஒரு குழு அமைக்கப்பட்டது. நாட்டின் ஒருமைப்பாடு உணர்ச்சியை எவ்வாறு பாதுகாப்பது, எவ்வாறு வளர்ப்பது,

அதற்கு என்னென்ன செய்வது என்பதற்காக அக் குழு அமைக்கப்பட்டு ஆராய்ந்துகொண்டு வந்தது. நெருக்கடி நிலை ஏற்பட்டதும், மேற்கொண்டு இந்தக் குழு பணியாற்ற வேண்டிய அவசியமில்லை, ஆனால் உடனடியாக இந்தத் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு சிபாரிசு செய்தது. அந்தச் சிபாரிசின்படிதான் பார்லிமெண்டில் இதற்கான திருத்த மசோதா கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## திருத்தம் என்ன ?

சாதாரணமாக, எந்தப் பொறுப்புள்ள பதவியை வகிக்கிற அதிகாரியாக இருந்தாலும், நீதிபதிகளாக யிருந்தாலும், மத்திய ஆட்சி அமைச்சர்களாக இருந் தாலும், மாநில ஆட்சி அமைச்சர்களாக இருந்தா லும், பார்லிமெண்ட் உறுப்பினர்களாக இருந்தாலும் மாநில சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், அவர்கள் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வது என் பது தொன்றுதொட்டு நடைபெறுகிற விஷயம். அப்பிரமாணத்தில் 'சுயாதிபத்யம், பிரதேச ஐக்கியம்' என்பதைப் பற்றி இதுவரை குறிப்பிடவில்லை. இதற்கு முன் எடுத்துக் கொண்ட விசுவாசப் பிரமாணத்தில் அது இல்லை, அதை மாற்றியமைக்க வேண்டுமென்று ஒரு திருத்தம் செய்யப்பட்டது. சட்டமன்றம், பாராளு மன்றம் இவற்றிற்கு நிற்கிறவர்களும் இந்த உறுதி மொழியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

## விபரீத விளக்கம்

நான் தாழ்மையோடு கூறிக் கொள்வேன், ஒரு விசித்திரமான கருத்து இருக்கிறதென்று. ஜனநாயகத் திற்கு ஒரு விபரீதமான விளக்கம் தரப்படுகிறது.

நாட்டைத் துண்டாட நாங்கள் மக்களை கேட்கிறோம், அதற்காக வோட்டு கேட்கிறோம், பிரசாரம் செய்கிறோம் என்று சிலர் சொன்னால், இன்னொருவர் வருவார், முன்பு ஆங்கிலேயன் இருந்தான் மறுபடியும் ஆங்கிலேயனை அழைக்க வேண்டுமென்று பிரசாரம் செய்கிறோம், வோட்டு கேட்கிறோம் என்று கூறுவார். இன்னொருவர் பிரஞ்சுக்காரன் வரவேண்டும், கோவாவிலிருந்து போய்விட்ட போர்ச்சுக்கீசியர் வரவேண்டும், அதற்காக மக்களிடம் வோட்டு கேட்கிறோம் பிரசாரம் செய்கிறோம், அதுதான் ஜனநாயகம் என்று கூறுவார். அதுவல்ல ஜனநாயகம். எந்த நாடும் அதை ஏற்றுக் கொள்ளாது.

**அமெரிக்காவில் நடந்தது !**

அமெரிக்காவில் அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கிறது. இன்று நாம் பேசும் விஷயத்தை 100 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு தீர்த்துக் கட்டிவிட்டார்கள். கடைசிப் போர் 1869 ஜூனில் நடந்தது, அது வெற்றிகரமாக முடிந்தது. அப்போது அப்ரகாம் லிங்கன், ஓர் உலகப் பிரகடனம் செய்து அதைத் தீர்த்துக் கட்டிவிட்டார். புதிதாக ஏதாவது நாடு சேரலாமே தவிர இருக்கிற மாகாணம் வேறுபட்டுப் போகக் கூடாது என்று முடிவு செய்து விட்டார்கள். எத்தனையோ அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம், ஒரு மாநிலத்திற்கும், மத்திய ஆட்சிக்கும். நீக்ரோ விஷயத்தில் ஒரு மாநிலத்திற்கும் மத்திய ஆட்சிக்கும் அபிப்பிராயபேதம் இருக்கிறது. மற்ற எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் மத்திய ஆட்சியை விட்டுப் போகிறோம் என்று சொல்ல முடியாது. மத்திய ஆட்சிக்கு எங்கும் அதிகாரம் இருக்கிறது என்று, அமைதியை நிலைநாட்ட சைனியத்தை அனுப்பி வைத்தார்கள் என்ற நிலைமையை எல்லாம் பார்க்கிறோம்.

அந்தமாதிரி நிலையை அமைக்கிற வகையிலேதான், நம்முடைய அரசியல் சட்டத்திற்கு இந்த அரசியல் சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. தேர் தலுக்கு நிற்கின்றவர்களும் இம்மாதிரி ஓர் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற திருத்தமும் இதிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அபேட்சா பத்திரம் தாக்கல் செய்பவர்களும் இம்மாதிரி உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அத் திருத்தம் கூறுகிறது. இவை அரசியல் அமைப்புச்சட்டத்திற்குச் செய்யப்பட்ட முக்கியமான திருத்தங்கள்.

ஜபர்சன் என்ன சொன்னார்? மாற்றுவதற்கு உரிமை இருக்கிறது என்று சொன்னார். ஆனால் எதை மாற்றியமைத்துக் கொள்வது என்று சொன்னார்? ஜபர்சன், அரசாங்கத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னாரா, அல்லது நாட்டை அழித்துவிடலாம், நாட்டை மறுபடியும் துண்டு போடலாம் என்று சொன்னாரா? இல்லையே!

## காட்டுமிராண்டித்தனம் எது?

அரசாங்கம் வேறு, நாடு வேறு. அரசாங்கத்தை மாற்றியமைப்பதற்கோ, திருத்துவதற்கோ உரிமையுண்டு. அவ்வாறு மாற்றியமைத்திருக்கிறார்கள். நாடு ஒன்று, அரசாங்கம் வேறு ஒன்று. நாட்டைத் துண்டு போடலாம், நாட்டை இன்னொரு அந்நியனுக்கு விட்டு விடலாம் என்று எந்த அரசியல் ஞானியும், எந்தச் சுதந்திர வீரனும் தெரிவிக்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

பிரிவினை பற்றி பேசக்கூடாது என்ற வகையில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டதிலிருந்து இது வேண்டாதது, இது பிற்போக்கான நிலைக்கு அழைத்துச் செல்லக்கூடியது என்று சொன்னார்கள்.

காட்டுமிராண்டித்தனத்திற்கு அழைத்துச் செல்கிறது என்றூர்கள். காட்டுமிராண்டித்தனத்துக்கு அழைத்துச் செல்கிறது என்று எதிர்க்கட்சியினர் சொன்ஞர்கள். ஆகவே அதையே நானும் திருப்பிச் சொல்கிறேன். நாட்டை பிரிக்கக் கூடாது என்று சொல்வது காட்டுமிராண்டித்தனத்திற்கு அழைத்துச் செல்வதா ? நாடு ஒன்ருக இருக்க வேண்டு மென்று சொல்வது காட்டுமிராண்டித்தனத்திற்கு அழைத்துச் செல்வதா ? நாட்டை பிரிக்க வேண்டுமென்று சொல்கிறவர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்வது காட்டுமிராண்டித்தனத்திற்கு அழைத்துக் கொண்டு போவதா ? எங்களுக்குப் புரியவில்லே.

## அந்த மனப்பான்மை

ஆஞல் ஒன்று புரிகிறது. அப்படி வாதாடுகிறவர்களின் மனப்பான்மை புரிகிறது. அது மிகவும் பிற்போக்கான மனப்பான்மை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேச்சு பழைய பல்லவியாகத்தான் இருக்கிறது என்று நான் சொல்வேன். "எதற்கும் நீங்கள் மத்திய அரசாங்கத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிச் சொல்வது கூடத் தவறு. அவர்கள் கொடுத்தால்தான் உங்களுக்கு உண்டு. நீங்கள் அவர்களுக்கு அடிமைகளாக இருக்கிறீர்கள். அவர்களே நாடி இருக்கிறீர்கள். நீங்கள் சுயமாக என்ன செய்கிறீர்கள் ?'' என்று அவர்கள் வாதாடுகிருர்கள். தமது வாதத்திற்கு அவர்கள் பல திருஷ்டாந்தங்களே எடுத்துக் காட்டுகின்றனர். நெய்வேலித் திட்டத்தை ஒரு திருஷ்டாந்தமாகச் சொல்கிருர்கள். நமக்கு வேண்டிய ரசாயன உரத்திற்கு நாம் மத்திய அரசாங்கத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிருர்கள். உணவு மண்டல விஷயத்தில், இந்த ராஜ்யம் தனி உணவு மண்டலமாக ஆகிவிட வேண்டும்

என்று நாம் விரும்பினாலும் மத்திய சர்க்கார் தீர்மானிப்பதற்கிணங்க நாம் நடக்க வேண்டியிருக்கிறது என்கின்றனர்.

## நாடா ? துணைக் கண்டமா ?

ஒரு விஷயத்தை உணர வேண்டும். இந்த வேண்டுகோளை மிகத் தாழ்மையுடன் விடுக்கிறேன். நான் கூற விருக்கும் விஷயம் இந்தப் பிரச்சினையுடன் சம்பந்தமுள்ளதாக இருக்கிறது. நான் கூறவிருக்கும் விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டதாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபிப்பிராயத்தை வேறு யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். சிற்சில விஷயங்களில் எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து கொள்வார்கள். காங்கிரஸ்கூட பிறருடன் சேர்ந்து கொள்கிறது என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் நான் குறிப்பிடவிருக்கும் விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபிப்பிராயத்தை வேறு எந்தக் கட்சியும் ஒப்புக்கொள்ளாது—கண்டிப்பாக மறுக்கும்—என்பதில் ஐயமில்லை.

நான் குறிப்பிடும் பிரச்சினை, நமது ராஜ்யம்—தமிழ்நாடு—தனி அரசு புரிய வேண்டுமா அல்லது இது இந்தியா தேசத்தின் ஒரு பாகமாக இருக்கவேண்டுமா என்பதுதான். இந்தியா ஒரு நாடா அல்லது துணைக் கண்டமா என்பதுதான் இந்தப் பிரச்சினை. இப்போது இது இந்திய யூனியனாக இருக்கிறது. இந்தியாவை பாரத நாடு என்று சொல்கிறார்கள். இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றோம். இந்த இந்தியாவில் பல ராஜ்யங்கள் இருக்கின்றன. இதற்கேற்ற அரசியலமைப்புச் சட்டத்தையும் வகுத்திருக்கிறோம்.

## நமது அரசியலமைப்பு

நமது அரசியல் சட்டத்தை அமைத்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் மட்டும் அல்ல. சட்ட நிபுணர்கள், ஜூரிஸ்டுகள், ராஜ்யங்களின் பிரதிநிதிகள் ஆகிய எல்லோருமாகச் சேர்ந்து அதை அமைத்தார்கள். அதில், இன்னின்ன அதிகாரங்கள், இன்னின்ன அலுவல்கள் மத்திய அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும், இன்னின்ன அதிகாரங்கள், இன்னின்ன அலுவல்கள் ராஜ்ய அரசாங்கங்களுக்கு இருக்க வேண்டும் என்று வகுத்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான் இன்றைக்கு அரசாங்கம் நடக்கிறது.

ஆகையினாலே ராஜ்ய அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும், தொடர்பு இல்லாமல் இருக்க முடியாது. அரசியல் அமைப்புச் சட்டப்படி சிற்சில அதிகாரங்கள் மத்திய சர்க்காருக்கு இருக்கிறது என்றால், அதற்கேற்றவாறு மத்திய அரசாங்கத்தினுடைய உடன்பாடு, மத்திய அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு, மத்திய அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் கூட அவசியம் வேண்டியிருக்கிறது. இதைத்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதைத் தவிர நமக்குள்ள அதிகாரத்தை விட்டுக்கொடுப்பது என்பதோ, நாங்கள் போய் அவர்களுக்கு அடிமையாக இருப்பது போன்ற விஷயமோ ஒன்றுமில்லை. அதற்கு இடமே இல்லை.

## தவறான பிரமை

சிலருக்கு ஒரு பிரமை இருக்கிறது. எதற்கும் மத்திய அரசாங்கத்தைக் கேட்கிறார்கள். மத்திய அரசாங்கம் நம் தலையிலே சுமத்துகிறார்கள், திட்டத்தை மத்திய அரசாங்கம் போடுகிறார்கள், திட்டக் குழு சொல்லுகிறது, நாங்கள் சுயமாக ஒன்றும்

செய்வதற்கில்லை, தனியாகச் சிந்திப்பதற்கு இல்லை, முடிவு செய்வதற்கில்லை என்ற பிரமை சிலருக்கு இருக்கிறது. அது முற்றிலும் தவறு என்றுதான் நான் சொல்லுவேன்.

திட்டம் தயாரிப்பது என்றால், அகில இந்திய ரீதியிலே தயாரிக்கப்படுகிறது. இந்த ராஜ்யத்திற்கு எந்தத் திட்டம் வேண்டுமென்பதை நாம் சொல்லுகிறோம். அதைத்தான் வைத்துக் கொள்ள வேண்டும், இதைத்தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று யாரும் எதையும் நம் ராஜ்யத்தின்மீது சுமத்த முடியாது. நாங்கள் எல்லோரும் கலந்து ஆலோசிக்கிறோம். இந்த ராஜ்யத்தின் நன்மையில் முதல் கவனம், இந்திய யூனியன் நன்மையிலும் கவனம், இவை இரண்டையும் வைத்துக் கொண்டுதான் திட்டம் உருவாக்கப்படுகிறது, திட்டம் நிறைவேற்றப்படுகிறது, நிர்வாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம்.

சிலருக்கு மாறுபட்ட அபிப்பிராயம் இருந்தால், இந்தியயூனியனில் நம்பிக்கை இல்லை என்பவர்களுக்கு இதைப் புரிந்து கொள்ள முடியாது. அவர்கள் வேறு வகையிலேதான் புரிந்து கொள்ளுவார்கள். வேறு ஒரு கோணத்திலிருந்து அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அதற்குமேல் நான் ஒன்றும் கூறுவதற்கு இல்லை.

## சுதந்திரதினமும் காங்கிரசும்

அதே மாதிரிதான் சில ஆண்டுகளுக்கு முன்பு நாம் அரும்பாடுபட்டு நமக்குச் சுதந்திரம் பெற்றோம். சுதந்திர தினத்தை ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம். எந்த நாடும் கொண்டாடுகிறது. சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகளுக்குப் பிறகுகூட மிகுந்த குதூகலத்துடன், ஆண்டுதோறும் விமரிசையாகக்

கொண்டாடப்படுகிறது. எல்லா நாடுகளும் சுதந்திர தினத்தைக் கொண்டாடி வருகின்றன. ஆனால் இங்கு ஒரு கட்சியினர் சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் ஈடுபடுவதில்லை. ஏன் என்று கேட்பவர்களுக்கு அவர்கள் ஒரு சமாதானம் சொல்லுகிறார்கள். 'சுதந்திர தினம் கொண்டாடுவதில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்கிறார்கள், ஆகவே சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் நாங்கள் கலந்து கொள்ளத் தயாராக இல்லை' என்று சொல்லுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள்தான் பாடுபட்டுச் சுதந்திரம் பெற்றார்கள் என்பது மறுக்க முடியாதது. அதனால், அத்தகைய சுதந்திரத்தில் நம்பிக்கை இல்லை என்ற மனப்பான்மை சிலருக்கு ஏற்பட்டு விடுகிறது.

காங்கிரஸ்காரர்கள் இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சிக்காக அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மக்கள், காங்கிரஸ்காரர்கள்தான் சுதந்திரத்தைத் தங்களுக்கு வாங்கித் தந்தவர்கள் என்று நினைக்கலாம். அதற்கு நாங்கள் என்ன செய்வது ?

**சட்டம் இன்றியே...**

ஜனநாயகத்திற்குச் சமாதி கட்டுவது என்றெல்லாம் பேசுகிறார்கள். வாதத்தில் அலங்காரமாகப் பேச வேண்டுமென்ற வகையில் பேசுகிறார்கள். பழிவாங்குவது என்கிறார்கள். யார், யாரைப் பழிவாங்குவது? ஆனால் நான் ஒன்றை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தைப் பொறுத்தமட்டில், இந்த நாட்டுப் பிரிவினைப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், இதை வைத்து தி. மு. க. விற்கு ஒரு பாதகம் ஏற்படுத்த வேண்டும், தி. மு. க. இயங்காமல் செய்ய வேண்டு மென்ற எண்ணம் எங்களுக்குக் கொஞ்சம் கூட இல்லை.

பலமான ஓர் எதிர்க்கட்சி இயங்க வேண்டு மென்பதுதான் எங்கள் ஆவல். அதனுல்தான் பொதுத் தேர்தல் ஆன பிறகு, அன்று முதல் சொல்லி வருகிறேன். இந்தச் சட்டம் தி. மு. க. விற்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல, வேறு மாநிலங்களிலும் பிளவுச் சக்திகள் தலை தூக்கப் பார்க்கின்றன. இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும். இதற்கு இடம் கொடுக்கக்கூடாது. அப்படி இடம் கொடுத்தால் நம் நாடு பலஹீனம் அடைந்து விடும். ஆகவே அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காக இந்த சட்டமே தவிர, தி. மு. க. விற்காக மட்டுமல்ல. இந்த சட்டம் இல்லாமலேயே தி. மு. க. வைச் சமாளிக்க எங்களுக்குத் தெரியும். அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. தி. மு. க. விற்காக சட்டம் என்று நினைக்க வேண்டாம்.

இதை நான் ஏன் திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்கிறேன் என்ருல் ஒரு சில சர்க்கார் ஊழியர்கள் கூட இத்தகைய பிரிவினைக் கருத்தில், பேச்சில் சம்பந்தம் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## பிரிவினையும் அரசாங்க ஊழியரும்

நாட்டுப் பிரிவினை என்பது அரசியல் துறைக்கே அப்பாற்பட்டது; அது அரசியலுக்கு மட்டுமல்ல, கட்சிக்கும் அப்பாற்பட்டது. ஆகவே, நாட்டுப் பிரிவினை அல்லது நாட்டைத் துண்டு போடுவது அல்லது 'நாட்டுக்கு விடுதலை' பெறுவது, என்று பேசுவதில் அர்த்தமே இல்லை. இப்போது இருக்கிற நாடு என்னமோ விடுதலை பெருதது போலவும், அதற்கு விடுதலை வேண்டுமென்றும் சொல்கிருர்கள். விடுதலை வேண்டுமென்று சொல்லி, நாட்டைத் துண்டிக்க வேண்டும் என்று சொல்கிருர்கள். இப்போது நாடு விடுதலை பெறவில்லையா ?

இந்த நாட்டுக்கு விடுதலை வேண்டுமென்று குறிப்பிடு வது எதைத் தெரிவிக்கிறது என்ருல் இந்த நாட்டை வேருெரு அந்நியனுக்குக் காட்டிக் கொடுப்பது என்று தான் அர்த்தம். அது அரசியலுக்கு அப்பாற்பட்டது. கட்சிக்கு அப்பாற்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நாட்டைத் துண்டிக்க வேண்டும், பிரிக்க வேண்டும் என்று சொல்வதை—சொல்லிவந்ததை—ஒப்புக் கொள்ள முடியாது, அனுமதிக்கவும் கூடாது.

நான் சொல்வதெல்லாம், சர்க்கார் உத்தியோகஸ் தர்களைப் பொறுத்த மட்டில், இது அரசியலுக்கு அப் பாற்பட்டது என்பதுதான். ஆனல் அதே அரசாங்க உத்தியோகஸ்தர்கள் "நாட்டைத் துண்டாட வேண்டு மென்று சொல்வது தவறு" என்று சொன்ஞல் அது தவறில்லை. திருப்பிச் சொல்கிறேன். இந்த நாட் டைத் துண்டிக்க வேண்டும், பலஹீனப்படுத்த வேண் டும், விடுதலைப் பெறச் செய்ய வேண்டும் என்கின்ற நடவடிக்கைகளிலே அவர்கள் ஈடுபட்டால், அதற்கு நாங்கள் ஒருக்காலும் இடம் கொடுக்க முடியாது. இதிலே அவர்கள் என்ன ஆத்திரப்பட்டாலும், கவலை யில்லை; அது அரசியலுக்கு அப்பாற்பட்டது.

## தவறு என்பது தவறல்ல

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அரசியலுக்குப் போகக் கூடாது. ஆனல், "இந்த நாடு துண்டிகப்பட வேண்டுமென்று சொல்வது தவறு," என்று அவர்கள் சொல்வதிலே எந்தவிதமான தவறும் இல்லை. மேலும் சொல்கிறேன். நாட்டைத் துண்டு போட வேண்டும் என்று யார், எப்படிச் சொன்ஞலும் ஏற்றுக் கொள்ள முடியாது; அதை அனுமதிக்கவும் முடியாது. யாரோ ஒரு பள்ளிக்கூட ஆசிரியர் நாட்டைத் துண்டு போட வேண்டும் என்று சொன்னதாக ஒரு சமயம் சொன்

ஞர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் ஆசிரியர் வேலைக்குத் தகுதியில்லை; அவர்களுக்கு சர்க்கார் உத்தியோகத்திலும் இடம் இல்லை.

கொடுமை, வறுமை ஆகியவைகளிலிருந்து விடுதலை பெறுவது என்பதெல்லாம் எங்களுக்கும் தெரியும். அதை நாங்கள் செய்து கொண்டுதான் வருகிறோம். ஆனால், இந்த நாட்டைத் துண்டிக்க வேண்டும், அதற்காக விடுதலை வேண்டும் என்று சொல்வதை ஒருக்காலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது; இடம் கொடுக்கவும் முடியாது. அது மக்களின் வாக்கைப் பெற்ற பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி, வேறு எவராக இருந்தாலும் சரி, அதை ஒப்புக் கொள்ளவே முடியாது

## தேசத் துரோகச் செயல்

இந்திய நாடு அடிமைப் பட்டிருந்தது. ஆகவே, விடுதலைப் போராட்டம் நடத்தினோம். அதிலே வெற்றி கண்டோம். சென்ற வெள்ளைக்காரர்களை "இருங்கள், இருங்கள்" என்று சிலர்—'தியாக' பரம்பரையிலே உள்ளவர்கள்—கேட்டுக் கொண்ட போதிலும், வெள்ளைக்காரன் போய்விட்டான். அப்படிப் போனவன் நீங்கள் அரசியல் அமைப்பைச் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லிப் போய்விட்டான். அதற்குப் பிறகு, பல பிரதிநிதிகள் சென்று, யோசித்து, இந்த நாட்டிற்கு அரசியல் அமைப்புச் சட்டம் அமைத்தார்கள்.

நாட்டைத் துண்டிக்க வேண்டும் என்று சொல்வது, அது யார் சொல்வதாக இருந்தாலும், அது இந்த நாட்டுக்கு அவர்கள் செய்யக்கூடிய துரோகம், அநீதியாகும். அப்படி யார் சொல்வதாக இருந்தாலும், அதிலே முக்கியமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருந்தால் அவர்களுக்கு சர்க்காரிலே இடமில்லை. ஆனால்,

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், 'நாட்டைத் துண்டிக்கக் கூடாது' என்று சொன்னால், தவறில்லை. இதை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன்.

## இடம் கொடோம்

பாகிஸ்தான் விஷயத்தில் நாம் தலையிட வேண்டியதில்லை. இப்போது நம் நாட்டைப் பற்றித்தான் நாம் பார்க்கிறோம். அதற்குத்தான் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னேன். பாகிஸ்தானியர் பக்டூனிஸ்தான் கேட்கிறார்கள் என்றால் அது வேறு விஷயம். இந்த நாட்டைப் பொறுத்த வரையில், பிரிவினைக்கு நிச்சயம் இடம் கொடுக்க மாட்டோம். பிரிவினை பற்றி பேசுவது, நாட்டின் ஆதிபத்தியத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பேசுவது தவறு, அப்படி பேசக் கூடாது, அத்தகைய உரிமை இல்லை என்றுதான் இச்சட்டம் கூறுகிறது.

பேச்சு உரிமை பாதிக்கப்படுகிறது என்கிறார்கள். என்ன பாதிக்கப்படுகிறது? பேச்சுரிமை என்றால் எதை வேண்டுமானாலும் பேச உரிமை உண்டா? நம் அரசியல் அமைப்புச் சட்டத்தையே எடுத்துக் கொள்வோம்.

## பண்பற்ற பேச்சுக்கு உரிமையா ?

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 19-வது ஷரத்துக்குத்தான் திருத்தம். அந்த ஷரத்தின் இரண்டாவது பிரிவு என்ன? ஜீவாதார உரிமைகளைக் கட்டுப்படுத்த எந்தெந்த வகையில் சட்டம் செய்யலாம் என்பது அதில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்று, அந்நிய நாடுகளின் நட்புறவைக் காக்க, ஜீவாதார உரிமையைக் கட்டுப்படுத்தலாம் என்பது.

ஆகையால், வெளிநாடுகளைப் பற்றிப் பேச எனக்கு உரிமை யிருக்கிறது என்றுகூறி, எதை வேண்டுமானு லும் பேசமுடியுமா? ஒருவருக்கு அமெரிக்காவைப் பிடிக்கவில்லை, இன்னொருவருக்கு ரஷ்யாவைப் பிடிக்க வில்லை என்று எதை வேண்டுமானாலும் பேசலாமா? நல்லுறவு கொள்வதால், அப்படிப் பேச உரிமை இல் லையா என்று கேட்கலாம். ஆனால் பேச்சில் நாகரீகம், பண்பு என்றிருக்கிறது. பண்பு கெட்டு நடக்க எனக்கு உரிமை யிருக்கிறது என்று சொல்ல முடியுமா? ஒரு வன் பைத்தியக்காரன் இல்லை, புத்தி இருக்கிறது, அப்படி இருந்தும் பண்பு இல்லாமல் நடக்க உரிமை இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

இன்று நமக்கு ஜீவாதாரமான உரிமைகள் அளிக் கப்பட்டிருக்கின்றன. பேச்சுரிமை இருக்கிறது, எழுத் துரிமை இருக்கிறது, கருத்துக்கள் தெரிவிப்பதற்கும் உரிமை இருக்கிறது. உரிமைகள் போய்விடவில்லை. ஆனால், எப்படி வேண்டுமானாலும் எழுதலாம், எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதற்கு எப்போதும் உரிமை கிடையாது. இத்திருத்தம் இல்லாமலேயே அந்த உரிமை இல்லை என்று எடுத்துக் காட்டத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

### யாரைக் கேட்டு சட்டம்?

முன்பே நான் குறிப்பிட்டேன். ஒரு குழு அமைக் கப்பட்டது. ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். அதைப் பாதுகாக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது என்பது பற்றி ஆராய ஒரு குழு அமைத்தார்கள். அக்குழு ஆராய்ந்து வரும்போது, நெருக்கடி நிலை ஏற்பட்ட பிறகு, மேலும் இக்குழு ஆராய வேண்டியதில்லை; ஆனால், இத்திருத்தம் மட் டும் செய்யலாம் என்று ஒரு சிபாரிசு செய்தது. அதை

ஏற்றுக்கொண்டு இது கொண்டு வரப்பட்டது என்று சொன்னேன். இக்குழுத் தலைவர் பற்றியெல்லாம் பேச்சு வந்தது. முன்னால் அப்படிச் சொன்னாரே என்று சொன்னார்கள். தன் அனுபவத்தை வைத்து நாட்டுப் பிரிவினைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று அவர் சொல்கிறார். அவருக்காக நான் சொல்லவில்லை. குழு விற்காக பரிந்து பேசவில்லை. நான் பரிந்து பேச வேண்டிய அவசியமில்லை.

மத்திய அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து பார்லி மெண்டுக்கு வந்து, பலபேருடைய ஆதரவைப் பெற்று பார்லிமெண்ட் சபை ஏற்றுக் கொண்டது. அவர்கள் யார் யாரைக் கேட்டார்கள், யார் யாரைப் பார்த் தார்கள் என்பதில் கருத்துக் கூறமுடியாது. தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் பிரிவினைக்காக வாதாடுகிறவர் கள், அவர்களில் (அப்போது சிறைக்கு) வெளியில் இருந்தவர்களைக் கேட்டு அவர்கள் அபிப்பிராயங் களைத் தெரிந்து கொண்டிருக்கக் கூடாதா என்பதற் குப் பதில் அளிக்க இடமில்லை.

**சூதாடிகள் பட்டியல்...**

எங்களைக் கேட்காமல் ஏன் சட்டம் கொண்டு வந் தீர்கள் என்றுகேட்டால் நான் ஒன்று கூறுவேன், தவறா கக் கருதக்கூடாது. நான் ஏதாவது உபமானம் சொன் னால், அதைத் தவறாக எடுத்துக் கொள்கிறார்கள். உப மானத்திற்காகத்தான் நான் சொல்லுகிறேன். அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. சட்டங்கள் இருக்கின்றன. மக்களை யெல்லாம் கேட்டுத்தான், பாதிக்கப்பட்டவர்களையெல்லாம் கேட்டுத்தான் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். பாதிக்கப்பட்ட வர்களுடையபிரதிநிதிகள் இருக்கிறார்கள், அவர்களைக் கேட்டுத்தான் செய்கிறோம், எந்தச்சட்டத்தையும் அவர் களைக் கேட்டுத்தான் செய்கிறோம்.

ஆனால், சில சட்டங்கள் இருக்கின்றன. குற்றச் சட்டம் இருக்கிறது. சூதாடுவதைத் தடுக்கக்கூடிய சட்டம் இருக்கிறது. இப்பொழுது புதியதாக இல்லை. ஏற்கெனவே அந்தச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஒரு மசோதா கொண்டு வருவதாக இருந்தால், சூதாடுகிறவர்களின் பட்டியலைப் போலீஸ்காரர்களிடம் கேட்டு வாங்கி, அவர்களைக் கேட்டு, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டுத்தான் செய்யவேண்டும் என்று சொல்லுவது நியாயமா? அது அவசியமா?

## விபசாரிகளிடம் யோசனை கேட்பதா?

மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன், தவறுதலாக எடுத்துக் கொள்ளக் கூடாது. விபசாரத் தடுப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் இப்பொழுது அமுலில் இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு நான் ஒரு மசோதா கொண்டு வருகிறேன் என்று சொன்னால்—அந்தச் சட்டத்தை அடிக்கடி திருத்துகிறோம்—அதனால் பாதிக்கப்பட்டவர்களை ஏன நீங்கள் கேட்கவில்லை, எப்படிக் கொண்டு வந்தீர்கள்? என்று சொன்னால், அது நியாயமாகுமா? யாரும் அதை நியாயம் என்று சொல்லமாட்டார்கள். கேட்கத் தான் வேண்டும் என்று யாரும் கூறமாட்டார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்.

## பழிவாங்கும் நோக்கமில்லை

திராவிட முன்னேற்றக் கழகத்தவரைப் பழிவாங்கக்கூடிய அளவுக்கு நாங்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தோம் என்று சொல்கிறார்கள். நான் முன்னமேயே சொன்னேன். அதைத் திருப்பிச் சொல்லுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு. நீங்

கள் பிரிவினையை விட்டுவிடுவதுதான், உண்மையாகவே விட்டு விடுவதுதான் நல்லது என்று தாழ்மையுடன் வற்புறுத்திக் கொண்டு வருகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு நல்லது செய்வதற்குத் தான் இந்தத் திருத்தச் சட்டமே தவிர, அவர்களுக்குக் கெடுதலுக்காக இல்லை. பழிவாங்கும் பிரச்சினை இதில் இல்லவே இல்லை.

மக்களிடையே ஏதோ பிரிவினைக் கருத்து வளர்ந்து கொண்டிருக்கிறது என்று அச்சப்பட்டு இந்தத் திருத்த சட்டத்தை நாங்கள் கொண்டுவந்தோம் என்று சொல்வதற்குக் கொஞ்சம் கூட இடம் இல்லை என்று மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

# 3. காவிரியும் கங்கையும்

இப்போது தி. மு. க. வினர் கொள்கை யளவில் பிரிவினையை விட்டு விட்டார்கள். தங்கள் கொள்கை விதியில் திருத்தம் செய்து விட்டார்கள். அதற்கு முன்பு அவர்கள் எங்களைப் பார்த்து, "நீங்கள் தேர்த லில் இந்தப் பிரிவினைப் பிரச்சினையை மக்களிடையே வையுங்கள், தேர்தலை நடத்துங்கள் என்று நாங்கள் கேட்டோம். அதற்கு விடை அளிக்கவில்லை. இன் னும் பதில் வரவில்லை" என்று சொல்லி வந்தார்கள்.

## அடிப்படைக் கருத்து

இதில் அடிப்படைக் கருத்து ஒன்று சொல்ல விரும்புகிறேன். அடிப்படை உரிமைகளைப் பற்றிப் பேசும்பொழுது அடிப்படையான கருத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அடிப்படையான சில உரிமைகள் உண்டு. ஆனால், அடிப்படையான சில பிரச்சினைகளும் உண்டு.

அரசியல் அமைப்புச் சட்டத்தில், 19-வது பிரிவில் அடிப்படை உரிமைகள் காணப்படுகின்றன. அதற்குக் கீழ் முதலாவது, இரண்டாவது, மூன்ருவது, நான் காவது என்று பல உபபிரிவுகள் இருக்கின்றன. அடிப் படையான சில கருத்துக்களும் உண்டு. அடிப்படை

யான உரிமைகளில் அடிப்படையான பிரச்சினைகளும் உண்டு.

## புரியவில்லை யென்று...

நாட்டைப் பற்றிய பிரச்சினை, நாட்டைப் பிரிப்பதா, பிரிக்காமல் இருப்பதா என்பதற்கு மக்களிடையே வோட்டுக்கேட்டு, தேர்தலில் அதைப் பிரச்சினையாக வைத்து வோட்டுக் கேட்டு வாருங்களேன் என்று சொல்லுவது என்ருல் அது சரியல்ல. அதே மாதிரிதான் நாட்டை மறுபடியும் வேறு ஓர் அன்னியனுக்கு விட்டு விடுவதா, இல்லையா என்பதும். அது அவர்களுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். ஏதாவது ஒரு நாட்டிற்கு உட்பட்டு இருந்தால் நல்லது என்ற எண்ணம் உண்மையாகவே ஒருவருக்கு இருக்குமாளுல், அதை தன்னுடைய அடிப்படையான உரிமையாகக் கொள்ளலாம், அடிப்படையான கருத்தாகக் கொள்ளலாம். அதற்கும் மக்களிடையே ஆதரவு பெறுவதற்கு உரிமை கேட்பது என்பது ஒப்புக் கொள்ளக் கூடியதா என்று கேட்கிறேன்.

சில பேருக்கு நாட்டைப் பிரிப்பது அடிப்படையான பிரச்சினையாக இருக்கலாம். ஆளுல், அதை மக்கள் முன் வைப்பது என்பதை ஒப்புக்கொள்ளக் கூடாது என்று சொல்லும்பொழுது, சில பேருக்கு அது புரியவில்லை. அதை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லையென்று விட்டுத்தர முடியுமா? முடியவே முடியாது.

## எந்த நாடும் ஒப்பாது

இன்னொரு திருஷ்டாந்தமும் கூறுவேன். நாட்டைப் பிரிப்பது என்பது ஒன்று. ஏதோ சுதந்திரம் வந்தது, அந்த அனுபவத்தில் தோன்றியது. வேறு

அன்னியனை, இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாட்டினர் யாரையாவது கூப்பிட்டு, 'நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள், நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் மேலே பார்த்துக் கொள்ளுங்கள், உங்கள் ஆதிபத்தியத்திற்கு உட்பட்டு நாங்கள் நடக்கிறோம்' என்று சொல்லுவது சில பேருடைய அபிப்பிராயமாக வைத்துக் கொள்ளலாம். சரி, அதற்காக வோட்டு எடுத்துப் பாருங்கள், அதற்காக மக்களிடையே பிரசாரம் செய்யலாம் என்று சொன்னால், உலகத்திலே, சுதந்திரத்திலே நம்பிக்கை கொண்ட எந்த நாடும் அதை ஒத்துக் கொள்ளாது. அதே மாதிரிதான் நாட்டுப் பிரிவினையும். நாட்டைச் சேர்ப்பது என்பது வேறு விஷயம்.

## சேர்ந்தபின் பிரிவினை இல்லை

நமது வழிகாட்டி நேருஜி அவர்கள் பிரதம மந்திரி ஆவதற்கு முன்னால் காஷ்மீரில் பேசிய பேச்சை, 1945-ல் பேசிய பேச்சைப் பற்றி சொன்னார்கள். காஷ்மீர் அப்பொழுது இந்திய யூனியனோடு சேர்வதா, இல்லையா என்பதுதான் விஷயம். சேருவதா, இல்லையா என்று சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையெல்லாம் நன்றாக உணர்ந்து, சேருவதற்கு ஒப்புக் கொண்டு சேர்ந்து விட்டார்கள். சேர்ந்து விட்டவர்கள் பிரிகிறதா ?

நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை என்ன ? போக்கு என்ன ? சேர்ந்து விட்ட பிறகு பிரிவது என்பது இல்லை. பிரிவதற்கு மக்களிடையே வோட்டு 'வெகுஜன வாக்கெடுப்பு' என்பது இல்லை, அதை ஒப்புக்கொள்ள முடியாது. மனப்பூர்வமாகச் சேர்ந்து விட்டார்கள். சேர்ந்துவிட்ட பிறகு, பிரிப்பது இல்லை என்பதுதான் கொள்கை. அந்தக் கொள்கையைத்

தான் மத்திய அரசாங்கமும் அனுசரித்துக் கொண்டு வருகிறது, நாமும் அனுசரித்துக்கொண்டு வருகிறோம். உலகமே அதைப் பாராட்டுகிறது.

நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, அன்னிய ஆட்சி நீங்கிய பிறகு, அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றும் பொழுது, சாதாரண மாநிலங்களோடு, 562 சமஸ்தானங்கள் இருந்து வந்தன. காலம் சென்ற ஒப்புயர்வற்ற தலைவர் படேல் அவர்களின் பெருமுயற்சியினால், திறமையினால், ஆற்றலினால், 562 சமஸ்தானங்களும் நமது இந்தியாவுடன் சேர்ந்து, ஒருமைப்பட்ட நாடாக இன்று இந்தியா விளங்குகிறது.

வெள்ளையர்கள் போகும்பொழுது, 'நீங்கள் உங்கள் இஷ்டப்படி ஏதாவது செய்து கொள்ளுங்கள்' என்று சமஸ்தானாதிபதிகளிடம் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். சமஸ்தானாதிபதிகள் ஒவ்வொருவரோடும் பேசி, ஒவ்வொருவரும் இந்திய யூனியனில் இணைவதற்குச் சம்மதித்து, 562 சமஸ்தானங்களும் இந்தியாவோடு இன்று இணைந்திருக்கின்றன. இணைப்பு ஆவது ஒரு விஷயம். பிரிந்து இருப்பவர்கள் சேரலாம். ஒன்று சேர்ந்த பிறகு மறுபடியும் பிரிவதற்கு உரிமை உண்டா என்று கேட்டால், அது தான் 'இல்லை. அதை யாரும் அனுமதிக்க மாட்டார்கள்.

## ரஷ்ய உதாரணம்

இப்பொழுது கூட சோவியத் யூனியன் சட்டத்தில் எந்த மாநிலமும், எந்தக் குடியரசும் பிரிவதற்கு இடம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கு பிரியவேண்டும் என்று யாராவது பேசுகிறார்களா? பிரிய முடியுமா? நான் அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தையெல்லாம் பார்க்கவில்லை.

பிரிவதைப் பற்றி யாராவது பேசுகிருர்களா, பிரிய வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறதா என்று பார்க்கவேண்டும்.

இப்பொழுது இந்தியா ஒரு நாடு என்று அமைக்கப்பட்டிருக்கிறது, பிடிக்கவில்லை; நாங்கள் பிரிந்து போகிரோம், சிறுசிறு நாடுகளாக இருக்கக் கூடாதா என்றெல்லாம் பேசி ஏதேதோ மேற்கோள்களை யெல்லாம் எடுத்துக் காட்டிஞர்கள். நான் ஒரு விளக்கம் கோரினேன். அதற்கு எனக்கு விளக்கம் கிடைக்கவில்லை. ஏன் கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஆந்திரம் ஆகிய பகுதிகளையும் சேர்த்துக் கொள்கிறீர்கள் என்ருல் ஒற்றுமை இருக்கிறது என்கிருர்கள்.

**எத்தனையோ ஒற்றுமை !**

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் அகில இந்தியாவிலும் எத்தனையோ ஒற்றுமை தொன்றுதொட்டு இருக்கிறது. வெள்ளையர் காலத்திலே, அதற்கு முன்பிருந்த ஒரு நிலையிலே, சிதறி இருந்த போதிலும், பலப்பல துண்டுகளாக, பல பிரிவுகளாக இருந்தபோதிலும், வெள்ளைக்காரன் அந்தப் பகுதிகளை யெல்லாம் ஒன்று சேர்த்தான். அதற்கு முன்பே எத்தனையோ இலக்கியங்கள் இருந்திருக்கின்றன. சங்க கால இலக்கியத்தைப் படித்துப் பார்க்கலாம்.

சங்க இலக்கியத்தில் எத்தனையோ ஒருமைப்பாடு காணப்படுகிறது. காவிரியையும் கங்கையையும் வர்ணித்திருக்கிருர்கள். ஆனுல் தேம்சையோ, மிசிசிபியையோ வர்ணிக்கவில்லை. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று பெரியவர்கள் சொன்ஞர்கள். அவர்கள் தெரியாதவர்கள் அல்ல. உலகத்தை நன்ருக உணர்ந்துதான் பாடிஞர்கள். காவிரி, கங்கை இரண்டையும் சேர்த்துப் பாடியிருக்கிருர்கள். பாரத

நாடு, பாரத வர்ஷம் என்ற பெரிய பெயர் இருக்கிறது, அது மாத்திரமல்ல. எத்தனையோ ஒற்றுமை யெல்லாம் இருந்தது.

## தவறான யூகம்

இப்பொழுதும் எத்தனையோ ஒற்றுமை இருக்கிறது. ஆனால், கலாசாரம் என்பது ஒன்று. அதை வேறு வேருகப் பிரிக்க முடியாது. கன்னடத்தையும், தெலுங்கையும், மலையாளத்தையும் சேர்த்துக் கொண்டால், அப்புறம் மொழிப் பிரச்சினை வேறு வருகிறது. ஜப்பான் மாதிரி இருக்க வேண்டும் என்ருல், தமிழ் நாட்டைத் தனியாக வைத்துக் கொள்ளலாமே. இது வரைக்கும் ''தமிழ் நாடு'' என்று சொல்வதற்கே தயக்கம் இருக்கிறதே, ஏன் ? இதிலிருந்து என்ன தெரிகிறது ? ரொம்பவும் சின்னதாகப் போய்விட்டால் கஷ்டமாக இருக்கும் என்ற உணர்ச்சி தி. மு. க. விற்கு இருக்கிறது என்பது தெரிகிறது.

மற்ருென்று சொல்ல விரும்புகிறேன். மேற்கோள் காட்டும் பொழுது, கொஞ்சம் பார்த்துச் சொல்ல வேண்டும். பாகிஸ்தானை மேற்கோளாகக் காட்டிச் சொல்கிருர்கள். சரித்திரம் ரொம்பப் படிக்க வேண்டும். நான் இப்பொழுதெல்லாம் மாணவ, மாணவிகளை, சரித்திரம் நன்கு படிக்க வேண்டு மென்று வற்புறுத்தி வருகிறேன். சரித்திரத்தைப் படித்து, நன்ருக உணர்ந்து கொள்ள வேண்டும். யாரோ ஒரு சிலர் பாகிஸ்தான் வேண்டு மென்று கோரியபோது, அலட்சியமாகத்தான் கேட்டார்கள், பின்னுல் பாகிஸ்தான் வரவில்லையா, என்று சொன்னுர்கள். இதிலிருந்து ஒரு யூகம் செய்கிருர்கள். அதாவது நாடு பிரிந்துவிடும் என்று சொல்லுகிருர்கள்.

**பாக்கிஸ்தான் அனுபவம்**

பாகிஸ்தான் எப்பொழுது வந்தது ? நாம் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்த காலம் அது. எப்படியாவது அன்னியனது ஆட்சி நீங்க வேண்டும் என்ற கவலை அப்பொழுது நமக்கு இருந்தது. ஆகவேதான் காந்தி அடிகள் அதற்கு ஒப்புக் கொண்டார். அதன் விளைவு என்னவாயிற்று ?

இன்றைக்கு நமக்கு அந்த அனுபவம் இருக்கிறதே ! பாகிஸ்தான் பிரிந்து போகட்டும் என்று சொன்னபோது நமக்கு அந்த அனுபவம் இல்லை. ஆனால் இன்றைக்கு அந்த அனுபவம் பரிபூரணமாக இருக்கிறது. அப்படிப் பிரிந்ததனால் எத்தனை உயிர்கள் சேதம் ஆயிற்று ? இன்று அந்த நாட்டிலே மக்கள் ஜனநாயகத்தை ஸ்தாபிக்க முடிந்ததா ? இதுவரையிலும் முடியவில்லை. இதுவரையிலும் ஒரு பொதுத் தேர்தலைக்கூட அவர்களால் நடத்த முடியவில்லை.

நமக்கு அந்த அனுபவம் இருக்கிறது. நாம் நல்ல எண்ணத்தோடு "நீங்கள் வேண்டுமானால் பிரிந்து போகலாம், ஆனாலும் நாம் இருவரும் நல்ல உறவோடு இருப்போம்" என்று பாகப் பிரிவினை செய்துகொண்டோம். இன்றைக்கும் நமக்கு பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் அந்த நல்ல எண்ணம் இருக்கிறது. ஆனால் அவர்களுடைய எண்ணம் எத்தகையது ? அவர்களுடைய எண்ணம் நல்ல எண்ணமாக இல்லாததோடு கூட, இரண்டு நாட்டிற்கும் அது கெடுதலாகத்தான் இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. நல்ல எண்ணம் ஒரு புறம் இல்லாததோடு கூட, இப்படியும் அப்படியுமாகத் தாவுகிறார்கள். அமெரிக்காவோடு ஒப்பந்தம் செய்துகொண்டு ஆயுதங்களைப் பெறுகிறார்கள். இப்பொழுது சீனாவோடு சேர்ந்துகொள்கிறார்கள்.

## அரசியல் சூதாட்டம்

இந்தியாவின் கொள்கை என்ன? நம்முடைய கொள்கை நடுநிலைக் கொள்கைதான். யாருடனும் நாம் ஒப்பந்தம் செய்துகொள்வதில்லை. நடு நிலைமைக் கொள்கையை நாம் அனுஷ்டிக்கிறோம். அதைப் பல நாடுகள் பாராட்டுகின்றன. அந்தக் கொள்கையை அனுசரித்து வருவதோடு கூட, சுயமரியாதையோடு நாம் பிற நாடுகளின் உதவியை நாடுகிறோம். இரு சாராரும் நமக்கு உதவி அளிக்கிறார்கள். பிற நாடு களிலிருந்து உதவியை நாடுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் பாகிஸ்தானின் நிலை எத்தகையது?

இது எல்லாம் அரசியல் சூதாட்டம்தானே என்று சொல்லலாம். பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து தளவாடங்களைப் பெற்றுக் கொண்டது. அதோடு அவர்கள் நின்றார்களா? இன்றைக்குச் சீனாவோடு சேர்ந்துகொண்டு ஏதாவது செய்யலாமா என்று பார்க் கிறார்கள். அந்த அனுபவமும் நமக்கு இப்பொழுது இருக்கிறது. ஒருக்காலும் இந்த நாட்டை இனிமேல் துண்டாக்க முடியாது. அதற்கு மக்கள் கொஞ்சம் கூட இடம் கொடுக்க மாட்டார்கள். இதைப் பற்றி யாருக்கும் கவலை இல்லை.

## பலவீனப்படுத்த விடுவதா?

ஒரு வேளை பிரிவினைத் தடைத் திருத்தச் சட்டம் கொண்டு வராவிட்டால் நாடு துண்டாக்கப்பட்டுவிடும் என்ற அச்சத்தினால் அது கொண்டுவரப்படவில்லை. நாட்டை பலவீனப்படுத்தக் கூடாது. அப்படி பல வீனப்படுத்தக் கூடிய பிரிவினை சக்திகளையும், நாச சக்திகளையும் வளர விடுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்ற சீரிய நோக்கத்துடன்தான் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சட்டம் அவசியம் என்றால், இப்பொழுது இந்தக் கருத்து எங்கும் பரவி வருகிறது என்ற பீதியினால் அல்ல. குற்றத்தைத் தவிப்பதற்குத்தான் சட்டங்கள் செய்கிறோம். சட்டத்தைத் திருத்துகிறோம். அதற்காக உலகமே குற்ற மயமாக இருக்கிறது என்று சொல்ல முடியுமா? ஒருவர், இருவர் குற்றம் செய்கிறார்கள், அதனால் என்ன குடி மூழ்கிப் போய்விட்டது என்று கேட்கலாம். குற்றத்தை வளரவிடக் கூடாது.

சில கதை நூல்களைப் படித்திருக்கிறோம். ஒருவன் வறுமையில் இருந்தால் திருடுவது நியாயம் என்ற கருத்தைக் கொண்டு சில நூல்களை எழுதி இருக்கிறார்கள். சொத்து உள்ளவனிடம் பத்து ரூபாய் திருடுவதாக வைத்துக் கொள்வோம். அதற்காக ஏன் போலீசுக்குப் போகவேண்டும், ஏன் வழக்குப் போட வேண்டும் என்று சொல்வது? ஒரு பெரிய குற்றம் செய்யப்பட்டது என்பதற்காக அல்ல. ஆனால் எந்தக் குற்றத்தையும் வளரவிடக் கூடாது- ஏனென்றால் குற்றம் செய்தால் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற எண்ணம் நாட்டிலே வளர்ந்துவிடும்.

**மறக்க முடியாத பாடம்**

எந்த விதத்திலும் நம் நாட்டிலே பலவீனம் ஏற்படக் கூடாது. இதற்கு முன்பு, அதாவது 1961 அக்டோபர் 21-ந் தேதிக்கு முன்பு, நாம் அவ்வளவு தூரம் நினைக்கவில்லை. அதற்கு நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் சீனா நமது சிறந்த நண்பன் என்றுதான் நாம் நினைத்தோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இப்பொழுது அக்கிரமமாக நமது நாட்டை ஆக்கிரமிக்க முற்பட்ட பிறகு நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக

இருக்கவேண்டும் என்பது புலப்பட்டுவிட்டது. நாம் நல்ல ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டு இருக்கிறோம்.

ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டால் அதை மறக்கக் கூடாது. பரீட்சை எழுதியாய் விட்டது, பாஸ் ஆகி விட்டது, ஆகவே படித்த பாடங்களை மறந்து விடலாமே என்று சொல்லலாமா? நம் நாட்டை எந்த விதத்திலும் பலவீனப்படுத்துவதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது என்பதை 1961 அக்டோபர் 21-ந் தேதி கற்றுக்கொண்டோம். அந்தப் பாடத்தை மறக்கவே கூடாது.

## கெடுதலுக்குத் தியாகமா ?

"இந்த நெருக்கடி நிலையிலேகூட நீங்கள் இதைக் கொண்டு வந்து விட்டீர்களே" என்று கேட்கிறார்கள். ஆம், நெருக்கடி நிலைமையை ஒட்டி இது ரொம்பவும் அவசியமாயிற்று. சில சரித்திரங்களையும், வரலாறுகளையும் படித்துவிட்டு அவர்கள் தியாகம் செய்தார்கள், இவர்கள் தியாகம் செய்தார்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? எதற்காகத் தியாகம் செய்தார்கள்? எதற்கும் தியாகம் செய்யலாம். கெடுதலுக்கும் தியாகம் செய்யலாம். எதற்காக உலகம் தியாகிகளை எல்லாம் பாராட்டுகிறது? நாட்டிற்காகப் பாடுபட்டவர்களை, நாட்டிற்காக உயிர் இழந்தவர்களை, நாட்டிற்காகப் பல இன்னல்களுக்கு உள்ளானவர்களை நாம் எல்லோரும் பாராட்டுகிறோம். 342426

நாட்டிற்கு விரோதமான சக்தி எதுவாக இருந்தாலும், கொடுங்கோல் மன்னன் ஆட்சியாக இருந்தாலும், பிற மக்கள் ஆட்சியாக இருந்தாலும், நாட்டை அந்த ஆபத்திலிருந்து விடுவிப்பதற்காக நாம் தியாகம் செய்கிறோம். ஆனால் நாட்டின் தீமைக்காக ஏதாவது செய்தால், அதற்குப் பாராட்டுதல் ஒருக்காலும் இருக்காது, மக்களுடைய ஆதரவும் ஒருக்காலும் இருக்காது.

15 1985

நாட்டைப் பிரிப்பதற்காக அவர்கள் அதைச் செய்தார்கள், இவர்கள் இதைச் செய்தார்கள், நாங்களும் செய்கிறோம், எங்களை ஒடுக்க முடியாது, அசைக்க முடியாது என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம் என்று தாழ்மையுடன் கேட்கிறேன்.

## அச்சம் இல்லை

அதை எல்லாம் வைத்துக் கொண்டு, இந்தப் பிரச்சினையை ஒப்பிட்டுப்பார்க்க முடியாது. இது நாட்டின் அடிப்படையான விஷயம், நாட்டின் பாதுகாப்பு விஷயம். இப்பொழுது நாட்டைப் பிரிப்பது பற்றி பேசக்கூடாது என்ற வகையிலே அதற்கு வேண்டிய சட்டத்தை மாநிலங்கள் செய்வதற்கு உரிமை அளிக்கும் வகையிலே நமது அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது.

''நீங்கள் இந்தச் சட்டத்தைச் செய்தீர்கள், இது ஜனநாயகத்திற்கு விரோதமானது, பேச்சு உரிமையைக் கூடப் பறித்து விட்டீர்கள்'' என்று சொன்னால் அதை எந்த நாட்டிலும் ஒப்புக்கொள்ள முடியாது. இது நாட்டிற்கே அடிப்படையான விஷயம். திராவிட நாட்டைத்தான் நாங்கள் விரும்புகிறோம். அதற்காகப் பாடுபடுவோம் என்றெல்லாம் சொன்னார்கள். முன்பு சொன்னார்கள். அப்படி திராவிட நாட்டைப் பிரிப்பதற்குப் பாடுபட்டால், நாட்டிற்கே பேராபத்து விளைவிக்கக் கூடியதாக இருக்கும். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது, எந்தச் சட்டமும் இடம் கொடுக்கக்கூடாது என்ற வகையிலேதான் இந்தத் திருத்தம் செய்யப்பட்டது.

## யாருக்கும் நல்லதல்ல

இப்பொழுது ஏதோ மக்களுடைய அபிப்பிராயம் வேறுவிதம் திரும்பிவிடும், மக்கள் பிரிவினைக்கு

ஆதரவு அளித்து விடுவார்கள் என்று அச்சப்பட்டு, இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று நினைக்கக் கூடாது. முன்பே குறிப்பிட்டேன். அத்தகைய அச்சம் அரசாங்கத்திற்கு இல்லை, காங்கிரசுக்கு இல்லை. பிரிவினைக் கொள்கையை மக்கள் ஏற்பார்கள் என்ற அச்சம் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு சங்கடம் இருக்கலாம். நமக்கு என்று ஏதாவது தனிப்பட்டதாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று இருப்பார்கள். ஆனால், இந்தப் பிரிவினைக் கொள்கையை வைத்துக் கொண்டு அரசியலில் யாரும் வாழ முடியாது. மக்கள் ஆதரவும் கிட்டாது. ஆகையினால், நாங்கள் மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறோம், அந்தக் கொள்கையை விட்டுவிடுங்கள் என்று.

திராவிட முன்னேற்றக் கழகத்தை மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன், அவர்கள் இந்தப் பிரிவினைக் கொள்கையை அடியோடு உண்மையாகவே விட்டு விட வேண்டும். அதுவே அவர்களுக்கும் நலம். இல்லையென்றால், தியாகம் செய்கிறோம், போராட்டம் செய்வோம் என்றால் தோல்வி அடைவார்கள்; மக்கள் இதற்கெல்லாம் இடம் கொடுக்க மாட்டார்கள். ஆகவே, இந்தப் பிரிவினைக் கருத்தை ஏதோ யுத்த நிலை காரணமாக என்று இல்லாமல், விசேஷமாக, நிரந்தரமாக விட்டு விட வேண்டும். இல்லையென்றால் அது அவர்களுக்கே நல்லதல்ல. நாட்டுக்கும் நல்லதல்ல. ஆகவே அந்தக் கருத்தை விட்டுவிட வேண்டும் என்று மறுபடியும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

# 4. தேர்தலும் பதவியும்

கவர்னர் பதவியே தேவையில்லை, வேண்டாத ஒன்று என்பதான கருத்து, நம் மாநிலத்தில் சிலரிடம் இருந்து வருகிறது.

ஏதோ, ஜனநாயக ஆட்சி செயல்பட முடியாமல் இருக்கிற ஒரு நேரததிலே கவர்னர் ஏற்று நடத்தக் கூடிய ஒன்று, அது ஒரு வேலையா, ஒரு பொறுப்பா என்றெல்லாம் கேட்கிருர்கள்.

## முக்கிய பொறுப்பு

அப்படிப்பட்டவர்கள் நமது நாட்டிலே உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தைப் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். மீண்டும் அவர்கள் படிப்பார்கள் என்றும் நம்புகிறேன். அதில் சிறுபான்மையினரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அது முக்கியமானது. இந்த சிறுபான்மையோரின் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பு கவர்னர் அவர்களுக்கு இருக்கிறது. அது மாத்திரமல்ல. இன்னும் சர்வீஸ் இருக்கிறது, உத்தியோகஸ்தர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடத்திலே இருக்கிறது. ஆகவே, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை மந்திரிசபை பார்த்துக்

கொள்ளும். அதற்கு கவர்னர் தேவையில்லை என்று சொல்வது பொருந்தாது.

## ஆடம்பரச் செலவா ?

ஜனநாயக முறையிலே ஆட்சி நடத்தும் பொறுப்பு மட்டும் கவர்னர் அவர்களுக்கு இல்லை. இதைத் தவிர, அவருக்குப் பல வேலைகள் இருக்கின்றன. அதற்காகத்தான் கவர்னர் பதவி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால், அதிலே நிர்வாக அலுவலகங்களின் செலவுகள் முன்பெல்லாம் இருந்ததைவிட, இப்போது எவ்வளவோ குறைக்கப்பட்டிருக்கின்றன. கவர்னர் மாளிகை முன்பு மவுண்ட் ரோட்டில் இருந்தது, கிண்டியிலும் இருந்தது இப்போது ஜனநாயக ஆட்சியில் மவுண்ரோட்டிலே உள்ளதைக் கொடுத்துவிட்டார்கள். பிறகு, கிண்டியிலே இருக்கிறதிலேகூட 400 ஏக்கர் நிலத்தைக்கொடுத்து, அதிலே குழந்தைகள் பூங்கா ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இம்மாதிரி இன்னும் சில செலவுகள் எல்லாம் குறைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், வேறு சிலர் குறிப்பிட்டபடி எத்தனையோ பேர்கள், வெளிநாடுகளிலே எல்லாம் இருந்தும்கூட நம்முடைய தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் வரும்போது, அவர்களை யெல்லாம் நாம் உபசரிக்க வேண்டியதும் அவசியம். இதற்காகத்தான் செலவு செய்யப்படுகிறதே தவிர, இந்தச் செலவுகளை யெல்லாம் ஆடம்பரம், அநியாயம் என்று சொல்வது சரியல்ல என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

## ராஜினமா யோசனை

மந்திரிகள் தேர்தலுக்கு முன்பே ராஜினமா செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கை ரொம்ப நாட்களாக இருந்து வருகிறது. ஒருவர் சொன்னல், அதை மற்ற

வர்களும் சொல்லுகிருர்கள். அது சுதந்திரா கட்சியாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தாராக இருந்தாலும் நான் இதிலே பாகுபாடு ஒன்றும் செய்ய வில்லை.

நம்முடைய நாடு ஒரு ஜனநாயக நாடாக இருக்கிறது. இரண்டாவது, மந்திரிகள் இந்த ஜனநாயகத்தை விட்டுவிட்டு, அவ்வாறு விட்டு விடுகின்ற ஜன நாயகத்தை கவர்னர் அவர்களிடம் ஒப்படைப்பதிலே மட்டும் இவர்கள் நம்பிக்கை கொள்கிருர்கள். தேர்தலுக்கு ஒரு ஆறு மாதத்திற்கு முன்பு ஜனநாயக ஆட்சி கூடாது, அதை வேறு ஒரு ஆட்சிக்கு விட்டு விட வேண்டுமென்று சொல்வது நியாயமாகுமா? இல்லை, இந்த ஆட்சிப் பொறுப்பை கவர்னரிடமும் ஒப்படைக்காமல், பிரதம காரியதரிசி அவர்களிடம் ஒப்படைத்து விட்டு, அதைப்பற்றி யாரும் எந்தக் கேள்வியும் கேட்காமல் இருந்து விடலாம் என்று சொன்ளுல், அதை ஜனநாயகம் என்றுதான் ஏற்றுக் கொள்ள முடியுமா?

**நாட்டின் நன்மைக்காக...**

மற்ரென்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ மந்திரிகள் பதவியில் இருக்கும்போது, அவர்களுக்கு விசேஷமாக சலுகை, விசேஷமான வசதி ஏற்படுகிறது என்று சொன்ஞர்கள். நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். 1937 லே நாம் ஆட்சியிலே இல்லை; வெள்ளைக்காரர்கள் ஆட்சி அப்போது இருந்தது. அப்போது வெள்ளைக்காரர்களுக்கு எதிர்க்கட்சிக் காரர்களின், அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் முன்ஞேர்கள் எல்லாம் அந்த வெள்ளைக் கார ஆட்சிக்குப் பக்கபலமாக இருந்தார்கள்.

முன்பு ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர்கள், நாட்டு விடுதலைக்கு விரோதமாக இருந்தவர்கள், இன்று காங்கிரஸில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைத்தான் நான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன். இன்றைக்கு உண்மையாக நாட்டின் நன்மைக்காக, நாட்டின் விடுதலை முன்னேற்றத்தின் உண்மையான நன்மைக்காக, முன்பு தவறி இருந்தாலும் இன்று மன மாற்றத்துடன் சேருகின்றவர்களைக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

## பரந்த மனப்பான்மை

'காங்கிரஸ் வாக்குரிமை பெற்றுக் கொடுத்தது, காங்கிரசுக்கு வோட்டுப் போடுங்கள்' என்று சொன்னதாகக் குறிப்பிடுகிறார்கள். காங்கிரஸ் போராட்டத்தினால்தான் மக்கள் எல்லோருக்கும் வாக்குரிமை வந்தது என்பதை மறுக்க முடியாது. நான் கேட்கிறேன், நாட்டு விடுதலைக்கு நேர்மாறாக எதிர்த்து நின்றவர்களுக்கா வோட்டுப் போடப் போகிறீர்கள்? என்று காங்கிரஸ்காரர்கள் கேட்டால் தவறு இல்லை.

வாக்குரிமை எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பச்சைத் துரோகியாக இருந்தாலும் சரி, ஒப்பு உயர்வு அற்ற தலைவர் திரு பண்டித நேரு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதே உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு யார் வேண்டுமானாலும் 'சேர வாரீர் ஜகத்தீரே' என்று அழைக்கலாம். எதிர்க் கட்சியில் வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைக்கூட 'பிரிவினையை விட்டுவிடுங்கள், உண்மையாக விட்டுவிடுங்கள், நாட்டிற்கு நலன் வரும் வகையில் ஈடுபடுங்கள்' என்று நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம். ஆகையினால், முன்பு காங்கிரஸில் இல்லாதவர்கள் இன்று காங்கிர

ஸில் இருக்கிருர்கள் என்று சொன்ருல் அதுதான் காங்கிரஸின் ஜனநாயகத்தையும் பரந்தமனப்பான் மையையும் எடுத்துக் காட்டுகிறது.

## தவருன பிரசாரம்

ஏதோ தேர்தலில் பிரசாரம் செய்தார்கள், தவறுதலாகப் பிரசாரம் செய்தார்கள் என்று சொல்கிருர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எத்தகைய பிரசாரம் செய்யப்பட்டது? 'வாக்குரிமை வழங்கியது காங்கிரஸ், காங்கிரஸுக்கு வோட்டு போடுங்கள்' என்பதற்குப் பெரிய ஆட்சேபனை கிளப்பிஞர்கள். அவர்கள் ஒட்டிய சுவரொட்டிகள் எத்தகையது? எத்தகைய படங்கள் போட்டார்கள்? எத்தகைய ரத்தத்தையெல்லாம் எடுத்துக் காட்டிஞர்கள்? எத்தனை நடந்தது? எப்பொழுது சுட்டதைக் காட்டிஞர்கள்? சட்டபூர்வமாகப் பார்த்தால்கூட, ஆட்சேபிக்கக்கூடிய அத்தகைய போஸ்டர்களைப் போட்டார்கள். போட்டுவிட்டு, இன்று 'வாக்குரிமை வழங்கிய காங்கிரஸுக்கு வோட்டுப் போடுங்கள்' என்று சொன்னது பிரமாதமான தவறுதல் என்று எடுத்துச் சொல்லுவது எனக்கு விசித்திரமாக இருக்கிறது.

## பொய் வோட்டுத் தடுப்பு

தேர்தலில் பொய் வோட்டு போடுவது ரொம்ப முக்கியமான பிரச்சினை. உண்மையிலேயே எல்லோரும் அதை அகற்ற வேண்டும் என்று ஒப்புக் கொண்டால், நாம் அதற்குத் தீர்வு காணமுடியும். அது முக்கியமான பிரச்சினை, கஷ்டமான பிரச்சினை. நாம் எல்லோரும் சேர்ந்து பொய் வோட்டுப் போடுவதில்லை என்று உண்மையான முடிவுசெய்து, அதை உண்மையாக நிறைவேற்றுவதற்கு முற்பட்டால், பொய் வோட்டு போடாமல் தடுப்பதற்கு வகை செய்யலாம்.

தவறுகள் எத்தனையோ நடந்து வருகின்றன, அவற்றிற்குச் சரியான தண்டனை விதிப்பதில்லை என்று சொல்கிறார்கள். தேர்தல் டிரிப்யூனல் இருக்கிறது, 'தேர்தல் சட்டம்' இருக்கிறது. அது அப்போதைக்கு அப்போது திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. அந்தச் சட்டம் பிரயோகிக்கப்படுகிறது. ஆனால், மக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். மக்களுக்கு விழிப்பு வேண்டும். பாராட்டுதல் வேண்டும். எந்தவிதத்திலும் பொய் வோட்டுகள் போடுவதற்கும், தவறுதல்கள் நடப்பதற்கும் இடம் கொடுக்கக்கூடாது என்று பொறுப்புள்ள எல்லா கட்சியினரும் முதலில் நிர்ணயம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு எல்லோரும் அதை ஆதரிப்பார்கள் என்பதில் எனக்கு ஒரு ஐயமும் இல்லை.

## பிரயாணச் செலவு

அமைச்சர்கள் பிரயாணச் செலவு செய்வது பற்றி குறைகூறப்படுகிறது. மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையை ஒட்டியதுதான் சுற்றுப் பிரயாணம் செய்வது என்பது. பிரயாணம் செய்வது என்பது ஏதோ உல்லாசப் பிரயாணம் அல்ல. சென்னையில் இருப்பதைவிட பிரயாணம் செய்வது ரொம்பவும் கஷ்டமான வேலை. அதைப் பார்த்தவர்கள் அதை உணர்ந்திருக்கிறார்கள்.

பொதுவிவகார வேலைக்காக பிரயாணம் போனால், அந்த வகையிலே பிரயாணச் செலவு ஏற்படுகிறது. ஆனால், தங்கள் சொந்த வேலைகளையோ அல்லது கட்சி வேலைகளையோ பார்ப்பதற்குப் பிரயாணம் போனால், அந்த வகையில் செலவு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால், பொது வேலையாகப் போகிறபோது பொது வேலையைச் செய்கிறோம். கட்சி வேலை இருந்தால் கட்சி வேலையைச் செய்கிறோம். அப்படிச் செய்கிற

பொழுது அதோடுகூட ஒரு இடத்தில் கலியாணத்திற்கு வாருங்கள் என்று ஒருவர் கூப்பிட்டாலும் போகிறோம். பொதுக் கூட்டத்தில் பேசுகிறோம்.

**விளக்கும் கடமை**

பொதுக் கூட்டத்தில் பேசுவது கேவலம் கட்சி வேலை என்று சொல்ல முடியாது. பொதுக் கூட்டத்தில் என்ன சொல்லுகிறார்கள்? எதிர்க் கட்சியினர் சென்று பிரசாரம் செய்துவிட்டு வந்து விடுகிறார்கள். அதைப் பற்றி மக்களுக்கு விளக்கம் தேவை. அப்படி விளக்கம் செய்வது மந்திரிகளுடைய கடமையும் பொறுப்பும் ஆகும். எதிர்க்கட்சியினர் இல்லாததையும், பொல்லாததையும் சொல்லிவிட்டு, சுவரொட்டிகளையும் ஒட்டிவிட்டு வந்துவிடுகிறார்கள். இருக்கிற நிலைமையை எடுத்துச் சொல்வது காங்கிரஸ் மந்திரிகளுடைய கடமை. காங்கிரஸ்காரர்களுடைய கடமை மட்டும் அல்ல, மந்திரிகளுடைய கடமை அது. பொதுக் கூட்டத்தில் பேசுவது பொது வேலை அல்ல என்று நான் ஒப்புக்கொள்ள முடியாது. கட்சி வேலையும் இருக்கலாம். பொதுவேலையைப் பார்த்துவிட்டு, கட்சி வேலையைப் பார்ப்பதில் தவறு ஒன்றும் இல்லை. இல்லாவிட்டால் வேறு ஒரு நாள் வருவதாயிருந்தால், முழு நாளும் செலவழித்து வரவேண்டும். அதில் ஒன்றும் தவறுதல் இல்லை.

மந்திரிகள் பிரயாணம் போகும்பொழுது ரயில் செலவு, மற்ற செலவு, அது மாத்திரமல்ல, 'ஸ்டாப்'க்கு வேண்டிய எல்லா செலவும் சேர்த்துதான் செலவு. தவிர்க்கக்கூடாத செலவு அது என்று நான் சொல்லுகிறேன். மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையை அனுசரித்து கடமையின் நிமித்தம் செய்யப்படுகிற செலவு அது. அனுவசியமான செலவு ஒன்றுமில்லை, ஆடம்பரமான செலவு ஒன்றுமில்லை. இதையெல்லாம்

லட்ச ருபாய், அது இது என்று கணக்குப் போடுவதில் பிரயோசனம் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### தேர்தல் கூட்டம்

தேர்தல்களில் அமைச்சர்கள் பேசக்கூடாது என்றும் சொல்லுகிருர்கள். அது வேறு பிரச்சினை. அது எதிர்க்கட்சியினுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். ஜனநாயக முறையில் நடக்கும்போது இதையெல்லாம் பார்க்க முடியாது. ஜனநாயக நாடுகளில், மற்ற நாடுகளில் பார்த்தால் இது நன்ருகத் தெரியவரும். ஆனுல் ஒன்று மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி போகும்போது அமைச்சர்கள் பொதுச் செலவில் போகிருர்களா என்றுதான் பார்த்துக் கொள்ளவேண்டும். நிச்சயமாகச் சொல்லலாம், அமைச்சர்கள் பொதுச் செலவில் போவதில்லை. சர்க்காருடைய வாகனங்களில்கூட அவர்கள் வருவது இல்லை. தேர்தல் கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது சர்க்கார் வாகனங்களிலும் வருவதில்லை; பொதுச் செலவிலும் வருவதில்லை. இது கண்டிப்பாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மற்றவர்களுக்கு இருப்பது போன்று தேர்தல் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அமைச்சர்களுக்கும் உரிமை இருக்கிறது. அமைச்சராக ஆகிவிட்டார் என்பதற்காக சாதாரணமாகவுள்ள அவருடைய உரிமையைப் பறிக்க முடியாது. அதனுல் அவருடைய உரிமை அதிகப்பட்டு விட்டது என்று கருதக்கூடாது. ஜனநாயக நாட்டில் அதை ஒப்புக் கொள்ளவும் முடியாது. ஆனுல், கவனிக்க வேண்டியதெல்லாம் அந்தக் காலங்களில் கனம் அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்கிருர்களா என்பதைத்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## 5. மதுவிலக்குத் திட்டம்

குடிப்பழக்கம் உலகெங்கும் இருக்கிறது. இத் தீய பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதே பல நாடுகளின் விருப்பம். ஆனால் அங்கெல்லாம் வெற்றி பெருத மதுவிலக்குத் திட்டம் இந்தியாவில்தான், மகாத்மா காந்தியின் தலைமையில், உறுதியோடு ஆரம்பிக்கப்பட்டு இன்று பெரும் அளவு வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

### ஆச்சரியமான பேச்சு

பாமர மக்கள், ஏழை மக்கள் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலேதான் மதுவிலக்குத் திட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஆனால், அதிலே குற்றம் செய்கின்றவர்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராமல் இருந்தாலே நலம் என்று சிலர் கூறுவது ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

"மது விலக்குத் திட்டம் சரிவர நடைபெறவில்லை, அது தொல்லையைத்தான் அளிக்கிறது; போலீஸ்காரர்கள் பிடிக்கிருர்கள்; விலங்கு போடுகிருர்கள்—குற்றம் செய்கின்றவர்களை. இம்மாதிரி தொந்தரவு

ஏற்படுவதால் மதுவிலக்குத் திட்டமே வேண்டாம்'' என்ற முறையில் சிலர் பேசுகிறார்கள்.

## காந்திஜியும் சட்டமும்

மதுவிலக்குத் திட்டத்திற்காகச் சட்டம் செய்யக் கூடாது, ஜனங்களாகவே மனம் மாறி மதுவை ஒழிக்க வேண்டுமென்று காந்தியடிகள் சொன்னதாகவும் சிலர் குறிப்பிடுகிறார்கள். மதுவிலக்குக்காகச் சட்டம் செய்யக்கூடாது என்று காந்தியடிகள் எங்கே கூறினார்கள்?

காந்திஜி வாழ்ந்த காலத்தில் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்தது. அப்பொழுது நடைபெற்ற ராஜ்ய அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் அப்போதைக்கப்போது பல அரசாங்க நிர்வாக விஷயங்களைப் பற்றி காந்தியடிகளிடம் கலந்துகொண்டுதான் முடிவு செய்து வந்தனர். அவைகளை நிறைவேற்றிக் கொண்டும் வந்தார்கள். ஆகவே காந்தியடிகள் சட்டம் வேண்டாமென்று சொல்லவில்லை. சட்டம் வேண்டாம் என்ற அபிப்பிராயம் யாருக்காவது இருந்தால் அதற்குக் காந்தி அடிகளை மேற்கோளாக—தவறுதலாகக்—கூற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## சட்டத்தின் பயன்

மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றப்படுவதனால் மக்களுக்கு மிச்சம் ஏற்பட்டது. முன்பு மதுவினால் சர்க்காருக்கு 16 கோடி ரூபாய் வந்திருந்தால் இப்போது 10 கோடி ரூபாயாவது மக்களிடத்திலே தங்கியிருக்க வேண்டும் என்பது சரியானது. ஆனால் அது மக்களுக்கு மிச்சமாகி என்ன பயன்? அனாவசியமான வழியில் செலவு செய்து விடுகிறார்களே! என்று சிலர் குறிப்பிடுவதை நான் வரவேற்கிறேன். மதுவிலக்

குத் திட்டம் வெறும் ஒழிப்பு இயக்கம் இல்லை. மக்களுடைய வாழ்க்கையை வளர்க்கும் திட்டமும் ஆகும். தங்களிடம் மிச்சப்படுகிற பணத்தை அவர்கள் நல்ல வழியில் உபயோகித்து தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையும் நான் வரவேற்கிறேன்.

அப்படிச் செய்யாமல் அவர்கள் சினிமாவுக்குப் போகிறார்களே என்று சிலர் வருத்தப்படுகின்றனர். சினிமாவுக்குப் போவது அவசியம்தான். வாழ்க்கை என்பது தினந் தினமும் சாப்பிட்டுக் கொண்டிருப்பது மாத்திரம் அல்ல. சாப்பிடுவது மட்டும்தான் வாழ்க்கை என்றால் அதில் சுவை யெதுவும் இருக்காது. மனித வாழ்க்கைக்கு சினிமாவும் ஒரு முக்கியமான சாதனம். ஆனால் எப்படிப்பட்ட சினிமாவுக்குப் போகவேண்டும், எப்படிப்பட்ட சினிமாவுக்குப் போகக்கூடாது என்பதைக் கவனித்துப் போகவேண்டும். கிராம வாழ்க்கைக்கு உகந்த, நல்ல முறையில் ஒழுக்கத்தை சரிப்படுத்தக் கூடிய சினிமாப் படங்களுக்கு போகவேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட வேண்டும். இப்படி அவசியமான செலவுகளைச் செய்து கொள்ளத்தான் வேண்டும்.

## நன்மை விளக்கப் பணி

மற்றொன்று நான் அடிக்கடி வற்புறுத்துவது உண்டு. தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், தொழில் நிர்வாகம் இவைகள், குறிப்பாக இந்த மதுவிலக்குத் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்வேன். மதுவிலக்கினால் ஏற்படக் கூடிய நன்மையை வற்புறுத்தி அவர்கள் இந்தக் குடிப் பழக்கத்திற்கு இரையாகாமல் கவனித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

பிரசாரம் செய்வது அவசியம் என்று சொல்லப் படுகிறது. நான் தெரிவிக்க விரும்புவது என்னவென் ருல், அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், அரசாங் கத்தின் சார்பாகப் பிரசாரம் செய்ய வேண்டிய அவசி யத்தின் காலம் தீர்ந்து விட்டது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

மது விலக்குத் திட்டம் 1937-ம் ஆண்டிலே முதன் முதலாகத் துவக்கப்பட்டது. அப்பொழுதெல்லாம் பிரசாரத்திற்கு மிகுந்த கவனம் அரசாங்கத்தாரால் செலுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது அரசாங்கமே நேரிடையாக பிரசாரம் செய்வதற்கு அவசியம் இல்லை என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. பிரசா ரம் செய்யப்பட்டு விட்டது. குடிப்பது தவறு, குடிப் பது குற்றம் என்பதை எல்லோரும் உணருகிருர்கள். இனி சட்டத்தைச் சரிவர அமுல் நடத்துவதுதான் அரசாங்கத்தினுடைய பொறுப்பு.

### தொழிலாளர் மத்தியில்...

ஆனல், ஓரளவு பிரசாரம் வேண்டி யிருக்கிறது. வேறு வகையிலே வேண்டி யிருக்கிறது. "இம்மாதிரி குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டு அவதிப்பட வேண் டாம்" என்ற பிரசாரம் வேண்டியிருக்கிறது. அந்தப் பிரசாரத்தை பொதுமக்கள் செய்யவேண்டும். பொதுமக்களுடைய பிரதிநிதிகள் இதிலே அக்கறை கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்தில் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். முக்கியமாகத் தொழிலா ளர் தலைவர்களாகவும், தொழிலாளர் பிரதிநிதிகளாக வும் இருப்பவர்கள் இதிலே அக்கறை கொண்டு, சிறந்த முறையிலே பிரசாரம் செய்யவேண்டும். அப்பொழுது தான் மக்கள் இதை நன்குணர்ந்து இவ்வாறு குற்றம் செய்யமாட்டார்கள். இம்மாதிரி குற்றம் செய்யாமல்

அவர்களைத் தடுப்பதற்கான பொறுப்பை உத்தியோகப் பற்றில்லாத மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுதான் இந்தச் சமயத்தில் நான் சொல்ல விரும்புகின்றேன்.

அவ்வாறு பிரசாரத்திலே ஈடுபட்டால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு உதவியாக இருக்கும். இதில் கட்சி வித்தியாசம் ஒன்றும் இல்லை. கட்சி வித்தியாசத்திற்கு வேறு இடம் இருக்கிறது. ஆனால், மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்த வரையில், கட்சி வித்தியாசத்திற்கே இடம் இல்லை. இது போல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து செய்யக் கூடிய காரியங்கள் பல உண்டு. அதைச் செய்யக் கூடும் என்பதை எடுத்துக் காட்டவேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. ஆகவே, எல்லோரும் சேர்ந்து இந்த மதுவிலக்குத் திட்டம் சரிவர நிறைவேற்றப்படுவதற்கு, அதிலும் வெற்றிகரமாக அமுல் நடத்தப்படுவதற்கு வேண்டிய ஆதரவை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

## அறவே அகற்ற...

இன்னும் சிலர் "இந்தச் சட்டத்திலே தண்டனை கொடுப்பது போதாது" என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் "தண்டனை அதிகம்" என்றும் சொல்கிறார்கள். வேறு சிலர் "உற்பத்தி செய்கின்றவர்களுக்கு (கள்ள மது தயாரிப்பவர்கள்) தண்டனையைக் குறைக்கலாம், குடிக்கின்றவர்களுக்குத் தண்டனையை அதிகப்படுத்த வேண்டும்" என்று சொன்னார்கள். "உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிகமாகத் தண்டனை கொடுக்கலாம். ஆனால், குடிக்கின்றவர்களுக்குத் தக்க

தண்டனையைக் குறைக்க வேண்டும்'' என்றுகூடச் சிலர் சொன்னார்கள்.

இதை யெல்லாம் பார்த்து எந்த வகையிலே சட்டத்தை அமுல் நடத்தினால் இந்தக் குற்றங்களை அறவே அகற்ற முடியும் என்பதற்கு சட்டசபை அங்கத்தினர்கள், அரசாங்கம் எல்லோரும் சேர்ந்து, அதற்கு வேண்டிய சட்டத்தை இயற்ற வேண்டியிருக்கிறது.

பிரசாரம் எல்லாம் ஒரு அளவுக்குத்தான் பலனைக் கொடுக்கிறது. எவ்வளவுதான் பிரசாரம் இருந்தாலும் அதற்குமேல் சட்டம் வேண்டியிருக்கிறது. அதிலும் இயற்றப்பட்ட சட்டத்தைச் சிறந்த முறையில் அமுல் செய்வதற்கு அப்போதைக் கப்போது சில திருத்தங்கள் வேண்டியிருக்கிறது. அந்த முறையில்தான் மதுவிலக்குச் சட்டம் திருத்தப் பட்டிருக்கிறது.

## மதுபான பெர்மிட்

மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தும் போது மதுபான பர்மிட் என்ற பெயரில் சிலருக்குக் குடிக்க வசதி அளிப்பது கொஞ்சம் கூட பொருத்தமில்லை என்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்; யார் கேட்டாலும் அவர்களுக்குப் பெர்மிட் கொடுப்பது கிடையாது. வைத்தியர்கள் பார்த்து அவர்கள் உடல் நிலை காரணமாக, அவர்களுக்குப் ''பெர்மிட்'' கொடுக்க வேண்டும் என்று சிபார்சு செய்தால், அந்தச் சிபார்சின் மீதுதான் மதுபான பர்மிட் வழங்கப்படுகிறது. அப்படி வழங்குவதிலே மாதத்திற்கு ஒரு யூனிட் முதற்கொண்டு நான்கு யூனிட் வரையிலே வழங்கப்படுகிறது. இதையும் தவிர்ப்பது என்றால் அதற்கு அரசியல் அமைப்புச்

சட்டமே இடம் கொடுக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வைத்தியம் காரணமாக மது ஓரளவு வேண்டியிருந்தால் அதை நாம் தவிர்ப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்கவில்லை.

சில பெரிய மனிதர்கள் அவர்களுக்கு இருக்கின்ற வசதிகளால், அவர்களுக்கு இருக்கின்ற சூழ்நிலைகளால் குடிக்கின்றார்கள். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. என்னுடைய கவலையெல்லாம் ஏழை மக்களைப் பாதுகாக்கவேண்டும் என்பது தான். அதற்காகப் பெரிய மனிதர்கள் குடிக்கலாம் என்று சொல்லவில்லை. அதற்காக அவர்களுக்கு சலுகை உண்டு என்றும் சொல்லவில்லை.

## வைத்தியப் பரீட்சை

வைத்தியப் பரீட்சையின்பேரில், வைத்திய அதிகாரியின் அத்தாட்சியின் பேரில் ஒருவருக்கு மது, மருந்து என்ற முறையில் வேண்டியிருக்கிறது என்று சொன்னால் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. இது எல்லோருக்கும், பெரிய மனிதர்களாய் இருந்தாலும் சரி, சிறிய மனிதர்களாய் இருந்தாலும் சரி எல்லோருக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, இதனால் பெரிய மனிதர்களுக்கு, குடிப்பதற்கு சலுகை கொடுக்கிறோம் என்று சொல்லுவது சரியல்ல.

மதுபான பர்மிட் வழங்குவதில் ஒரு டாக்டர் பரிசீலனை செய்வதற்குப் பதிலாக ஒரு போர்டு வைத்து, அவர்களைச் சிபார்சு செய்யச் சொல்வது என்றால், அது இன்னும் கொஞ்சம் திருப்திகரமாக இருக்கும் என்ற வகையிலும் சிலர் சொன்னார்கள். ஆனால், பொதுவாக அவர்களும் கருதவில்லை என்று நினைக்கிறேன். நானும் நினைக்கவில்லை—அந்த வகை

யிலே சொல்லுவது சரியல்ல. டாக்டர்களை நம்ப முடியாது என்று சொல்லுவதற்கில்லை. டாக்டர்களை நம்பித்தான் நாம் நம் உடலை அவர்களிடம் ஒப்புவிக்கின்ருேம். கூடியவரை அவர்களும் அவசியத்தை உணர்ந்துதான், அவர்களுடைய பெரும் பொறுப்பை உணர்ந்துதான், இம்மாதிரி சர்டிபிகேட்டுகளை ஜாக்கிரதையாக வழங்குகிருர்கள் என்று நாம் எதிர்பார்க்கிருேம். ஆனல் குறிப்பிட்ட சில விஷயங்களிலே இந்த சர்டிபிகேட் போதவில்லை. திருப்திகரமாக இல்லையென்று ஏற்பட்டால் அப்போதைக்கப் போது ஒரு போர்டு நியமித்து ஒன்றுக்கு மேற்பட்ட டாக்டர்களை வைத்தும் பரிசீலனை செய்யச் சொல்லுகின்ருேம்.

## மிகைப்படுத்தப்பட்ட தோற்றம்

ஏராளமானபேர் திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதாகவும், எல்லோரும் குடிக்கிருர்கள் என்றும், குடிக்காதவர்களே இல்லை என்றும் பேசுகிருர்கள்.

பொதுவாக நமக்கு எல்லாம், ஒரு தீமையைப் பார்த்தாலேயே, உலகம் பூராவும் அந்தத் தீமை மலிந்து கிடப்பதாகத் தோன்றுவது இயற்கை. எங்கோ ஓர் இடத்தில் கொலை நடந்து விட்டது. மறுநாள் பத்திரிகையில் அது கொட்டை எழுத்தில் வந்திருக்கும். அதைப் பார்க்கும்போது உலகமே கொலைமயமாக இருப்பது போன்ற தோற்றம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. அதேபோல், எங்கோ ஒருவர் இருவர் குடிப்பதைப் பார்த்துவிட்டு இந்த ராஜ்யம் பூராவும் எல்லோரும் குடிக்கிருர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுகிருர்கள் என்கிற தோற்றத்தைக் கொண்டு பேசுகிருேம். இது சரியல்ல.

மொத்த ஜனத்தொகையில் மதுவிலக்குக் குற்றம் புரிபவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. என்னுடைய மதிப்பின்படி நூற்றுக்கு எண்பது பேர்களுக்கு மேல் இன்றைய தினம் குடிப் பேயிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்வேன். ஆகவே குற்றங்களை மிகைப்படுத்திச் சொல்ல வேண்டியதில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

## ஒரே நோக்கம்

மதுவிலக்குச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இதுதான் அரசாங்கத்தின் எண்ணமும். மதுவிலக்குக் கமிட்டி ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் தாலுக்காக்களிலும், கிராமங்களிலும் கூட அமைத்துக் கொள்ளலாம். தடை ஒன்றும் இல்லை. இந்தக் கமிட்டிகளில் எல்லாக் கட்சிகளும் இடம் பெற வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆவல். எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும் என்கிற முறையில் எல்லாக் கட்சிக்காரர்களும் இடம் பெற வேண்டும் என்பதுதான் சர்க்கார் எண்ணம்.

ஏழை மக்களைப் பாதுகாக்க வேண்டும், அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்திற்காகத்தான் சர்க்கார் இந்தத் திட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள்.

# 6. கடுமையான நடவடிக்கை

மதுவிலக்குச் சட்டம் முதன் முதலாக 1937-ம் ஆண்டிலே கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் அப்போதைக்கப்போது திருத்தப்பட்டு வருகிறது. அனுபவத்தின் மேல் ஒரு சட்டத்தைத் திருத்துவதிலே ஒன்றும் தவறில்லை.

## கடுமையான பிரிவு

மதுவிலக்குச் சட்டத்தை நன்கு அமுலுக்குக் கொண்டு வரவேண்டும், நன்கு நிறைவேற்றப்பட வேண்டும், அந்தச் சட்டம் நன்கு கையாளப்பட வேண்டுமென்ருல், குற்றங்களுக்கு இடமில்லாமல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ருல், சட்டத்தில் சில கடுமையான பிரிவுகள் இருக்கவேண்டும். குற்றங் களுக்குத் தண்டனை கடுமையாக இருக்கவேண்டும் என்பது நமது அடிப்படையான கருத்து.

எல்லா ராஜ்யங்களிலும் மதுவிலக்கு இல்லையே, மற்ற நாடுகளிலெல்லாம் பார்த்துவிட்டு நிறுத்தி விட்டார்கள், இவர்கள் இங்கு மட்டும் எவ்வாறு நிறை வேற்றப் போகிருர்கள்—என்று சிலருக்குக் கருத்து வேறுபாடு இருக்கிறது, மிதக் குடி பாதகமில்லை,

அதிகக் குடியைத்தான் தடுக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

## பெரிய பிரச்சினை

மதுவிலக்கு இன்றைய தினம் இந்த ராஜ்யத்திலே அமுலில் இருக்கிறது. இது இப்போது நம் அரசியல் அமைப்புச் சட்டத்திலே வழிகாட்டி நெறிகளில் ஒன்று என்றிருக்கிறது. ஆகவே, அப்படி இருப்பதை ஒரு ராஜ்யம் எடுத்துக் கொண்டு நிறைவேற்றிவரும்போது, பின்னால் போவது என்பது நடக்க முடியாத காரியம். நிறைவேற்றுவது சிலருக்கு அசாத்தியமானதாகக் கூடத் தோன்றலாம்.

மதுவிலக்குத் திட்டத்தை நல்ல முறையிலே நடத்தவேண்டும் என்பதுதான் நமது அரசாங்கத்தின் எண்ணம். அதை ரத்து செய்யவேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆனால் இதற்கு ஏன் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும், பிரசாரம் செய்துதான் இதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அதற்கு மேலே போகக்கூடாது என்றும் சொல்லப்படுகிறது. அது சரியல்ல.

இதற்கு ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ரஷ்யாவிலே தோழர் குருஷேவ் அவர்கள் குடி அதிகமாகப் போகிறது, இது ஒரு பெரிய பிரச்சினை ஆக இருக்கிறது, அதைத் தவிர்க்கவேண்டும் என்று கவலையைத் தெரிவித்திருந்ததைப் பத்திரிகையில் பார்த்தேன். ரஷ்யாவில் குடி அதிகமாக இருப்பதினாலே அதை தவிர்க்க முடியாத காரணத்தினால் எத்தனையோ கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதை அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். குருஷேவ் அவர்கள் இந்தமாதிரிச் சொல்லும்பொழுது, குடிப்பது

பஞ்சமாபாதகங்களில் ஒன்று என்ற எண்ணம் கொண்டவர் அல்ல என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ரஷ்யாவில் குடி அதிகமாக இருப்பதைப் பார்த்து, அது விபரீதமாகப் போகிறது, ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது, என்று அவர் சொல்லியிருப்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## குற்றம் குறைந்தாலும்

சில காலமாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதினால் தவறுகள் செய்து வருவது குறைந்து வருகிறது என்பதை நான் நிச்சயமாகச் சொல்லக்கூடும். ஆராய்ந்துதான் இதைச் சொல்லுகிறேன். சென்னை நகரை எடுத்துக் கொண்டால் அதிகமாகக் குறைந்திருக்கிறது. இன்னும் சில ஜில்லாக்களிலேயும் அதிகமாகக் குறைந்திருக்கிறது. இதை நன்றாக உணர்ந்துதான் சொல்லுகிறேன். குறைந்திருக்கிறது என்றால் ஏன் கடுமையான சட்டம் கொண்டு வரவேண்டுமென்று சிலர் கேட்கலாம். அவ்வப்போது கவனித்துக் கொண்டு வருவதனால்தான், நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அதைக் கொஞ்சம் தளர்த்தினால், மேலும் குற்றங்கள் தலை தூக்க ஆரம்பித்துவிடும். அப்படித் தலைதூக்க விடாமல், நிரந்தரமாகக் குறைவதைப் பார்க்கவேண்டும்.

சட்டங்கள் இருந்தாலும் சில குற்றங்கள் நடக்கலாம். ஆனால் அவற்றை மிகைப்படுத்திச் சொல்லக் கூடாது. இப்பொழுது கொலை செய்தால் தூக்குத் தண்டனை கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. அப்படி இருந்தாலும் சில சமயம் கொலை நடந்துதான் வருகிறது. இது குறைந்துவிட்டதனால், இந்தியன் பீனல் கோடிலுள்ள சம்பந்தப்பட்ட செக்ஷனை எடுத்து

விட வேண்டுமென்று யாரும் சொல்லமாட்டார்கள். 100க்கு 75 பங்கு குற்றம் குறைந்திருக்கிறது என்று தாராளமாகச் சொல்லலாம். ஆனல் குற்றங்கள் நடைபெறுவதைத் தவிர்க்கத்தான் வேண்டும். பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அனுபவத்திலே பார்த்ததில், சட்டத்தைக் கடுமையாக ஆக்கவேண்டுமென்பது தெரிந்து திருத்தப்பட்டது.

## குறைந்தபட்ச தண்டனை

இச்சட்டத்தின்கீழ் துன்புறுத்தப்படுவது என்பது எங்கே நடந்தாலும், அதைப் பார்த்த அளவிலே, புகார்கள் வருவது எல்லாம், போலீசார் போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான். இந்த மாதிரியாக அதிகமாக நடவடிக்கை எடுத்து வருகிருர்கள் என்று புகார்கள் வந்தால், அவைகளை விசாரணை செய்து பார்த்தால், 100க்கு 80 வரையில் பாதிக்கப்பட்டவர்கள்தான் அப்படிச் சொல்லுகிருர்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

முன்பு, தண்டனை கொடுப்பதிலே அதிக பட்ச தண்டனை குறிப்பிடப்பட்டு இருந்தது. குறைந்த பட்ச தண்டனை இல்லை. இப்பொழுது குறைந்த பட்ச தண்டனையும் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அனுபவத்திலே பார்த்ததில், குறைந்தபட்ச தண்டனை இல்லை என்பதால், சில இடங்களிலே அதைப் பயன்படுத்தப்பட்டு வந்தது. தண்டனையைக் கேவலப்படுத்தும் முறையிலே மீண்டும் மீண்டும் குற்றத்தைச் செய்கிருர்கள். எனவேதான் குறைந்தபட்ச தண்டனையும் இருக்கவேண்டுமென்று கருதி மதுவிலக்குச் சட்டம் திருத்தப்பட்டது.

## காரிய சாத்தியமா

மதுவிலக்குப் பிரசாரம் எல்லாம் நமக்குப் புதிது அல்ல. நாம் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே காந்திஜி அவர்களின் தலைமையில் மதுவிலக்குத் திட்டத்தை ஒரு நிர்மாணத் திட்டமாகவே ஏற்றுக் கொண்டோம். அதை ஏற்றுக் கொண்டு அஹிம்சா முறையில் பிரசாரத்தில் ஈடுபட்டோம். மறியல் செய்தோம். அதற்காக உரிமை கோரப்பட்டு பெறப் பட்டது. இன்று எதிர்க் கட்சியில் உள்ளவர்களில் சிலர்கூட இந்த சாத்வீக மறியல் இயக்கத்தில் ஈடுபட்டு பல இன்னல்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். பலர் சிறை சென்றார்கள். அப்படிப் பல்லாயிரக் கணக்கானவர்கள் இன்னலுற்றது எதற்காக? சிறந்த பிரசாரங்களை எல்லாம் செய்தது எதற்காக?

என்னுடைய அபிப்பிராயத்தைத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரசாரத்தைக் குறை கூறுவது என்பதாக அல்ல. பிரசாரத்திற்கும் ஓர் அளவு உண்டு. மதுவிலக்குத் திட்டமானது நல்லதா கெட்டதா என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இல்லை. அதுவும் தொன்றுதொட்டு நம் நாட்டில் குடிப் பழக்கத்தை வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறார்கள். காந்தியடிகளின் தலைமையில் நடந்த போராட்டங்களும் இன்னும் மக்கள் மனத்தில் இருந்துகொண்டு தான் இருக்கிறது. இருந்தாலும் சட்டத்தை மீறிக் குற்றம் செய்கின்ற மனப்பான்மை ஒரு சிலருக்கு இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்குத் தண்டனை விதிக்காமல் என்ன செய்வது? சட்டமே வேண்டாம், அரசாங்கமே வேண்டாம், மக்கள் தாங்களே தங்கள் காரியங்களைச் செய்து கொள்வார்கள் என்று சொல்லலாம். அது நல்ல கொள்கைதான். காரியாம்சத்தில் அது சாத்தியமா என்று பார்க்கவேண்டும்.

## வெற்றியா தோல்வியா ?

பொதுவாக மதுவிலக்குத் திட்டமானது வெற்றி பெற்றிருக்கிறது. முன்போல நம் நாட்டில் தெருக்களில் குடித்துவிட்டுப் போடும் சண்டைகள் இல்லை. மக்கள் அமைதியாக வாழ்கிறார்கள். இன்றைய தினம் ஒரு சில இடங்களில் குடிக்கிறவர்கள் இருக்கிறார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் இருக்கிறார்கள் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். இருந்தாலும் முன்பு இருந்த குடிப் பழக்கத்திலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மதுவிலக்குத் திட்டம் தோல்வி அடைந்துவிட்டது என்று சொல்ல முடியாது.

குறைந்தபட்ச தண்டனை விதிக்கிற முறையில் மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்தினால் அது, எந்த விதத்தில் நீதியில் தலையிடுவதாகும் ? சட்டப்படி தண்டனை கொடுக்கப்படுகிறது, அல்லது விடுதலை அளிக்கப்படுகிறது. சட்டம் என்ன சொல்கிறது, சாட்சிகள் என்ன சொல்கிறார்கள் என்பவைகளையெல்லாம் வைத்துக் கொண்டு நீதிமன்றத்தில் பாரபட்சமில்லாமல் தீர்ப்புக் கூறுகிறார்கள்.

## நீதிமன்றப் பொறுப்பு

நீதி மன்றம், நம் சட்டத்தில் இருக்கிறதைப் பற்றித்தான் சொல்லும், அதாவது; சட்டத்தில் என்ன சொல்லப்படுகிறதோ அதுபடிதான் நீதி மன்றம் தீர்ப்புக் கொடுக்கிறது. நாம் இயற்றும் சட்டத்திற்கு அவர்கள் அர்த்தம் சொல்வார்கள். நீ ஏதோ நினைத்து சட்டம் செய்தாய், ஆனால் அதன் அர்த்தம் அதுவல்ல என்று நீதி மன்றம் சொல்லலாம். அதைப் பார்த்து, சட்டத்தைத் திருத்துவதற்குள்ள ஏகபோக உரிமை சட்டசபைக்கு உண்டு. குறைந்தபட்ச தண்டனை

விதிப்பதற்கு என்று சட்டம் செய்தது நீதியில் தலை யிடுவதாகாது. ஒரு சட்டத்தைத் திருத்துவது என்பது நீதியில் தலையிடுவதாகும் என்று சொல்லுவது, தவருனதாகும். அது, சட்டசபையின் நிலையை உணராது பேசுவதாகும்.

சட்டம் இருப்பதை வைத்துத்தான் நீதி மன்றம் தீர்ப்புக் கொடுக்கிறது. அதிக பட்ச தண்டனை என்ன என்று பார்த்துக் கொள்கிறது. அவர்கள் எவ்வளவு வேண்டுமாஞலும் கொடுக்கலாம். ஒரே குற்றம், ஒரே மாதிரி விசாரணை ஆனுல் ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு தண்டனை கொடுக்கிருர், வேறு ஒரு மாஜிஸ்ட்ரேட் வேறு ஒரு தண்டனை கொடுக்கிருர். நான் அவர்களைக் குறைத்துக் கூறவோ அல்லது நீதிபரிபாலனத்தைக் குறைத்துக் கூறவோ இல்லை. சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்க்கிருர்கள். அவர்கள் சரி என்று தோன்றியதைக் கொடுக்கிருர்கள். நிறைய சம்பாதிக்கிறவனுக்கு 10 ரூபாய் அபராதம் போட்டால் அது அவனுக்குப் பெரிதல்ல. மறுபடியும் மறுபடியும் அவன் குற்றம் செய்கிருன். ஆனுல் அதற்காக நீதி பதிகளின் பேரில் குற்றம் சொல்லமுடியாது. அனுபவத்தில் நாம் பார்த்ததில் குறைந்த பட்ச தண்டனை விதிப்பது அவசியம் என்று கருதி இந்தத் திருத்தம் செய்தோம்.

## பின்ஞல் இருப்போர்

பாத்திரங்கள் வைத்துக் கொண்டிருந்தால், சாராயம் காய்ச்சுவதற்கு அல்லது கள் இறக்குவதற்கு அல்ல என்று நிருபிக்கப்பட வேண்டுமென்பது சட்டம். ஏழைகள் இதஞல் பாதிக்கப்படுவார்கள். சமைப்பதற்குக்கூட பாத்திரம் வைத்திருந்தால், அதிகாரிகள் ஏழைகள் மீது பொய் கேஸ் போட்டு, அவர்கள் மேல்

ஆத்திரம் இருந்தால் அவர்களைத் துன்புறுத்துவதற்கு இது ஏதுவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஏழைகள் சமையல் செய்யக்கூடிய பாத்திரங்கள் எத்தகையது என்பதை நாம் எல்லாம் அறியாதவர்கள் அல்ல. ஆனால் சாராயம் காய்ச்சுவதற்கு வேண்டிய பாத்திரங்கள், அதற்கு வேண்டிய பட்டைகள், விவசாயிகள் அல்லாதவர்களின் வீட்டில் அமோனியம் சல்பேட் போன்ற பொருள்கள் வைத்திருந்தால்; இவைகள் இருப்பதாகத் தெரிந்தால், அதற்காக நடவடிக்கை எடுத்தால், இதில் என்ன தவறு இருக்கிறது என்றுதான் எனக்குப் புரியவில்லை.

முக்கியமாக, ஏழைகள் சிலபேர்கள் குடிக்கலாம். ஆனால், இந்தத் திருட்டுத்தனமாகச்சாராயம் காய்ச்சும் விஷயத்தில் ஏழைகளைவிட வசதி படைத்தவர்கள், பணக்காரர்கள், மேலும் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள் அதிகம் ஈடுபடுகிறார்கள். அவர்கள் இந்த ஏழைகளைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஏழைகள் அகப்பட்டுக் கொள்ளட்டும், தாங்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம் ஏழைகளை ஈடுபடுத்திக் கொண்டு அதற்குப் பின்னால் இருக்கிறவர்களைப் பிடிக்க வேண்டும் என்பதுதான். அம்மாதிரிப் பட்ட பணக்காரர்களை, வசதி உள்ளவர்களைக் கண்டு பிடித்து அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம்.

இதனால் நிரபராதிகள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். கோர்ட் இருக்கிறது. நீதி மன்றத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதன் மூலம் நிரபராதிகள்

யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள், என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

## எச்சரிக்கைப் பிரசாரம்

வார்னிஷ், பெய்ண்ட் போன்றவை ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய அளவு ஸ்பிரிட் கொடுக்க வேண்டும். மருந்து வகைகளும், டாக்டர்களது தேவைக்கும் மற்றும் தொழில் துறையிலும் கூட இவைகள் வேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் நன்கு பரிசீலனை செய்து எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. என்றாலும், இதிலே தவறுதல்கள் எவ்வளவோ நடை பெறுகின்றன. இந்த மாதிரி தவறுதல்கள் நடப்பது யாருக்காவது, தெரிய வந்தால், தயங்காமல் விவரங்களை நேரிடையாகத் தெரிவித்தால், அதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதில் தயக்கம் இராது என்று உறுதி சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சிறிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அது பற்றிக் கவலை இல்லை. குற்றம் செய்பவர்கள் யாராயிருந்தாலும், தவறு செய்பவர்கள் யாரா இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் தயங்காது.

ஆகவே, மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிக் குறை கூற வேண்டுமானால் குறை கூறட்டும். அதை வேண்டாம் என்று நான் சொல்லக் கூடாது. நான் சொல்ல மாட்டேன். மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமென்றால், கடுமையான தண்டனைகள் விதிக்கப் பட்டிருப்பதால் மக்கள் ஜாக்கிரதையாக

நடந்து கொள்ளவேண்டு மென்று சொல்லும்படி மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

## தவிர்க்கும் எண்ணம்

ஏதோ பழைய குடிக்கிற பழக்கம் இன்றும் இருக்கிறது. எப்படித் திடீரென்று அதை விட்டுவிடும்படி சொல்லுவது என்றும் சொல்கிறார்கள். குடிப்பது தவறு, குடிக்கக் கூடாது என்று சொல்லிப் பலபேர் அதிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டம் திடீரென்று வந்து விடவில்லை. இருந்தாலும் பிரசாரம் செய்யவேண்டுமென்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். சட்டம் அம்மாதிரி இருக்கிறது. அதில் விதிக்கப்பட்டிருக்கிற கடுமையான தண்டனைக்கு நீங்கள் உட்படக் கூடாது, அதைத் தவிர்க்க வேண்டுமென்ற ஒரு எண்ணத்தை மக்களிடத்திலே, இதனால் பாதிக்கப்படக்கூடியவர்களிடத்திலே, உண்டாக்குவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

# 7. முன்னேற்றச் சின்னம்

கலால் இலாகாவின் கீழ் மதுவிலக்குத் திட்டம் அமுல் நடந்தது. இப்பொழுது போலீசார் நடத்து கிருர்கள்.

மதுவிலக்கு முக்கியமாக கலால் இலாகாவின் கீழ் வந்து மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் செய்யப்படும் ஒரு குற்றம் என்று கருதப்பட்டு அதற்காக அது போலீஸ் இலாகாவுடன் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டமும் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அந்த இலாகா போலீஸ் இலாகாவுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## போலீசிடம் பொறுப்பு

குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கும், குற்றங்கள் நடைபெருமல் பாதுகாப்பதற்கும், குற்றங்களைக் கண்டு பிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் போலீஸ் இலாகா பொறுப்பு ஏற்று இருக்கிறது. இவைகள் அவர்களுடைய பொறுப்

பாகும். அதற்கு ஏற்றவாறுதான் போலீஸ்காரர்கள் மதுவிலக்குத் திட்டத்தையும் அமுல் நடத்தி வருகிறார்கள்.

## அனுபவத்தில் கண்டவழி

மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இந்த போலீசார் வேண்டாம் என்றும், அதற்கு தனியாக ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்றும் சிலர் கூறுகின்றனர். தனியான இயந்திரம் அதற்கு எது என்பது எனக்குப் புரியவில்லை. என்னுடைய அனுபவத்தையும் சொல்லுகிறேன், அபிப்பிராயத்தையும் சொல்லுகிறேன். பெரும்பாலோர் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்றே நினைக்கிறேன்.

நாட்டில், எங்காவது, ஏதாவது குற்றங்கள் நடந்தால் அதைக் கண்டு பிடித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குப் போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அதைப் போலவே மதுவிலக்கு சம்பந்தப்பட்ட குற்றங்களைச் செய்கிறவர்களைக் கண்டு பிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் போலீஸ்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் மதுவிலக்குத் திட்டத்தின்கீழ் வரக்கூடிய குற்றங்களும் மற்ற குற்றங்களைப்போலத்தான். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு போலீஸ்காரர்களைத் தவிர வேறு திறமையான இயந்திரம் இருப்பதற்கு இல்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம், என்னுடைய அனுபவம். மதுவிலக்குத் திட்டத்தைப் போலீசாரைக் கொண்டு அமுல் நடத்துவதுதான் சிறந்த வழி என்று தெரிந்துகொண்டேன். அதையே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**வாகன வசதிகள்**

மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்தும்போது போலீசார் பல குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க வேண்டியதாக இருக்கிறது; மதுவிலக்குத் திட்டத்தைக் கெடுக்க வேண்டுமென்று சிலர் குற்றங்களைச் செய்து வருகிறார்கள். அதை அவர்கள் தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய வறுமையின் காரணமாகச் சிலர் அதை வருமானம் அடையக் கூடிய வகையில் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இவைகளில் சிலஇடங்களில் போலீஸ்காரர்கள் ஈடுபடுகிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டது. அவ்வாறு போலீஸ்காரர்கள் இதை ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு வருமானம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கக்கூடும். ஆனால் போலீஸ்காரர்களுடைய நிலைமையையும் கொஞ்சம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. போலீஸ்காரர்கள் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கப்போகும் போது போலீஸ்காரர்கள் மீது அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. அதனால் போலீஸ்காரர்கள் மீது ஏதாவது குற்றங்களைச் சுமத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். குற்றவாளிகளைப் பிடிக்கச் சென்றால் போதிய அளவு பலன் அடைவது இல்லை.

போலீஸ்காரர்களுக்கு அதிகப்படியான வாகனங்கள் இருக்கின்றன என்றும் அவற்றை அவர்கள் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள் என்றும் சிலர் குற்றம் சாட்டினார்கள். ஆனால் இப்போதைய நிலையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய வாகனங்கள் போதவே போதாது. மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டு பிடிக்க துரிதமாகப் போகவேண்டுமானால் அவர்களுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய வாகனங்கள் போதவே போதாது. துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டு மென்றால் அவர்களிடம் வேண்டிய

வாகனங்கள் இல்லை. சில ஊர்களுக்கு ராத்திரி போக வேண்டியதாக இருக்கிறது. அங்குத் துரிதமாகச் சென்ருல்தான் குற்றங்களைக் கண்டுபிடிக்கலாம். அப்படிச் செல்லும்போது அந்த ஊரில் எல்லோரும் சேர்ந்து போலீஸ்காரர்களைச் சூழ்ந்து கொண்டால் அதைச் சமாளித்துக் கொள்வதற்கு அவர்களிடம் வேண்டிய ஆள் பலம் இல்லை. அங்கே யிருந்து சமாளித்துக் கொண்டு வருவதற்குக் கூட அவர்களிடம் போதிய வாகனங்கள் கிடையாது. எந்த வேலையையும் துரிதமாகச் செய்ய வேண்டுமாளுல் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. வசதிகள் செய்து கொடுக்காமல் இருக்கும்போது அவர்கள்மீது குற்றம் கூறுவதற்கு இல்லை. சில சமயங்களில் அவர்களுடைய உயிருக்கே ஆபத்து வருகிறது. தங்களுடைய உயிரைக்கூடப் பார்க்காமல் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் போகிருர்கள்.

## அவதூறு மனப்பான்மை

சாதாரணமாக குற்றவாளிகள் போலீஸ்காரர்கள் மீது குற்றம் சாட்டுவது போல் மதுவிலக்குக் குற்றவாளிகளும் போலீஸ்காரர்கள் மீது குற்றம் சாட்ட முற்படுகிருர்கள். அதனுல்தான் போலீஸ்காரர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் போகும்போது போலீஸ்காரர்கள்மீது குற்றம் சாட்டுகிருர்கள். இப்படி பல புகார்கள் வருகின்றன. பலவிதமான புகார்கள் போலீசார்மீது வந்திருக்கின்றன. யார் வந்து குற்றம் சொன்னுலும் அதைப் பற்றி விசாரித்து அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதைப் பற்றிய விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனுல் பெரும்பாலும் வருகிற புகார்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படும்போது ஆதாரமற்றவைகளாகத்தான் இருக்கின்றன.

சில சமயங்களில் புகார் செய்கிறவர்களே யார் என்று தெரியாமல் போய்விடுகிறது. மேலும் செய்யப்பட்ட புகாருக்கு ஆதாரம் இல்லை என்றுதான் ஏற்படுகிறது.

ஆனால் சில இடங்களில் ஆதாரம் கிடைத்திருக்கிறது. உண்மை என்று ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரி ஆதாரம் கிடைத்தால் தயங்காமல் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். சில சமயங்களில் போலீஸ்காரர்கள் குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார்கள், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்கள் என்பதன் காரணமாக அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக அவர்கள்மீது அவதூறு சொல்கிற மனப்பான்மை வளர்ந்து வருகிறது. இதை யெல்லாம் போலீசார் சமாளிக்க வேண்டி இருக்கிறது.

## கட்டுப்பாடும் திறமையும்

போலீஸ் வேலை என்பது ஒரு கம்பி மேல் நடப்பது போலாகும். அவர்கள் வேலையைச் சீராகச் செய்து வருகிறார்கள். ஆனால் தவறுதல் செய்யக் கூடியவர்கள் இல்லையென்று நான் சொல்லவில்லை. சிலர் இருக்கலாம். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். ''பெரிய அதிகாரிகள்மீது நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயங்குகிறோம். சிறிய அதிகாரிகள் மீதுதான் எடுத்துக் கொள்ளுகிறோம்'' என்று சிலர் நினைக்கிறார்கள். குற்றம் செய்தவர்களாக இருந்தால் சின்ன அதிகாரிகளாக இருந்தாலும் பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் ஒரேவிதமாகத்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும்கூட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

ஜில்லா அதிகாரிகள் என்ற காரணத்தால் எந்த அதிகாரியையும் விட்டு விடுவதில்லை. ஆனால், கீழே இருக்கிற அதிகாரிகளாக இருந்தாலும் குற்றம் குற்றந் தான். போலீசாருடைய திறமை அவர்களுடைய கட்டுப்பாட்டைப் பொறுத்தது. சின்ன அதிகாரிகள் ஏழைகள், அதிகச் சம்பளம் இல்லை. 2 ரூபாய்தான் வாங்கினார்கள், 50 ரூபாய் வாங்கவில்லை, ஆயிரம் ரூபாய் வாங்கவில்லை. அதனால் பரவாயில்லை என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது தவறு. குற்றம் செய்வதைவிட மோசமானது எதிரடித்துப் பேசுவது; "நீ யார் கேட்பது? நான் என்ன சொல்வது? நான் மேலே போய்ப் பார்த்துக் கொள்ளு கிறேன்" என்று பேசுவதை எங்கும் அனுமதிக்க முடியாது. அதிலும் முக்கியமாகப் போலீசில் அனுமதிக்க முடியாது. அனுமதித்தால் திறமை குறைந்து விடும்.

## பாண்டிச்சேரி நிலைமை

தென்னாற்காடு மாவட்டத்தின் பக்கத்திலே பாண்டிச்சேரி இருக்கிறது என்றும், அந்தப் பாண்டிச்சேரியில் மதுவிலக்கு இல்லை என்றும், அதனால் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்றும், அதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்கள். இதைப் பற்றி அரசாங்கம் கவனித்துக் கொண்டுதான் வருகிறது.

முன்பு பிரெஞ்சு அரசாங்கம் இருந்த காலத்திலே கடிதப் போக்குவரத்து நடந்து வந்தது. இப்பொழுதும் அங்கு உள்ள அரசாங்கத்துக்கும் இந்த அரசாங்கத்துக்கும் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்

றுவதற்கு எவ்வாறு அவர்களுடைய ஒத்துழைப்பை பெறுவது என்பதைப் பற்றி இப்பொழுது தீவிரமாக கவனிக்கப்பட்டு வருகிறது.

## பதனீர் துஷ்பிரயோகம்

முன்பு, கள் இறக்கி வந்தவர்களுக்கு ஒரு தொழில் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காக பதனீர் இறக்க அவர்களுக்கு லைசென்ஸ்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. ஆனுல், பெரும்பான்மையாக வெல்லமோ பதனீரோ உற்பத்தியாவதில்லை. கொடுக் கப்பட்டுள்ள லைசென்ஸ்களின்படி உற்பத்தியாகி இருக்க வேண்டிய வெல்லத்தின் அளவை மதிப்பிட்டு விட்டு, உண்மையாக உற்பத்தியாகி இருப்பதைப் பார்த்தால் உண்மையாக உற்பத்தியாகி யிருப்பது உற்பத்தியாகி யிருக்க வேண்டியதை விட மிகவும் குறைவாக இருந்தது. மீதிப் பதனீர் எல்லாம் தவருன முறையில்தான் உபயோகிக்கப்படுகிறது என்று கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னும் சில இடங் களில் கடைகளிலிருந்து வெல்லத்தை வாங்கிக் கணக் குக் காட்டி விடுகிருர்கள் என்று சொல்லப்படுகிறது. சொசைடிகளில் கூட கடையிலிருந்து வெல்லத்தை வாங்கிக் கணக்குக் காட்டி விடுகிருர்கள் என்று சொல்கிருர்கள். இந்த துஷ்பிரயோகத்தைத் தடுக்க வேண்டும் என்ற கவலை எங்களுக்கு உண்டு. துஷ்பிர யோகங்களைத் தடுதது மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். இதில் மக்களின் ஒத்துழைப்பு தேவை.

## மரமேறிகளுக்கு உதவி

பதனீர் தயாரிக்கும் மரமேறிகளுக்குச் சிறந்த நவீன உபகரணங்களை அளிப்பதற்கான ஆராய்ச்சி

அவசியம். அதைக் கருத்தில் கொண்டு மரமேறி களுக்கு உதவியளிக்க அரசாங்கம் முயற்சித்து வரு கிறது.

மரங்களின் சொந்தக்காரர்கள் லாபத்தில் பெரும் பகுதியைப் பெறுகிறுர்கள் என்றும் பதனி இறக்குப வர்கள் அவ்வளவு பலன் பெறுவதில்லை என்றும் சொல்லப்பட்டது. இதற்குச் சிறந்த பரிகாரம் கூட்டுறவு முறை ஆகும். ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சிறந்த கருவிகளையும் உதவி களையும் மரமேறிகள் பெறமுடியும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் தொழில்களை வெற்றிகரமாக நடத்துவதை நானும் பார்த்திருக்கிறேன். தங்களுக்கு உரிய பலனை அடைவதற்கு மரமேறிகள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து கொள்ளுவதுதான் சிறந்த வழி என்று நான் சொல்லுவேன்.

## பதனீர் பாதுகாப்பு

பதனீரிலிருந்து வெல்லமும் கருப்பட்டியும் காய்ச்சுவதற்கும் சிறந்த சாதனங்களைப் பெறுவதற் கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

பதனீரும், நீராவும் கெடாமல் பாதுகாக்கப்படுவ தற்கும், புளித்துக் கள்ளாக மாருமல் பாதுகாக்கப்படு வதற்கும் என்ன செய்யவேண்டும் என்பதற்கு ஆராய்ச்சிகள் செய்யப்படும். மைசூர் ராஜ்யத்தில் மத்திய அரசாங்கத்தின் உணவு ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அந்த நிலையத்தின் மூலம் ஆராய்ச்சி செய்வது சாத்தியமா என்று யோசிக்கப் பட்டு வருகிறது. இந்த பானங்களை சோடாவிற்குப்

பதிலாக பாட்டிலில் வைத்துப் பாதுகாத்துப் பிறகு உபயோகிப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. கிராம மக்கள் அந்த மாதிரி அவைகளைச் சோடாவிற்குப் பதிலாக உபயோகிக்கலாம் என்று கூறப்பட்டது. இந்தப் பொருள்களைத் துஷ்பிரயோகம் செய்ய முடியாத வகையில் எப்படிச் செய்வது என்று கவனிக்கப்பட்டு வருகிறது. மக்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்வதற்குக் கவனம் செலுத்தி வருகிறோம். ஆனால் இந்தத் தொழில்களில் பானங்களும் மற்ற பொருள்களும் துஷ்பிரயோகம் செய்யப்படாமலிருப்பதற்கான வழிகளைக் கண்டு பிடிப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

## முன்னேற்றச் சின்னம்

மதுவிலக்குச் சட்டம் சில காலமாக எல்லா ஜில்லாக்களிலும் மும்முரமாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது. இதன் விளைவாகச் சில முன்னேற்றச் சின்னங்களைக் காண்கிறோம். எல்லோரும் என்னிடம் வந்து அவைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். இதற்கு முன்பு குறை கூறியவர்களே குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்று என்னிடம் சொல்லியதைக் கேட்டிருக்கிறேன். குற்றங்களை அடியோடு ஒழிப்பதில்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

# 8. குற்றத் தடுப்பு

மக்களுடைய நல்வாழ்க்கைதான் நம்முடைய லட்சியம் என்ருல், அந்த நல்வாழ்க்கைக்குப் பந்தோபஸ்து வேண்டும், பாதுகாப்பு வேண்டும். தொல்லை இல்லாமல் மக்கள் வாழ்வதற்குரிய வகை செய்ய வேண்டும். அதை அளிப்பவர்கள்தான் போலீசார். அதை நன்ருக உணர்ந்திருக்கிருேம்.

ஆனுல் அவ்வாறு மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்போது ஒரு சிலருக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன, தொல்லைகள் ஏற்படுகின்றன, கஷ்டங்கள் கூட ஏற்படுகின்றன. நாமே சில தவறுகளைச் செய்தோமானுல், அவைகளைத் தவிர்க்க போலீஸ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது நமக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணுகிறது.

## முக்கிய கவலை

சில சமயங்களில் நிரபராதிகளின் மீது கூட நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படலாம். அப்போது அந்த நிரபராதிகள் அல்லது அவர்களைக் கவனிப்பவர்கள் போலீஸ்மீது குறை சொல்வது நியாயம். கூடிய வரையில் நிரபராதிகள் யாரும் பாதிக்கப்படாமல்

பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கவலை. அதுதான் போலீசாருடைய கவலையாகக் கூட இருக்கவேண்டும்.

## போலீஸ் தேவையா ?

நாம் அனைவரும் நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறோம். சோஷலிச சமுதாயம் அமைக்க வேண்டும் என்ற லட்சியத்தை வைத்துக்கொண்டு அதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். வெறும் புரட்சி இருந்தால்தான் போலீஸ் வேண்டும். அது இல்லாவிட்டால் போலீஸ் தேவையில்லை என்று நினைப்பது தவறான கருத்து. நாகரிகம் முதிர்ந்த நாடுகளில் கூட, பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளில்கூட அதிகமான அளவில் போலீஸ் இருந்து கொண்டிருக்கிறது.

பல இடங்களிலும் புதிது புதிதாகக் குற்றங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. மேல்நாடுகளில் எல்லாம் புதிய புதிய குற்றங்கள் புரிவதை நாம் பார்க்கிறோம். அவைகள் சினிமாவில் காண்பிக்கப்படுகின்றன. அதைப் பார்த்து - அதைக் காப்பியடித்து நம் நாட்டிலும் எவ்வளவோ குற்றங்கள் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். ஏதோ இங்கிலாந்தில் புதியதாகக் குற்றங்கள் நடப்பதாகப் பத்திரிகையில் பார்க்கிறோம். அதே போன்று ஒன்றிரண்டு குற்றங்கள் இங்கும் நடந்து வருகின்றன. அவ்விதம் எல்லாம் வராமல் இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆவல். அதற்குப் போலீஸ் அவசியம்.

## குற்றத் தடுப்பு

குற்றங்கள் குறைவதும் அதிகப்படுவதும் குறிப்பிட்ட ஒரு காரணத்தால் என்று நினைக்கிறார்கள்.

பொருளாதார நிலையில் உயர்ந்திருக்கிற வேறு சில நாடுகளில்கூட குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. சமீபத்தில் உலகநாடுகள் பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்தேன். அதைப்பார்த்தால் நம்முடைய நாட்டில் குற்றங்கள் ரொம்பக்குறைவு என்று தெரிகிறது. மற்ற நாடுகளைவிட இங்கு குறைவு. ஆனால் கொலையைப் பார்த்தால் நம்முடைய நாடு முதன்மையாக இருக்கிறது. மற்ற நாடுகளில் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. வாழ்க்கைத் தரம் உயர உயரப் புதிது புதிதாகக் குற்றங்களைச் செய்கிறார்கள்.

மதிப்புக்குரிய சில நண்பர்கள், பொறுப்புள்ள பதவிகளில் இருக்கக்கூடிய நண்பர்கள் வேறு சில நாடுகளுக்குப் போய் வந்தார்கள். ரஷ்யா போனவர்கள் கூட, அங்கு மக்கள் புதிது புதிதாகக் குற்றங்களைச் செய்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். அவ்வளவு கடுமையாக ஆட்சி நடத்துகிற இடங்களிலும், பொருளாதார நிலைமையிலும் வாழ்க்கைத் தரத்திலும் முதன்மையாக இருக்கிற இடங்களிலும்கூட குற்றங்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன என்று, அனுதாபத்தோடு, போய்ப் பார்த்து வந்தவர்கள் சொன்னார்கள். வசதியோடு சென்று பார்த்துவிட்டு வந்தவர்கள் என்னிடம் அந்த நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள்.

ஆகையால் இப்போது நாம் குற்றவாளிகளின்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு குற்றங்கள் அதிகமாக வொட்டாமல் தடுக்க வேண்டும். அது நமக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இதற்கெல்லாம் போலீஸ் வேண்டியதாக இருக்கிறது.

## புதுப் புதுக் குற்றங்கள்

நம்மைவிட மிக உயர்ந்தவர்கள் என்று நினைக்கிற இதர நாடுகளைப் பார்த்தால் அங்கே நம் நாட்டைவிட மிக அதிகமாகக் குற்றங்கள் செய்யப்படுகின்றன. அங்கே எல்லாம் போய்விட்டு வந்த பொறுப்புள்ள ஒருவர் சொன்னார், ரஷ்யாவில் புதுப்புதுக் குற்றங்கள் நடக்கின்றன என்று. அதைச் சொல்லக்கூடாது என்பதில் இரகசியம் ஒன்றும் இல்லை. அது வேறு ஒன்றும் இல்லை. மோட்டார் காரை வெளியே விட்டுவிட்டுப் போனால் போதும். வந்து பார்த்தால் கார் போய்விடுகிறது. அங்கே மோட்டாரே போய்விடுகிறது. அம்மாதிரி குற்றங்களைத் தவிர்க்கவேண்டும். அந்த நாடுகளை எல்லாம் பார்த்தால் போலீஸ் அதிகமாகத்தான் வேண்டியிருக்கிறது.

நம் தேசத்திலேயே பம்பாய் நகரத்தை எடுத்துக் கொள்ளலாம். கல்கத்தா நகரத்தை எடுத்துக் கொள்ளலாம். அங்கே இருக்கிற ஜனத்தொகை, அங்கே இருக்கிற போலீஸ், இங்கே இருக்கிற ஜனத்தொகை, இங்கே இருக்கிற போலீஸ் இவற்றின் விகிதாசாரத்தை எடுத்துப் பார்த்தால் நம் ராஜ்யத்தில் குறைவு.

## ஆசைக்காகப் பரீட்சையா ?

போலீஸ் இலாகா இருக்கிறது. அதன் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்கிற ஆசை ஒன்றும் இல்லை. என்னுடைய ஆசை, போலீஸ் இல்லாமலேயே சமாளிக்க முடிந்தால் சமாளிக்கலாம். அந்த இலாகாவைக் குறைக்கலாம். ஆனால் என் ஆசைக்காக இதில் பரீட்சை பார்க்கமுடியாது.

மக்களுக்குப் பாதுகாப்பு முக்கியமானது. மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை மட்டும் உயர்த்திக்

கொண்டே போவதனுல் பயன் இல்லை. மக்கள் நிம்மதி யாக வாழ வகை செய்யவேண்டும். பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டவர்களினுலே அவர்களுக்குத் தீங்கு உண்டாக இடம்இருக்கக்கூடாது. போலீஸ் இல்லாமல் இப்படிப்பட்ட லட்சியத்தோடு அரசாங்கத்தை நடத்த முடியும் என்ருல் அதை வரவேற்கலாம். ஆனுல் அதை நடைமுறைக்கு ஒவ்வாத லட்சியம் என்றுதான் சொல்ல வேண்டும்.

போலீஸ் இலாகாவின் செலவைக் குறைக் கலாம். செலவை அதிகப்படுத்திக் கொள்வதில் பெருமை இல்லை. குறைத்து விட்டால் பெருமைதான். அந்த ஆசை எனக்கு இல்லாமல் இல்லை. ஆனுல் அதில் பரீட்சை பண்ண முடியாது. எந்த அளவு அவசியமாக வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் வைத்திருக் கிருேம்.

## ஊர்தோறும் கேட்பது

நாகரிகம் வளர வளர எவ்வளவோ முன்னேற்றங் கள் ஏற்படுகின்றன. அதோடு வாழ்க்கைத்தரமும் வளர்ச்சி அடைய அடைய உயருகிறது. விவசாய அபிவிருத்தி ஏற்படுகிறது. இவைகள் எல்லாம் இருந் தாலும்கூட, பலர் ஏரிகளை மராமத்து செய்ய வேண் டும் என்றெல்லாம் சொல்லும்போது, கூடவே எங்கள் ஊருக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டும் என்று தான் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். எங்கள் ஊரி லுள்ள அவுட் போஸ்ட்டை போலீஸ் ஸ்டேஷனுக உயர்த்துங்கள் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிருர் கள். அதன்படி பல இடங்களில் கொடுக்கப்பட்டும் வருகின்றன. போலீஸ் ஸ்டேஷன்கள் புதிதாகப் பல இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

## வேண்டாம் என்பதில்லை

போலீஸ்காரர்கள் என்ருல், கையில் தடியை எடுத்துக்கொண்டு, துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, கண்ணீர்ப்புகையை எடுத்துக்கொண்டு ஜனங்களை அடிப்பது, மிரட்டுவது என்பது மாத்திரம் வேலை இல்லை. போலீஸ்காரர்கள் முக்கியமாகச் செய்வது பாதுகாப்பு வேலை. மக்களுடைய நல்வாழ்வுக்குரிய வேலை. அவர்களும் அதை உணரவேண்டும். பொதுமக்களும் சந்தேகம் இல்லாமல் அதை உணரவேண்டும் எனபது தான் அரசாங்கத்தின் கருத்து.

அந்தக் காரணத்தைக் கொண்டு, அங்கங்கே ஒவ்வொரு கிராமத்தை எடுத்துக் கொண்டு போலீஸ்காரர்களே ரோடு போடுவது, இதர காரியங்களைச் செய்வது முதலிய அபிவிருத்தி வேலைகளிலும் ஈடுபடுத்தப்படுகிருர்கள். ஹரிஜனங்களை அவர்கள் ஹிம்சிப்பது இல்லை. ஹரிஜனங்களுக்கு அவர்களே வீடு கட்டியும் தருகிருர்கள். இந்த மாதிரியெல்லாம் கிராம அபிவிருத்தித் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதை மக்கள் பாராட்டுகிருர்கள். அதோடு மட்டுமல்ல. நான் அங்கங்கே போகும்போது அந்தப் போலீஸ்காரர்களை "இந்த ஊரிலேயே எங்களுக்குத் தொண்டு செய்ய நிரந்தரமாக வையுங்கள்" என்றும் கேட்கிருர்கள். அப்படி அவர்கள் பல கிராமங்களில் நல்ல வேலை செய்து வருகிருர்கள்.

பொதுவாக எங்கே போனுலும் யாரும் போலீஸ்காரர்களை வெறுப்பது இல்லை. இங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் வையுங்கள். இங்கே ஒரு அவுட் போஸ்டு ஸ்டேஷனுவது வைக்கவேண்டும், போலீஸ் ஸ்டேஷனுக்கும் இதற்கும் 3 மைல் இருக்கிறது என்பது போல

ஊருக்கு ஊர் கேட்டுக் கொள்கிருர்கள். அன்ருடம் பல மனுக்கள் புது போலீஸ் ஸ்டேஷன் வைக்கவேண்டும் என்று வந்துகொண்டிருக்கிறது. யாரும் வேண்டாம் என்று சொல்கிறதே இல்லே.

## யாருக்குப் பயம்

போலீஸ்காரர்களேக் கண்டு மக்கள் பயப்பட வேண்டாம் என்று நான் சொல்வேன். ஆனுல் அடியோடு பயம் இல்லாமல் போய்விட்டால் எதற்காக போலீஸ்?

நிரபராதிகளுக்குப் பயம் வேண்டாம். குற்றவாளிகளுக்கு அவர்களேப் பற்றி பயம் இருக்கத்தான் வேண்டும். ஒரு தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்புபோல இருக்கவேண்டும். தாயைக்கண்டு குழந்தைக்குப் பயம். அதே சமயம் தாயிடம் பயமின்றி அன்பாகவும் பழகும். அப்படிக் குற்றம் செய்தால் பயம் இருக்கவேண்டும். இல்லாதபோது நிம்மதியாக பயமின்றி இருக்கவேண்டும்.

பயமும் ஓரளவுக்கு வேண்டும். பயம் இல்லே என்ருல் எவ்வாறு போலீசார் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியும்? குற்றம் செய்பவர்களே, தவறுசெய்பவர்களே, துன்புறுத்துபவர்களேத் தவிர்க்க வேண்டுமென்ருல், ஓரளவுக்குப் பயம் வேண்டும். யாருக்குப் பயம் வேண்டும்? குற்றம் செய்பவர்கள், குற்றம் செய்யத் தூண்டுகிறவர்கள், குற்றம் செய்பவர்களே ஆதரிப்பவர்கள் இவர்களுக்குப் பயம் அவசியம் இருக்க வேண்டும்.

## பூஜிபாரம் அவசியம்

பொதுவாக மக்களுக்குப் போலீசாரிடம் பயம் வேண்டியதில்லே. ஆனுல் சிலர், போலீசாரிடத்தில்

பயமே கூடாது என்ற வகையிலே பேசுகின்றனர். அதற்காகப் போலீசார் போட்டுக்கொண்டிருக்கும் உடையைக்கூட மாற்றிவிட வேண்டுமென்று சொன்ஞர்கள். யூனிபாரம் சில துறைகளிலே தொண்டு புரிகிறவர்களுக்கு அவசியம் வேண்டும். சாரணத் தொண்டர்கள்கூட யூனிபாரம் அணிந்து கொள்ளுகிருர்கள்.

வயது வந்தவர்கள் யூனிபாரம் அணிந்துகொண்டால் அவர்கள் சற்று வாலிபர்களாகக் காணப்படுகிருர்கள். அவ்வாறு யூனிபாரம் அணிந்து கொண்டவர்கள் சொல்லுவதை எல்லோரும் கேட்பார்கள், ஒப்புக்கொள்ளுவார்கள். ஆகையால் போலீசாருக்கு அவசியம் யூனிபாரம் வேண்டும். ஏதோ உடைகள் இன்னும் கொஞ்சம் அழகாக இருக்கலாம். இன்னும் சிறந்த வகையிலே உடை அளிக்கலாம் என்று சொன்ஞல், அந்த யோசனையைக் கவனிக்கலாம். இப்பொழுது போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கப்படும் உடை கைத்தறி துணிதான். வேறு எங்கிருந்தோ சீமைத் துணியை கொடுக்கவில்லை, அல்லது மில் துணியைக் கொடுக்கவில்லை.

## அரசியல் லாபம்

போலீசார் நமக்குச் சேவை செய்ய வேண்டியிருக்கிறது. போலீசாருடைய வேலை கஷ்டமான வேலை. அதிலே அவர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன? பாதுகாப்பு வேலையில் ஈடுபட்டிருக்கிற காரணத்திஞல் அதிலே எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. அத்தகைய வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பாராட்டுகள் வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களுக்குச் சங்கடங்களை விளைவிக்காமல் இருக்க வேண்டும். எந்தக் கட்சியாயிருந்தாலும் சங்கடங்கள் கூடாது.

அது மாத்திரமல்ல. ஒரு இடத்தில் கொலை, கொள்ளை, திருட்டு நடந்துவிட்டால், யாராயிருந்தாலும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், இதை விசாரிக்க வேண்டும் என்றும், இதைச் சரியாகப் பரிசீலனை செய்யவில்லை என்றும் சொல்லக்கூடிய உரிமை உண்டு. அதுதான் ஒத்துழைப்பு என்றுகூடச் சொல்வேன். ஆனால் அவர்களோடு வேறு விதத்தில், அரசியலுக்காகத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளப் பார்ப்பது நல்லதல்ல. அது நாட்டுக்கு நல்லதல்ல; அதனால் ஏதோ லாபம் வரும் என்று சிலர் நம்பலாம். ஆனால், நாங்கள் நம்பவில்லை.

# 9. பாதுகாப்புப் பொறுப்பு

சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு போலீஸ் விரோதமாக இருந்தது. அப்படி இருந்தும் நாங்கள் போராட்டம் நடத்தி வெற்றி பெற்ருேம் என்ருல், இப்போது போலீசாரின் உதவி காங்கிரஸ் கட்சிக்கு வேண்டியிருக்கிறதென்று யாராவது சொன்ஞல் அது சரியாகாது. யாராவது தவறுதலாக அம்மாதிரி நினைத்துச் சுருக்கு வழி என்று பார்க்கலாம் என்ருலும் சரியல்ல.

## காங்கிரசுக்கு உகந்ததல்ல

காங்கிரஸ் கட்சிக்கு எந்த முறையிலும் போலீசார் உதவி வேண்டியதில்லை. போலீசார் அவர்களுடைய கடமையைச் செய்ய வேண்டும். போலீசாரைப் பிடித்துத் தங்கள் காரியத்தைச் செய்துகொள்ளவேண்டும் என்பது காங்கிரஸ் கட்சிக்கு உதவியாக ஆகாது. காங்கிரஸ் கட்சி அம்மாதிரி ஈடுபடுவது சரியாகாது. தனிப்பட்டவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக்கூடச் சொல்லுகிறேன். இது காங்கிரஸ் கட்சிக்கு உகந்ததல்ல. அந்தமாதிரிச் செய்துகொண்டிருந்தால் அது நல்லதல்ல என்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் சொல்லிக் கொள்கிறேன்.

### தாட்சண்யம் கூடாது

காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், வேறு எதிர்க் கட்சிகளாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், இல்லையென்றாலும், அவர்கள் தங்களுடைய தாட்சண்யத்தைப் பயன்படுத்தித் தாங்கள் நினைக்கின்றபடி போலீசார் செய்ய வேண்டும் என்று முயற்சி செய்வது தவறு என்று எல்லோருக்கும் சொல்லுகிறேன். எதிர்க்கட்சிகளுக்கு மட்டும் சொல்லவில்லை. எல்லோருக்கும்தான் சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்ஸ்பெக்டர்—ஜெனரல் மூலம் அதிகாரிகளுக்கும் நகர போலீஸ் அதிகாரிகளுக்கும் இதெல்லாம் வற்புறுத்தப்பட்டு வருகிறது. மாதாந்திரமோ அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை சர்க்குலர் அனுப்பப்படுகிறது. அதிலே என்னென்ன கவனிக்க வேண்டும் என்று சொல்லுகிறோமோ அதெல்லாம் சர்க்குலர்களில் போகிறது. சர்க்காரிடத்தில் இருக்கிற குறிப்புக்களை எடுத்துச் சொல்லுகிறேன். இதெல்லாம் பத்திரிகையில் வராது. நாங்கள் கவனித்த குறைபாடுகளைச் சொல்லும்போது, அதை நகல் எடுத்து இன்ஸ்பெக்டர்-ஜெனரல் போலீஸ் அதிகாரிகளுக்கு அப்போதைக்கப்போது அனுப்புகிறார்கள்.

### பொறுப்பு யாருக்கு ?

நான் மற்றொன்றும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். எந்தக் கட்சியாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அல்லது பதவியிலுள்ளவராக இருந்தாலும், அல்லது செல்வாக்கு உள்ளவராக இருந்தாலும், யார் சொன்னாலும், ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்றால் அது அந்தந்த போலீஸ் அதிகாரியினுடைய பொறுப்பு. ஒருவர்

...EMARA P...

சொல்லுகிறார் என்றால், அதற்காகத் தவறுதலாகச் செய்யக் கூடாது. அப்படி ஏதாவது தவறுதலாகச் செய்தாலும், அது அவர்களுடைய பொறுப்பு.

சட்டமன்ற உறுப்பினரே சொல்லுகிறாரே என்ன ஆகுமோ என்ற அச்சம் வேண்டாம். எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தவறுதலாக ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னார் என்றால், செய்யாவிட்டால் என்ன ஆகுமோ என்று அச்சப்பட வேண்டியதில்லை. அதே போல் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏதாவது செய்யச் சொல்லிச் செய்யாமல் போனால், அதைச் செய்யாமல் போனால் ஏதாவது தாட்சண்யம் ஏற்படலாம். இவர்களெல்லாம் காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்களாயிற்றே, செய்யாவிட்டால் ஏதாவது தீங்கு நேரிடுமோ என்று அச்சப் படலாம். அப்படி இருந்தாலும் போலீசார் பயப்பட வேண்டியதில்லை.

எது செய்தாலும் அந்த அதிகாரிகளுடைய பொறுப்பு. சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அல்லது அவர்களுக்கு மேலே இருப்பவர்கள் சொன்னாலும், அது அவர்களுடைய பொறுப்பு. சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், யாராவது சொல்லி அதைப் போலீஸ் அதிகாரி தவறு என்று நினைப்பாரானால், அதைப்பற்றி ஒரு ரிப்போர்ட் ஐ. ஜி.-க்கு அனுப்ப வேண்டும். ஏனென்றால், நாங்கள் சொன்னோம், செய்யவில்லை என்று கேள்விகள் வருகின்றன. தவறு என்றால் சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறாரே என்பதற்காகச் செய்யக் கூடாது. அவர்கள் சொல்வதை மரியாதையாகக் கேட்டுவிட்டு, அவர்கள் சொல்வது தவறு, செய்ய முடியாது என்றால் உடனே ஒரு ரிப்போர்ட்டை ஐ. ஜி.-க்கு அனுப்ப வேண்டும். ஐ. ஜி. மூலமாக அரசாங்கத்திற்கு வரும். இதைப்பற்றி போலீ

சாருக்கு ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, பன்முறை வற்புறுத்தியிருக்கிறேன். ஐ. ஜி.-யும் இதே முறையில் கவனம் செலுத்தி வருகிறார்.

## யாராயிருந்தால் என்ன ?

மேலும், போலீசாருக்கு ஒரு 'கோடு ஆப் காண்டக்ட்' (ஒழுங்கு முறை விதிகள்) நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த வகையிலே அவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அரசியல்வாதிகள் தலையீடு கூடவே கூடாது. எத்தகைய கட்சியாக இருந்தாலும் சரி—காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், தி.மு. கட்சியாக இருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும்—எந்தக் கட்சியின் தலையீடாக இருந்தாலும் சரி, மிரட்டலாக இருந்தாலும் சரி, அதற்கெல்லாம் போலீசார் அசையமாட்டார்கள்.

யாரோ ஒருவர் சொல்லுகின்றார் என்பதற்காக அவர்கள் தவறாக நடப்பதில்லை. எம்.எல்.ஏ. க்கள் போய் போலீசாரிடம் புகார் செய்வதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், "நான் ஒரு எம்.எல்.ஏ., நீ இதைச் செய், அதைச் செய்" என்று சொல்லுகிறபொழுது, போலீசார், "நீங்கள் எம்.எல்.ஏ.-ஆக இருந்தால் என்ன, நாங்கள் எதைச் செய்ய முடியுமோ அதைத்தான் செய்வோம்" என்று சொல்லுகிறார்கள்.

## பத்துப்பேர் முன்னால்

ஒன்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போலீசாருடைய வேலை கஷ்டமான வேலை. ஒரு குழப்பம் ஏற்படுகிறது, ஒரு பரபரப்பு ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். பத்துப் பேர் இருக்கிறார்கள். அச்சமயம் எம்.எல்.ஏ. க்கள் போலீசாரிடம் போய்ச் சொல்லலாம். சொல்ல வேண்டாம் என்று

நான் கூறவில்லை. தனியாகப் பார்த்து, சப்–இன்ஸ் பெக்டரிடமோ, சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடமோ, வேண்டுமானுல் டி.எஸ்.பி.-யிடமோ சொல்லட்டும். ஆனுல், அங்கே பத்துப்பேர்கள் இருக்கும்பொழுது, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, வேறு என்ன கட்சியாக இருந்தாலும் சரி, அவர்களிடம் ''இப்படிச் செய், அப்படிச் செய்,''என்று சொல்லுவது முறையல்ல.

பத்துப்பேரை வைத்துக்கொண்டு போலீசைக் கண்டிப்பதோ அல்லது குறை கூறுவதோ தவறு. அப்படிச் சொல்லும்போது அவர்கள் திருப்பிச் சொல்வார்கள். எந்த எம்.எல்.ஏ. யையும் மரியாதைக் குறைவாக எந்தப் போலீஸ் ஆபீஸரும் நடத்த மாட்டார்கள்.

## பாரபட்சமற்ற நடத்தை

போலீசார் பாரபட்சமின்றி நடந்துகொள்ளவில்லை, அவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்குச் சலுகை தந்து வருகிருர்கள் என்று சொல்கிருர்கள். அதேபோல் ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் போலீசார் எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சலுகை காட்டுவதாகக் கூறுகிருர்கள். இப்படிப் பேசுவதை ஒரு தவருன பேச்சாகச் சொல்ல முடியாது. இது ஒரு சாதுரியமான வாதம். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? போலீசார் பாரபட்சமற்ற முறையிலே நடந்துகொள்கிருர்கள் என்பதுதான் இதிலிருந்து நன்கு புலப்படுகிறது.

அவர்கள் அப்படிப் பாரபட்சமற்ற முறையிலே நடக்கும்போது, காரியங்கள் செய்யும்போது அது ஒரு கட்சியினருக்குச் சாதகமாக இருந்தால், மற்ற கட்சியினருக்கு அது பாதகமாக அமைகிறது. இந்த நிலைமைதான், ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும் ஏற்படுகிறது. ஆனுல், போலீசாரைப் பொறுத்தமட்டில், அவர்கள் எம்மாதிரியான

கட்சிப் பற்றும் இல்லாமல், நாட்டு மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் பணியாற்றிக்கொண்டு வருகின்றார்கள்.

## மரியாதை உணர்ச்சி

போலீசாரிடத்தில் அடியோடு எந்த விதமான குறையும் இல்லையென்று நான் சொல்லவில்லை. போலீசாரிடம் மரியாதை உணர்ச்சி வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. சில சமயங்களிலே இப்படி மரியாதைக் குறைவாக நடந்து கொள்கிறார்கள் என்று என்னுடைய கவனத்திற்கு வராமல் இல்லை. இதைப்பற்றிக்கூட நான் அவர்களிடம் அடிக்கடி வற்புறுத்திக்கொண்டு வருகிறேன். குற்றவாளியாக இருந்தாலும், கைதியாக இருந்தாலும் அவர்களிடம் மரியாதையாகப் பேசவேண்டும், மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் இத்தகைய சிறந்த பண்பாடு வேண்டுமென்றும் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இத்துறையிலும் மிகுந்த அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, போலீசார் மரியாதைக் குறைவாக நடந்து கொள்கிறார்கள் என்றால், அது அவர்களிடம் நாம் நடந்து கொள்ளும் விதத்தையும் பொறுத்திருக்கிறது. நாமும் ஓரளவு இம் முயற்சியில் பங்கு கொண்டு அவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும்.

## ஆபத்தான வேலை

மதுவிலக்குக் குற்றங்கள் குறைந்து கொண்டு வருகின்றன. கடுமையான சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். எங்கேயாவது போய் மதுவிலக்குக்

குற்றங்களைக் கண்டு பிடித்தால் கோபம்தான் வருகிறது. மதுவிலக்குக் குற்றத்திற்காக யார் மீது நடவடிக்கை எடுத்தாலும், போலீசார் அக்கிரமமாக நடக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வருகிறது. குற்றம் சாட்டப்பட்டவர் ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்தவராகத் தான் இருப்பார். அதனால்தான் எந்தக் கட்சிக்கும் எதிராக போலீசார் இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை.

மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடித்து, அவற்றைத் தடுப்பதற்கு போலீஸார் செய்யும் வேலை ஆபத்தான வேலை. ஆகவே போலீஸாருடன் ஒத்துழைக்க வேண்டும். அதை விட்டுவிட்டு அவர்கள் மீது குறை சொல்வது சரியல்ல.

# 10. புனிதத் தன்மை

"பண்புள்ளவர்கள் போலீஸில் சேருவதற்குத் தயங்குகிறார்கள்," என்று சிலர் சொல்வது வாஸ்தவம் தான்.

## கம்பி மேல் நடப்பது

போலீஸ் வேலை மிகவும் கஷ்டமான வேலை. கம்பி மேல் நடக்கிற வேலை. ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். குடைகூட இல்லாமல் போக வேண்டும். சர்க்கஸிலாவது குடையை வைத்துக் கொண்டு நடக்கிறார்கள். போலீசுக்கு நாம் குடையா வாங்கிக் கொடுக்கிறோம்? எதற்கெடுத்தாலும் அவர்கள் மீது குற்றம் சொல்வதினால் அவர்கள் பயப்படுகிறார்கள். ஆகவே அவர்கள் எப்படி போலீஸ் வேலைக்கு வருவார்கள் ?

இந்த நாட்டிலே மட்டும் அல்ல, வெளிநாடுகளிலும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கிலாந்திலே கூட போலீசுக்கு எவ்வளவு பேர் தேவையோ அவ்வளவு பேர் முன்வருவதில்லை. அங்கேயும் கஷ்டமான வேலை தான். அங்கேயும் போலீஸார் மதிக்கப்படுகிறார்கள், இங்கேயும் மதிக்கப்படுகிறார்கள். இங்கிலாந்திலே போலீஸ் மதிக்கப்படுகிறார்கள். இங்கே மதிக்கப்படுவ

தில்லை என்பது சரியல்ல. அக்கரைக்கு இக்கரை பச்சை என்றுதான் தோன்றும். இங்கேயும் போலீஸார் நன்றாக மதிக்கப்படுகிறார்கள். இப்பொழுது போலீஸார் நன்கு மதிக்கப்படுகிறார்கள். இப்பொழுது எல்லோரும் போலீஸ் ஸ்டேஷன்கள் அதிகமாக வேண்டுமென்று கேட்கிறார்கள். எங்களுக்கு வருகிற மனுக்களிலே பெரும்பாலும் போலீஸ் அவுட் போஸ்ட்கள் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்.

## யாருக்கும் விரோதமில்லை

நிலத்தகராறுகள் தோன்றும் போது போலீஸார் கலந்துகொள்வது பற்றி ஒன்று சொல்லப்படுகிறது. குடியானவனைப் பற்றியோ, அல்லது நிலச் சொந்தக்காரரைப் பற்றியோ போலீஸாருக்கு அக்கறை இல்லை. ஆனால் அங்கேயுள்ள நிலைமை என்ன என்பதைக் கலெக்டரிடம் கேட்கிறார்கள். சாதாரணமாக, கலெக்டர் அல்லது ஆர். டி. ஓ. வின் யோசனையைக் கேட்டுத்தான் போலீஸார் நடவடிக்கை எடுக்கிறார்கள். யார் அத்து மீறுகிறார்கள் என்பது ஒன்று, இரண்டாவது, அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்பது. இந்த இரண்டும்தான் போலீஸாருக்கு முக்கியம். சில சமயம் என்னிடத்தில் எத்தனையோபேர் புகார் சொல்லியிருக்கிறார்கள்.

மிராசுதார்களுக்கு விரோதமாக இருந்தால் மிராசுதார்கள் என்னிடம் சொல்லுகிறார்கள். அது போல குத்தகைக்காரர்களுக்கு விரோதமாக இருந்தால், குத்தகைக்காரர்கள் புகார் சொல்லுகிறார்கள். தேர்தல் சமயத்தில் கூட புகார்கள் வந்தன. எதிர்க்கட்சியினருக்கு போலீஸார் உடந்தையாக இருந்தார்கள் என்று புகார்கள் வந்தன. எதிர்க்கட்சியிலே சொல்லப்படுகிற புகார்கள் எல்லாம் விசாரிக்கப்பட்டு

வருகின்றன. விவரங்களை யெல்லாம் தீர விசாரித்து, அதிலே ஆதாரம் இருந்தால் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. ஆனால் ஒன்று சொல்லிக்கொள்ளு கிறேன். எங்களுக்கு வருகிற புகார்களை யெல்லாம் நாங்கள் விசாரித்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

## கட்சி வித்தியாசமின்றி

எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. நிலச் சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. மற்றும் காங்கிரஸ்காரர்களின் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது. இதைப் பற்றி எவ்வளவோ புகார்கள் என்னிடம் வந்துகொண்டிருக்கின்றன. நிலச் சொந்தக்காரர்கள் மீதும், காங்கிரஸ்காரர்கள் மீதும் கூட நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. வரக்கூடிய புகார்களைப் பார்த்தால், புகார் வராத நாட்களே கிடையாது என்று கூடச் சொல்லலாம். இரண்டு பக்கங்களிலிருந்தும் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றின் மீதும் வேண்டிய நடவடிக்கைகள், சட்டத்தையும் விதியையும் அனுசரித்து எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

போலீஸ்காரர்கள் ஏதாவது தவறு செய்கிறார்கள் என்றால் சட்டப்படி அவர்கள் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. அவர்கள் தங்களுடைய கடமையைச் சரிவர செய்யவில்லை யென்றாலும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## புனிதத் தன்மைக்குப் பாதுகாப்பு

போலீஸாருடைய புனிதத் தன்மையைப் பாதுகாக்க வேண்டும். எங்கள் அனுபவத்தைச் சொன்னேன். அதே உணர்ச்சி, அதே நம்பிக்கை மற்ற கட்சிகளுக்கெல்லாம் வர வேண்டும். போலீஸார் குற்றத்தைக் கண்டு பிடிப்பதில் அவர்களுடைய கையைப் பலப்படுத்த வேண்டும்.

போலீஸாருக்குப் பரிந்து பேசுவதாகச் சிலர் எண்ணிக் கொண்டு ஏதேதோ பேசுகிறார்கள். போலீஸாருக்குக் குறைந்த சம்பளம் இருக்கிறது. மேலதிகாரிகளுக்கு நிறைய இருக்கிறது. கீழேயுள்ளவர்கள் சம்பளம் போதாத காரணத்தினால்தான் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று இப்படி லஞ்சம் வாங்குவதற்கு ஆதரவு காட்டுகிற மாதிரி—சமாதானம் மாதிரி—பேசுவது சரியல்ல என்று நான் தாழ்மையோடு சொல்லிக் கொள்கிறேன்.

போலீஸாரை அரசியலுக்காகப் பயன்படுத்துவது கூடாது. அது நிர்வாகத்திற்கு நல்லதல்ல. ஒரு கட்சிக்குக்கூட நல்லதல்ல. எனது சிறிய அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறேன். மற்ற கட்சிகளுக்குக்கூட நல்லதல்ல.

போலீசாருக்குச் சம்பளம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். மற்ற வசதிகள் கொடுக்க வேண்டும், வீடு கட்டிக் கொடுங்கள், மின்சார வசதி செய்துகொடுங்கள் என்று கேட்கலாம். அப்படிப் பேசுவதை நான் தவறு என்று சொல்லவில்லை.

பொதுவாக போலீசாருக்கு உள்ள குறைகளைப் பற்றிச் சொல்வதை வரவேற்கிறேன். அவர்கள் மீது அக்கறை எடுத்துக் கொள்வதை வரவேற்கிறேன்.

ஆனால் சட்டத்தை மீறி அரசியல் கட்சி நபர்களோடு, முறைக்கு மாறாகக் கட்சியில் உள்ளவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வது தவறு.

**மனிதனாக இருந்தால்...**

போலீஸ்காரர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அரசியல் பற்று இருக்கலாம். ஆனால் அதைத் தனிப் பட்ட முறையில் வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர—அதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை—தங் களுடைய கடமையைச் செய்யும் போது அப்படிப்பட்ட எண்ணம் இருக்கவே கூடாது.

யாராக இருந்தாலும், மனிதன் என்று இருந் தால் அவனுக்கு அரசியல் கொள்கை இருக்கத்தான் இருக்கும். ஆனால் கடமையைச் செய்யும்போது அதைக் கொண்டுவந்து புகுத்தக் கூடாது. ஒரு கட்சி யில் அவர்களுக்கு அனுதாபம் இருக்கலாம். அதைத் தங்களுடைய உத்தியோக முறையில் கொஞ்சங் கூடக் காட்டக் கூடாது. அப்படி இருந்தால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதை அனு மதிக்கவும் முடியாது.

ஆகவே, எதிர்க் கட்சிக்காரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். காங்கிரஸ் கட்சிக்காரர்களாக இருந் தாலும் சரி, அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். போலீஸ்காரர்களிடம் கட்சிக் கொள்கையைப் புகுத்தக் கூடாது, புகுத்தவும் வேண்டாம். அது யாருக்கும் நல்லது அல்ல என்பதை மட்டும் சொல்லிக் கொள் கிறேன்.

**பயமல்ல, பொறுப்புணர்ச்சி**

நான் இப்படிச் சொல்லும்போது ஏதோ பயந்து கொண்டு சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்

டாம். போலீஸாருக்குள்ள கடமை, பொறுப்பு, நீதி, அந்தஸ்து இவைகள் எல்லாம் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவர்கள் வேலையில் இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட தகுதியில்லாதவர்களுக்கு போலீசில் இடம் கிடையாது.

போலீஸாரும் மனிதர்கள்தான், அவர்களுக்கும் மனித உணர்ச்சி இருக்கும், அந்த வகையில்தான் போலீஸார் நடந்து கொண்டிருக்கிறார்கள். சில சில கட்சிகளில் சிலருக்கு நம்பிக்கை இருக்கலாம். காங்கிரஸ் கட்சியில் மட்டும் அல்லாமல் வேறு கட்சிகளிடம் பற்று இருக்கலாம். அந்தக் கட்சிகளுக்குக் கொஞ்சம் சாதகம். அனுதாபம் இருப்பதாகவும் சொல்கிறார்கள். எந்தக் கட்சியையும் விரும்பும் முறை, அவசியம் கூடாது. எந்தக் கட்சி மீதும் போலீசார் மோகம் கொள்ளக் கூடாது. எந்தக் கட்சிக்கும் அவர்கள் உடன்பாடு கொள்ள வேண்டா மென்று வலியுறுத்தி வருகிறேன்.

### நியாயத்தின் பக்கம்

ஆளும் கட்சியோடு சேர்ந்து போலீஸ்காரர்கள் மாற்றுக் கட்சிகளை அடக்கி, ஒடுக்கி மிரட்டுவதாகச் சொல்கிறார்கள். ஆட்சியாளர்கள் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது முற்றிலும் தவறு என்று நான் சொல்வேன். சட்டம் இருக்கிறது, கொள்கை இருக்கிறது, அதை அனுசரித்து நடக்க வேண்டும். அப்படித்தான் இன்று நடக்கிறார்கள். கீழே இருக்கிறவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அவர்கள் இஷ்டப்படி 'பீனல் கோடை' வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுப்பது இல்லை. நாம் செய்திருக்கிற சட்டம், நாம் வகுத்து வருகிற கொள்கை இவற்றை வைத்துக் கொண்டுதான் அவர்

கள் நடந்து கொள்ள வேண்டும். சர்க்காரும் அதைத் தான் வற்புறுத்துகிறது. கீழே இருக்கக் கூடிய போலீஸ் அதிகாரிகளும் இதை உணர்ந்து கொண்டு நடக்கத்தான் வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். இதிலே பட்சபாதம் ஒன்றும் இல்லை.

தவறான ஒன்றை எந்தக் கட்சி செய்தாலும், தவறு தான். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் செய்தாலும் தவறு தான். இந்த அடிப்படையில் சில காரியங்களைச் செய்யும் போது என் பேரில் காங்கிரஸ்காரர்களுக்கே வருத்தம் உண்டு. அவர்களுக்கே தெரியும். அதை யாரும் மறுக்க மாட்டார்கள். போலீஸாரிடம் சொல்லி நியாயம் இருக்கிற பக்கத்தில் உதவி செய்யுங்கள் (வழி முறை மீறி அல்ல) என்று சொல்லியிருக்கிறேன். இதில் ஒரு கட்சிக்கு ஒன்று, இன்னொரு கட்சிக்கு ஒன்று என்று இல்லவே இல்லை.

## சமூக விரோதிகள் தொல்லை

சாதாரணமாக இந்த நாட்டில் சமூக விரோதிகள் இருக்கிறார்கள். அவர்களால் போலீஸ்காரர்களுக்கும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பொதுமக்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. போலீஸ்காரர்களைப் பலஹீனப் படுத்த வேண்டும் என்று சிலர் நினைத்து போலீஸார் மீது தவறுகள் கண்டு பிடிக்கிறார்கள். எந்த விதத்திலாவது போலீஸ்காரர்களுக்குப் பலஹீனம் விளைவிக்க வேண்டும் என்று அவர்கள் முற்படுகிறார்கள். இவ்வாறு பல காரியங்கள் நடைபெறுவது பலருக்கும் நன்றாகத் தெரியும். இது பற்றிக் கொஞ்ச காலத்திற்கு முன் பத்திரிகைகளைப் பார்த்தவர்களுக்குப் போலீஸ்காரர்கள் எப்படித் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பது நன்றாகத் தெரியவரும்.

இப்பொழுது போலீஸ்காரர்கள் துன்புறுத்தப் படுவது அதிகமாகிக்கொண்டு வருகிறது. இதனுல் போலீஸ்காரர்கள் பலஹீனமாகப் போய்விட்டார்கள் என்று சாதாரணமாகச் சொல்லிவிடலாம். சில சமயங்களில் போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுக்கும் போது அவர்களுக்குச் சமூக விரோதிகளால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எதிர்க்கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கும்போது, போலீஸ்காரர்களிடத்தில், குறிப்பாக அரசாங்கத்தினிடம் அதிருப்தி இருந்தாலும், வெறுப்பு இருந்தாலும்கூட அதையெல்லாம் வைத்துக் கொண்டு மறைமுகமாக மேற்படி காரியங்களுக்கு ஆதரவு அளிப்பது குற்றமாகும். அது கட்சிக்கும் நல்லது அல்ல. நாட்டிற்கும் நல்லதல்ல.

## போலீசை மிரட்டுவதா ?

போலீஸ்காரர்களிடத்திலும் தவறுகள் ஏற்படலாம். மரியாதை செலுத்தும் போது சில சமயம் அவர்கள் தவறுகள் செய்கிருர்கள். அவை பழக்க வழக்கத்தினுல் ஏற்பட்டது. சில சமயங்களில் சவகாச தோஷத்தினுலும் அவைகள் ஏற்படுகின்றன. அதையெல்லாம் தவிர்க்க வேண்டியதுதான்.

போலீசார் மீது குற்றம் சாட்டுவது சுலபம். போலீஸ்காரர்கள் பொய்க் கேஸ்கள் போடுகின்ருர்கள் என்று சொன்னுர்கள். அவர்களுக்குக் குற்றம் கண்டுபிடிக்க வேண்டி யிருக்கிறது. இதற்காக கேஸ் போடும்பொழுது சில நிரபராதிகளேயும் தவறுதலாகச் சேர்க்க நேரிடலாம். நான் இதைப் பற்றிப் பல பிராதுகளும் கேட்டு இருக்கிறேன். ஆனுல் என்ன கேஸ் போட்டாலும் இதை எல்லாம் பார்த்துக்கொள்வதற்கு கோர்ட் இருக்கிறது. இன்னும் இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்ருல், சில சந்தர்ப்பங்

களில் கேஸ் போட்டுவிட்டார்கள் என்று சிலர் போலீஸ் காரர்களை மிரட்டுவதற்காக போலீஸ்காரர் மீது அபாண்டமாகக் கேஸ் போட்டுக்கொண்டு இருக்கிருர்கள். இதைப் பற்றியுள்ள புகாரையும் நேரில் நான் கேட்டிருக்கிறேன்.

## அடிபட்ட சம்பவம்

போலீசுடைய வேலைகளை உண்மையில் நாம் சரியானபடி உணர்ந்துகொள்வோமாளுல், நாம் அவர்களைக்குறைகூறமாட்டோம். அதாவது அவர்களுடைய வேலைகளில் நமக்கு இடைஞ்சலாக இருக்கிருர்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் மீது குறை சொல்லுவது நியாயமான காரியம் அல்ல. போலீஸ்காரர்களும் அவர்கள் தங்கள் கடமையை சரியாகவும் பொறுப்பாகவும் செய்யவேண்டும். ஆளுல், அளவுக்கு மீறி அவர்கள் நடந்தார்களாளுல், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசாங்கம் அவர்கள் பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

போலீசார், ஏதோ நம்மீது கேஸை எடுத்தார்கள், நம்மை அவர்களுடைய லிஸ்டில் சேர்த்துக் கொண்டார்கள் என்ற காரணங்களுக்காக எல்லாம் தங்களிடம் ஆதாரம் இல்லாமலோ, ஏதோ ஆதாரத்தோடு வேண்டுமென்றே போலீஸ்காரர்கள் மீது குற்றம் சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. அதாவது சுமார் 30 வருஷங்களுக்கு முன்பு ஒரு ஜனவரி 26-ந் தேதியன்று ஊர்வலம் நடந்தது. அன்றைக்கு அந்த ஊர்வலத்தில் போலீசாரால் பலர் அடிக்கப்பட்டனர். அதில் நானும் ஒருவன். அன்று

அவர்கள் வெறியுணர்ச்சியோடு செய்தது தவறுதான். அன்றெல்லாம் இதற்கு விசாரணை ஒன்றும் செய்ய வில்லை. ஆனால் அன்று நடந்ததை வைத்துக்கொண்டு இன்று பழிவாங்க முற்படுவது தவறு. அது அப்போதிருந்த முறை என்று விட்டு விடவேண்டும். அத்தனை ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் நான் அதை நினைக்கிறேன்.

## லஞ்சமும் தண்டனையும்

லஞ்சத்தைப் பற்றிக் கூறப்படுகிறது. ஏதோ சிறிய உத்தியோகஸ்தராக இருந்தால் அவர்கள் மீது லஞ்சக் குற்றத்திற்காகத் தண்டனை விதிக்கப்படுகிறது என்றும், பெரிய உத்தியோகஸ்தர்களாக இருந்தால் அவர்களை விட்டுவிடுகிறார்கள் என்றும் சிலர் நினைக்கின்றனர். லஞ்சம் வாங்குகிறார் என்று தெரிந்தால் அது யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்குத் தண்டனைதான் விதிக்கப்படுகிறது.

சாதாரண போலீஸ் உத்தியோகஸ்தர் முதற்கொண்டு டி. எஸ். பி. வரையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. ஐ. பி. எஸ். ஆக இருந்தால் அவர்கள் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவராக இருப்பதால் மத்திய அரசாங்கத்திற்கு எழுதிக்கூட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. கோர்ட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டியதாக இருந்தாலும் அந்தக் கேஸ்கள் கோர்ட்டுகளுக்கு அனுப்பப்படுகின்றன. சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, விதிகளின்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ, அவைகள் எல்லாம் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. தகவல் வந்தவுடன் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. விசாரணை செய்தவுடன் உடனடியாக நட

வடிக்கை எடுத்துக்கொள்ளவும் சொல்லப்படுகிறது. எவ்வளவுதூரம் சட்டப்படியோ அல்லது விதிகளின் படியோ நடவடிக்கை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப் படுகிறதோ, அந்த அளவுக்கு எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

இவைகளையெல்லாம் அரசியல் கட்சிக் கண்ணோட் டத்துடன் பார்க்கவே கூடாது. சாதாரணமாகப் புகார் வந்தால், அதனதன் தகுதியின் பேரில் என்ன செய்ய வேண்டுமோ, அவைகள் எல்லாம் செய்யப் பட்டுத்தான் வருகின்றன. போலீஸ்காரர்கள் தப்பு செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. தகவல் வந்தவுடன் ஐ. ஜி. யிடம் அதைப் பற்றித் தெரிவித்து விசாரணை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுத் தான் வருகிறது.

**சந்தேகம் ஏற்பட்டால்...**

லஞ்சம் இருப்பதை நான் மறுக்கவில்லை. அதை அடியோடு அகற்றுவதுதான் அரசாங்கத்தின் முடிவு. அந்த வகையில்தான் இன்று அரசாங்கம் கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. லஞ்சம் சம்பந்தப்பட்ட மட்டில் யாராய் இருந்தாலும் சரி, கீழ்த் தர உத்தியோகஸ்தராயிருந்தாலும் சரி, உயர்ந்த உத்தி யோகஸ்தராயிருந்தாலும் சரி, அதைப்பற்றி தாட்சண் யம் ஒன்றும் கிடையாது. ஆனால், இந்த லஞ்சத்தைப் பற்றி மிகைப்படுத்திச் சொல்வது அந்த லஞ்சத்தை ஒழிப்பதற்கு வகையல்ல என்று இந்தச் சமயத்தில் நான் சொல்லவிரும்புகிறேன். தகவல்கள் அப்போதைக் கப்போது விசாரிக்கப்படுகின்றன.

பெரிய உத்தியோகஸ்தர்களாயிருந்தாலும், அவர் கள் மீதுசந்தேகங்கள் ஏற்பட்டால், அவைகள் விசாரிக் கப்படுகின்றன. சாதாரணமாகக் குற்றங்கள் விசாரிக்

கப்படுவதில் கோர்ட்டில் கையாளப்படும் தரத்தைப் போல், உத்தியோகஸ்தர்களைப் பற்றிய வரையில், ஸ்பெஷல் ட்ரிப்யூனல் போட்டுக் குற்றங்களை விசாரித்து அதற்குமேல் நடவடிக்கை எடுக்கும்போது, அவ்வளவு நிச்சயமாகக் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்படுவதில்லை; ஓரளவு சந்தேகம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டால், நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்; இன்னும் எடுத்துக் கொள்ளத் தயங்க மாட்டோம்.

## குற்றம் களையப்படுகிறது

சில கான்ஸ்டபிள்கள் குடிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதையும் நான் மறுக்கவில்லை. அது ரொம்பத் தவறு என்று நான் சொல்லிக் கொள்கிறேன். அதை அகற்றுவதற்குப் பார்க்கின்றோம். இதற்கெல்லாம் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். அது இல்லையென்று நான் சொல்லவில்லை. அது இன்னும் அதிகம் வேண்டும்.

எத்தனையோ போலீஸ் அதிகாரிகளின் மீதே குடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். லஞ்சக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளும் உளர். ஆகவே குற்றம் எங்கிருந்தாலும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் ஒன்று, இருக்கிற குற்றத்தை மிகைப்படுத்துவதால் பிரயோசனமில்லை. எந்தக் குற்றம், எந்த இடத்தில் ஏற்பட்டாலும் அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு, களையப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## புகாருக்குஆதாரம்

பெரிய அதிகாரிகள் பேரிலும் சரி, சிறிய அதிகாரிகள் பேரிலும்சரி-அதிகாரிகள் பேரில் புகார்கள் வந்தால்

அவைகளை அப்போதைக்கப்போது விசாரணை செய்து மேல் நடவடிக்கை எடுக்க நாங்கள் தயங்குவதில்லை. புகார்கள் நேரிடையாகத் தெரிவிக்கப்பட்டாலும், கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டாலும், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களால் கொடுக்கப்பட்டாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களால் கொடுக்கப்பட்டாலும், ஒவ்வொரு புகாரின்பேரிலும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம்.

போலீசாரைப் பற்றி யார் புகார் கூறினாலும் ஒன்றும் கவனிக்கப்படுவதில்லை என்று நினைப்பது தவறு. நான் இதை உறுதியாகச் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எத்தனையோ பேர் என்னிடம் பல புகார்கள் கூறினார்கள். அவர்கள் கூறும் புகார்கள் ஆதாரமற்றவை என்று தெரிந்தால் அதை அவர்களிடம் உடனே தெரிவித்துவிடுகிறேன், இருந்தாலும் பின்னர் புகார்களைப்பற்றி விசாரிக்கிறேன். அதே மாதிரி எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லும் புகார்கள் பேரிலும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். ஆனால், கூறப்பட்ட புகார்களுக்கு ஆதாரமில்லை என்று தெரிந்தால் மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடிவதில்லை.

## விரும்பாத தாமதம்

விசாரணை நடத்தவேண்டும் என்று புகார் வந்தாலும் சரி, ஏதோ லஞ்சமோ, வேறு ஊழலோ இருப்பதாக அரசாங்கத்திற்குத் தெரிந்தாலும் சரி, அதை நன்றாக விசாரணை செய்து முறைப்படிதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதிலே தாமதம் ஏற்படுகிறது. அது நாங்கள் விரும்பாத தாமதம், நாங்கள் தவிர்க்கக் கோருகிற தாமதம் ஏற்படுகிறது.

சர்க்கார் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாம் ஏதோ அவசரப்பட்டால்கூட கோர்ட்டு தலையிடுகிறது. சில சமயங்களிலே கோர்ட்டு தலையிடுகிறது. தலையிட்டு, "நீங்கள் செய்தது தவறு, இன்னும் சரியாக விசாரணை செய்யவேண்டும்" என்று பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சொல்லுகிறது. சில சமயங்களில் நீதி மன்றம் சொல்லுகிறது. ஆகையால், இதற்கு உட்பட்டு முறைப்படி செய்வதிலே கொஞ்சம் தாமதம் ஆகிறது. ஆனால், அந்தத் தாமதம் எவ்வளவு தூரம் தவிர்க்கப் பட முடியுமோ அவ்வளவு தூரம் தவிர்த்து, குறைபாடு இருக்கிறதாகப் புகார் சொல்லப்படும் அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

# 11. நிர்வாக நடைமுறை

சமூக விரோதிகள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்றால், போலீசார் மீது கோபம் வருகிறது. அந்த வகையிலே, சில சமயங்களிலே, அரசியல் கட்சிகளும் போலீசாரைத் தாக்கி அதைத் தங்கள் கட்சிக்குப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் இருக்கிறது. அது கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

## கடுமையான எச்சரிக்கை

பொதுமக்களுடைய பாதுகாப்புக்காகப் போலீசார் இயங்கவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நல்லவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதற்குரிய வகையிலே எல்லோரும் நம்முடைய போக்கை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில தனிப்பட்ட அதிகாரிகள் தவறுதலாக நடந்து கொண்டாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பது எங்கள் கருத்தல்ல. அதை நாங்கள் விரும்பவில்லை. பகிரங்கமாக இதைப் பற்றிச்

சொல்லியிருக்கிறேன். இதைப் பற்றிக் கடுமையான சுற்றறிக்கை விடுத்திருக்கிறது. உதாரணமாக, பலாத்காரமான முறையில் கைதிகளின் மேல் கை வைக்கக்கூடாது. அம்மாதிரி பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டது என்று தெரிந்தால் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

## அக்கிரமத்தைக் காப்பதா?

அக்கிரமம் செய்தாலும், அக்கிரமம் செய்பவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. அம்மாதிரி செய்வது அரசாங்கத்திற்கும் நல்லது அல்ல. மக்களுக்கும் நல்லது அல்ல. மக்கள் அதிருப்தி அடைந்து இந்த அரசாங்கத்தையே வெறுக்க ஆரம்பிப்பார்கள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

ஆனால் சில சமயங்களில் இம்மாதிரி சம்பவங்களைக் கட்சி ரீதியில் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள். அதுபற்றியும் என்னிடம் தகவல் இல்லாமல் இல்லை. மக்களைப் பாதுகாக்க எந்த யோசனை வேண்டுமானாலும் சொல்லட்டும்; நாங்கள் கேட்கிறோம். ஆனால் காரியத்தை மிகைப்படுத்தி, அதைக் கட்சி பலத்திற்காக உபயோகப்படுத்துவது சரியல்ல. அது அந்தக் கட்சிக்கு உண்மையில் பலமளிக்காது.

## விருப்பு வெறுப்பிற்காக...

சில பேர்கள்—எங்கள் கட்சியில் இருந்தும் வருகிறார்கள்—தவறுதல் செய்கிறவர்களையும், ஒழுங்காக நடக்கிறவர்களையும் அவர்கள் விருப்பு வெறுப்பிற்கேற்ப மாற்றச் சொல்கிறார்கள். நான் கண்டிப்பாகச் சொல்கிறேன். ஒருவரது விருப்பு வெறுப்பிற்காக ஒரு

அதிகாரியை மாற்றவே முடியாது. யாராயிருந்தாலும் சரி, அவர்கள் எவ்வளவு செல்வாக்கு உடையவராக இருந்தாலும் சரி, அவர்கள் போலீஸ் சூப்பரின்டெண்டிடம் போய், இவர்களை மாற்ற வேண்டுமென்று சொன்னால் அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு செய்யக் கூடாது, அதை மேல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் வேண்டுமானால் அரசாங்கத்தினிடம் சொல்லலாம், அவர்களாக நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்று உத்திரவு போட்டிருக்கிறோம், கண்டிப்பாக.

தவறுதலாக நடக்கிறவர்களையும் பிடிக்கவில்லை, ஒழுங்காக நடக்கிறவர்களையும் பிடிக்கவில்லை. ஒரு போலீஸ் அதிகாரியை மாற்றவேண்டுமென்று ஒருவர் சொல்வதற்காக யாரையும் மாற்றிவிட முடியாது. மாற்றுவதற்கு அவசியம் இருந்தால் மாற்றலாமே தவிர இவர்கள் சொன்னார்கள், அவர்கள் விரும்பவில்லை என்பதற்காக ஒருவரையும் மாற்ற முடியாது.

## நிர்வாகத்துறை மாற்றம்

அதிகாரிகளை மாற்றுகிறார்கள் என்றால் எத்தனையோ காரணங்கள் உண்டு. போலீஸ் இலாகாவில் மட்டும் அல்ல, பொதுவாக அதிகாரிகளை மாற்றாமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். ஆனால் வேறிடத்தில் மாற்றவேண்டிய நிமித்தம், அவசியம் ஏற்படுகிறது. அதோடு மூன்று ஆண்டுகள் முடிந்தால் மாற்றப்படுகிறது. ஒரு இடத்தில் இருப்பவரை எடுத்து வேறு இடத்தில் போட்டால், அங்கு இருப்பவர்களை இன்னொரு இடத்திற்கு மாற்றவேண்டும். பொதுவாக நிர்வாகத் துறைகளில் மாற்றம் வேண்டும். ஆனால், அதற்கெல்லாம் காரணங்கள் சொல்ல முடியாது. சொல்லவேண்டுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

சில சமயங்களில் புகார் இருந்தால் மாற்று கிறோம். வேலைக்குத் தகுதி இல்லை என்றும் மாற்று கிறோம். அப்படிப் பல காரணங்களை யொட்டி மாற்று கிறோம். யாரோ காங்கிரஸ் கட்சியில் இருப்பவர் சொன்னார் என்பதற்காக இதில் அக்கறை உண்டு என்பதல்ல. அதற்குக் கொஞ்சம்கூட ஆதாரம் இல்லை. தகுந்த காரணங்களைக் கொண்டு தகுதி நியதியோடு தான் மாற்றுகிறோம். ஆனால் ஒரு அதிகாரியின்மீது குற்றம் குறைகள் இருந்தால் அந்த அதிகாரி அங்கு இருக்கக் கூடாது. இதில் எந்தக் கட்சியாக இருந்தாலும் ஒருவர் சொல்கிறாரே என்பதற்காக நாங்கள் ஒன்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

## அனுதாபத்தை மூட்டை கட்டி...

போலீஸின் கட்சி பாரபட்சத்தைப்பற்றி பலரும் குறை கூறுகிறார்கள். காங்கிரஸ் கட்சிக்காரர்கள், சில போலீசார் காங்கிரஸ் கட்சிக்குப் பாரபட்சமாய் இருக் கிறார்கள் என்று சொல்கிறார்கள். எதிர்க்கட்சிக் காரர்கள் அவர்களுக்குப் பாரபட்சமாய் நடந்து கொள்வதாகச் சொல்கிறார்கள்.

போலீஸ் உத்தியோகம் வகிக்கிற தனி நபர்களைப் பொறுத்த மட்டில் அவர் அவர்களுக்குள்ள கோட்பாடு களும், லட்சியங்களும் இருக்கின்றன. அதை நாம் மாற்ற முடியாது. ஆனால் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேல் அனுதாபம் இருந்தால் தன்னை அறியாமலே பார பட்சமாக நடந்திருக்கலாம். அப்படிக் கிடையாது என்று அவர்களால் சொல்ல முடியாது. அரசியல் விவகாரங்களில் அவரவர்களுக்குள்ள சொந்த அபிப் பிராயத்தை வைத்துக் கொள்ளலாம். ஆனால் பொதுக்

கடமையைச் செய்யும் போது, ஜனங்களுடைய பொறுப்பை நிர்வகிக்கும் போது, அதையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு நியாயமாகப் பாரபட்சமின்றி நடந்து கொள்ள வேண்டும்.

## தேர்தல்கால அநீதி

முக்கியமாக என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் சட்டசபைத் தொகுதியில் முன்பு நடந்த தேர்தலைப் பற்றி குறை சொன்னார்கள். அந்தத் தொகுதியிலே பலாத்கார முறைகள், அக்கிரமங்கள், அநீதிகள் எதிர்க்கட்சியினர் புரிகிறார்கள்; அவற்றுக்குப் பரிகாரமில்லை, விமோசனமில்லை என்று என்னிடம் வந்து பலர் தேர்தலின்போது குறை கூறியிருக்கிறார்கள். இன்னும் நான் சொல்லப் போனால், பெரிய குற்றங்கள் செய்கின்றவர்கள் எல்லாம் அவைகளைத்தான் செய்கிறார்கள். சட்டத்திற்கு விரோதமான குற்றங்களைச் செய்பவர்களைப்பற்றி போலீசார் கவனத்திற்கு யார் வேண்டுமானாலும் கொண்டு வரலாம். அவ்வாறு கொண்டு வந்தால் போலீசார் நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். ஆனால் தேர்தல்களில் அனுவசியமான தலையீடு இருக்கிறது என்ற எண்ணம் ஏற்படக்கூடாதென்ற காரணத்தால், அவைகளை நான் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

புகார் வந்தால் புகார் நிருபிக்கப்பட வேண்டும். புகார்கள் மீது போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொள்வதுண்டு. ஆனால் அவர்கள் தாங்களாகவே நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்பது வேறு. எல்லாவற்றுக்கும் போலீசாரையே பயன்படுத்திக் கொள்வது என்பது கூடாதென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

## கட்சிக்குப் போலீஸ் உதவியா?

போலீஸ் திறமையாகத்தான் இருக்கிறது. ஆனல் அதைத் தங்கள் கட்சிக்கு ஆளும் கட்சியினர் பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள் என்று எதிர்க்கட்சியினர் குறை கூறுகின்றனர். அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் போலீஸ்காரர்கள் அவர்களுக்கு எதிர்ப்பாகத்தான் இருந்தார்கள். அதிலும் கடுமையாக எதிர்த்தார்கள். அதன் காரணமாக எவ்வளவோ பேர் அடிபடக் கூடியதாகவும் இருந்தது. போலீஸ்காரர்கள் அவர்களை எதிர்த்தது மட்டும் அல்ல, அப்பொழுது இருந்த ஆளும் கட்சியினருக்கு, இன்றைக்கு அரசாங்கத்தைக் குறைகூறுகின்றவர்களைச் சார்ந்தவர்கள், அரசாங்கத்திற்கும் அரசாங்கப் போலீசுக்கும் ஆதரவு கொடுத்துக்கொண்டு 'வந்தார்கள். அது எல்லாம் இருந்தும் சர்வ வல்லமையுள்ள ஒரு பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துச் சுதந்திரப் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்றிருக்கிறோம்.

இந்த சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரஸ் கட்சியினர் வெற்றி பெற்று சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள் என்றால், போலீஸ் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி அடைந்திருக்கிறோம் என்ற அந்த அனுபவம் இருக்கிறது. அந்த நினைவு இருக்கிறது. மக்களுடைய பேராதரவு பெற்று இன்று ஆட்சியை நடத்துகிறோம். அப்பொழுதிருந்தே போலீசாருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், வெள்ளைக்கார ஆட்சியையும் அந்தக் கட்சி வெளியேற்றியிருக்கிறது.

போலீஸ் சேவை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் வேண்டியிருக்கிறதே தவிர, அது காங்கிரஸ் கட்சிக்கு அடியோடு தேவையில்லை. போலீஸ்காரர்களை எங்கள்

கட்சிக்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறேம் என்று யாராவது சொன்னல், அவ்வாறு நினைத்தால் அது தவறு என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

## உரிமைக்கு என்ன குறைவு!

கூட்டங்களில் கலகம் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக எல்லா பலாத்கார முறைகளை யும் போலீசார் உபயோகிக்கிருர்கள் என்றும், அது போலீசார் குற்றம் இல்லை, அதற்கு அரசாங்கம்தான் காரணம் என்றும் கூறப்படுகிறது. ஏதோ கட்சி உணர்ச்சியை வைத்துக் கொண்டு அவ்வாறு அரசாங் கம் போலீசாரை உபயோகித்து, கூட்டங்களில் நடை பெறுகின்ற கலவரங்களை அடக்குவதற்கு உபயோகிக் கிருர்கள் என்றும் சொல்கிருர்கள். மற்ற நாடுகளி லுள்ள உரிமைகளைப் பற்றியும் பேசுகிருர்கள்.

மற்ற நாடுகளில் உரிமை பாதுகாக்கப்படுவது இருக்கட்டும். நம்முடைய நாட்டில் இன்றைக்கு என்ன குறைவு இருக்கிறது? பொதுக் கூட்டங்களில் பேசப் படுகிறது. அப்படி பேசப்படும் விஷயங்கள் தவிர்க்கப் படுகிறதா? எவ்வளவோ ஆதாரம் அற்ற, ஆபாசமான விஷயங்கள்கூட எடுத்துப் பேசப்படுகின்றன. அத் தகைய கூட்டங்களில் போலீசாருடைய தலையீடு இருக் கிறதா? அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனவா? இல்லை. சில பேச்சுக்களை போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் எடுத்துக்கொண்டு வருகிருர்கள். அவைகள் அரசாங்கத்தின் பார்வைக்கு வருகின்றன.

## செருப்பு வீசச் சொல்லும் பேச்சு!

கடந்த சில வருஷங்களில் நடைபெற்ற பேச்சுக்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தாலும்

அந்தப் பேச்சுக்களிலிருந்து ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் ஒன்று அல்லது இரண்டு பேச்சுக்களின்பேரில் தான் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதனுல் மற்ற பேச்சுக்கள் எல்லாம் ஆட்சேபகரமாய் இல்லாமல் பேசுகிருர்கள் என்ற அர்த்தம் இல்லை. எனக்குத் தெரியும், போலீசார் என்ருல் பயம் இருக்கிறது என்று சொல்லுகிருர்கள். ஒரு பேச்சாளர் பேசும்போது—எனக்குத் த க வ ல் வந்திருக்கிறது, செருப்பைக்கூட எறியலாம், இப்பொழுது ஜனநாயகம் நடக்கிறது, அதற்கு ஒரு ரூபாய்தான் அபராதம், அதற்குமேல் ஒன்றும் இல்லை என்றுகூடப் பேசியிருக்கிருர்.

திட்டுவது பற்றிச் சொல்லவேண்டியதில்லை. வசவு மொழிகளைக் கேட்டுக் கேட்டு ஊறிப் போய்விட்டோம் என்றும் சொல்லுவேன். பேசும்போது ஆபாசமாகத் தாக்கிப் பேசுவதுடன் மாத்திரமின்றி, அவதூருகவும் தாக்கிப் பேசுகிருர்கள்.

அதோடு மேடைப் பேச்சு வேறு, நாடகம் வேறு. மேடையில், அரசியல் விஷயத்தைப் பற்றிப் பேசுகின்ருர்கள்; போலீசைப்பற்றிப் பேசுகின்ருர்கள்; மந்திரிகளைப் பற்றிப் பேசுகின்ருர்கள். அது ஒன்று. ஆனுல் நாடகம் என்று பெயரை வைத்துக்கொண்டு கலையைத் துஷ்பிரயோகம் செய்வது என்ருல் அது சரியாகாது. பொதுவாகக் கலையின் பெயரை வைத்துக் கொண்டு, நாடகம் என்ற பெயரால் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு சட்டம் இயற்றி இருக்கிரும். 'டிரமாடிக் பர்பாமன்ஸ் ஆக்ட்' என்கிற சட்டம் நிறைவேற்றப்பட்டு அமுலில் இருக்கிறது. ஆகவே அந்தச் சட்டப்படி—அந்தச் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டு—எந்த நாடகங்கள் தயாரிக்கப்படுகிறதோ, அவை தடுக்

கப்பட மாட்டாது. சட்டத்திற்கு மாருக இருந்தால், தடை செய்யத்தான் செய்வார்கள்.

## தவிர்க்க முடியாத நிலை

இங்கிலாந்து தேசத்தில் கிளர்ச்சிகளும் கூட்டங்களும் எத்தனேயோ நடக்கின்றன. அந்தக் கூட்டங்களில் தடியடிப் பிரயோகமோ, கண்ணீர்ப் புகைப் பிரயோகமோ செய்யப்படுவதில்லே. அந்தக் கூட்டங்களில் பேசுபவர்கள் கைது செய்யப்படுவதும் இல்லே. இந்த ராஜ்யத்திலும் பல கூட்டங்களில் பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய பிரசங்கங்கள் எத்தனேயோ நிகழ்த்தப்படுகின்றன. அவைகளேக் குறித்து இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளே எடுப்பதில்லே.

பலாத்காரக் கூட்டங்களேக் கூடியவரையில் கண்ணீர்ப் புகைப் பிரயோகமோ, தடியடிப் பிரயோகமோ செய்யாமல் கலேப்பதற்குப் போலீசார் எடுக்கும் நடவடிக்கைகள், கூடிய வரையில் பொதுமக்களேப் பாதிக்கக்கூடாது என்பதுதான் சர்க்காரின் கொள்கை. இருந்தாலும் போலீசார் எடுத்துக் கொள்ளும் தடியடிப் பிரயோக நடவடிக்கையாலும் கண்ணீர்ப் புகைப் பிரயோக நடவடிக்கையாலும் பொதுமக்கள் ஓரளவு பாதிக்கப்படுகிருர்கள். இதைத் தவிர்க்க முடியவில்லே.

## தடியடி, கண்ணீர்ப் புகை !

ஆகவே, பலாத்காரக் கூட்டங்களேக் கலேப்பதற்கு இப்போது போலீசார் கையாளும் முயற்சிகள் பொதுமக்களே ஓரளவு பாதிக்கக்கூடியவையாகத்தான் இருக்கின்றன. பொதுமக்களேப் பாதிக்காமல் இருக்கக் கூடிய வேறு சிறந்த முறைகள் தெரியாததால்தான்

இந்த முறைகளைப் போலீசார் கையாளுகிறார்கள். இப்போது கையாளப்படும் இந்த முறைகளுக்குப் பதிலாக, பொதுமக்களுக்குச் சிறிதும் பாதகம் விளைவிக்காத சிறந்த முறைகளை, ஆராய்ச்சி செய்யும் ஆற்றல் உள்ளவர்கள் கண்டு பிடித்துச் சொன்னால் அவைகளை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். இது சம்பந்தமாக அதிகாரிகளுடனும் நிபுணர்களுடனும் கலந்தாலோசிக்கிறோம்.

இந்த நிலையில் பலாத்காரக் கூட்டங்களையும் சட்டவிரோதமான கூட்டங்களையும் கலைப்பதற்கு இப்போது கையாளப்பட்டுவரும் முறைகள் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும்தான். எந்த இடத்தில் யார் எந்த அக்கிரமத்தைச் செய்தார்கள் என்று கவனித்துக் கொண்டுதான் வருகிறோம். ஆனால் சில சமயம் ஏராளமான காலிகளின் கூட்டமும் பஸ்களைக் கொளுத்தும் முரட்டுக் கூட்டமும் ஒன்றாகச் சேர்ந்து பல அக்ரமங்களைச் செய்தால், அவை மேலும் பல அக்ரமங்களைச் செய்யாமல் பார்த்துக் கொள்வதற்காகத்தான் தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்யப்பட வேண்டியிருக்கிறது.

## பெருமைதான், ஆனால்...

சில வருஷங்களுக்கு முன்பு பக்கத்திலுள்ள ராஜ்யத்தின் அமைச்சர் ஒருவர் "எங்கள் ராஜ்யத்தில் போலீசார் தடியடிப் பிரயோகமோ, கண்ணீர்ப் புகைப் பிரயோகமோ செய்யவேண்டிய அவசியமில்லை. எங்கள் ராஜ்யத்தில் போலீசாருக்கு அந்த வேலைகளே கிடையாது" என்று மிகப் பெருமையாகச் சொல்லிக் கொண்டார்.

ஆனால், "கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் தடியடிப் பிரயோகமும் செய்யாமலே நாங்கள் சமாளிக்க முடியும்" என்று அவ்வளவு தைரியமாகவும் பெருமையாகவும் அவர் சொல்லிக் கொண்டதற்குப் பிறகு, அந்த ராஜ்யத்தில் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் நடந்திருக்கின்றன என்பதையும், அதோடு மாணவர்கள்மீது கூட நடந்திருக்கிறது என்பதையும் பத்திரிகைகளின் மூலம் அறிந்தோம். நிலைமையின் நிர்ப்பந்தம் அப்படிச் செய்தாக வேண்டியுள்ளது.

### விசித்திரமான ஜனநாயகம்

தொழிலாளர்களின் துயரங்கள் குறித்துக் கிளர்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் நடந்தால் மேலும் பல விபரீதங்கள் நிகழ்கின்றன. அந்த விபரீதங்கள் நிகழ்ந்த பிறகும்கூடப் போலீசை உபயோகிக்கக்கூடாதென்றும் தொழிலாளர்களையும் பலாத்காரத்தில் இறங்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் சிலர் யோசனை கூறுகின்றனர். அப்படி நடக்க வேண்டுமென்றால், தொழிலாளர்களின் எந்தக்கோரிக்கையையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டாக வேண்டும். யார் எந்தக் கோரிக்கையை விடுத்தாலும் அது பொதுமக்களைப் பாதிக்கக்கூடியதாக இருந்தாலும், பொதுமக்களைச் சுரண்டக்கூடியதாக இருந்தாலும்—அரசாங்கம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமா? விசித்திரமான ஜனநாயகக் கொள்கை அது.

அதன்படி, யாராவது நான்கு உத்தியோகஸ்தர்களாவது, நான்கு தொழிலாளர்களாவது ஒன்று சேர்ந்துகொண்டு ஏதாவது கோரிக்கை விடுத்தால் அதைச் சர்க்கார் உடனே நிறைவேற்றிவிட வேண்டுமென்றும், அவ்வாறு நிறைவேற்றுவிட்டால்தான்

கிளர்ச்சி, தகராறு வருகிறதென்றும், பின்னர் வரும் தகராறைச் சமாளிப்பதைவிட முதலிலேயே விடுக்கப் படும் கோரிக்கையை நிறைவேற்றிவிடுவது நல்லது என்றும் கூடச் சொன்னூர்கள். அவ்வாறு நாங்கள் எப்படி நடக்க முடியும்?

## எப்படி ஒப்புவது?

கோரிக்கை நிறைவேற்றப்படக் கூடியதாக இருந்தால்தான் அதை நாங்கள் நிறைவேற்ற முடியும். யாராவது ஏராளமாகப் பணம் கேட்டால் யார் வீட்டுப் பணத்தை எடுத்து நாங்கள் அவர்களுக்குக் கொடுக்க முடியும்?

தொழிலாளர்களின் பிரச்சினைகளை இந்த அரசாங்கத்தார் மிகுந்த அனுதாபத்துடன்தான் கவனித்து வருகிருர்கள். குற்றம் சாட்டப்பட்ட முதலாளிகளின்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயங்குவதில்லை. ஆனல், பின்னர் தகராறு வரும் என்பதற்காக, தொழிலாளர்கள் கேட் பதையெல்லாம் அரசாங்கம் உடனே கொடுத்துவிட வேண்டுமென்ற கொள்கையை நாங்கள் எப்படி ஒப்புக் கொள்ள முடியும் என்று கேட்க விரும்புகிறேன்?

## கொள்கைப் பொறுப்பு

போலீசின்மீது குற்றம் சாட்டுவதற்கில்லை என்றும் இந்த அரசாங்கம் தவருன முறையில் போலீசைப் பயன்படுத்திக் கொள்கிறது என்றும் எதிர்க்கட்சியினர் கூறுகிருர்கள். அதற்குப் பிறகு, அரசாங்கம் போலீஸ் செய்வதையெல்லாம் எப்போதும், விடாமல் ஆதரிக் கிறது என்றும் சொல்கிருர்கள்.

அரசாங்கத்தின் கொள்கையைப் பொறுத்தவரை யில், நான் முன்பே சொன்னதை இப்போது மீண்டும்

சொல்கிறேன். அரசாங்கத்தின் அனுமதியின்றி தனியாக ஒரு கொள்கையைப் போலீசார் அனுசரிக்க முடியாது. போலீசார் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்கிறது. ஆனால் அவ்வப்போது எடுத்துக்கொள்ளப்படும் குறிப்பிட்ட நடவடிக்கைகள், ஆங்காங்கே இருக்கும் அந்த அந்த அதிகாரிகளைப் பொறுத்தவை.

## குற்றக் கண்டு பிடிப்பு

குற்றங்கள் சரியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். குற்றங்கள் கண்டு பிடிப்பதிலே இப்பொழுது வரவர அபிவிருத்தி ஏற் பட்டுக் கொண்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி, நம்முடைய போலீஸ் திறமையாகப் பணியாற்றி வருகிறது. நான் இது போதும் என்று சொல்லவில்லை. மேலும் ஆண்டுதோறும் தங்கள் திறனையும் ஆற்றலை யும் விரிவுபடுத்திக் கொள்ளுவதில் அவர்கள் அக்கறை யோடும், உற்சாகத்தோடும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

குற்றங்களைக் கண்டு பிடித்தபின் சம்பந்தப்பட்ட வர்கள் மீது போலீசார் கோர்ட்டில் வழக்குத் தொடர் கிறார்கள். இதில் குற்றங்கள் ருசுவாகி வெற்றிபெறும் வழக்குகள் விகிதம் நம் மாநிலத்தில் அதிகம். போலீஸ் வழக்குத் தொடர்ந்தவற்றில் பெரும்பாலான வழக்கு கள் ருசுவாக்கப்பட்டு தண்டனை கிடைத்திருக்கிறது. மதுவிலக்குக் குற்றங்கள் என்று எடுத்தால் எண்பது, எண்பத்தைந்து சதவீதம் கூடக் குற்றம் ருசுப்பிக்கப் பட்டிருக்கிறது.

## நிரூபிக்கும் திறமை

குற்றங்களைக் கண்டுபிடித்தாலும் கோர்ட்டாருக்குச் சந்தேகமற நிரூபித்தாக வேண்டியிருக்கிறது. ஆயிரம் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டாலும் நிரபராதியாயுள்ள ஒருவரும் தண்டனை பெறக்கூடாது, அந்த உயர்ந்த முறையில் நீதிபதிகள் சாட்சிகளை எல்லாம் துருவித் துருவி ஆராய்கிறார்கள். சிறிது சந்தேகம் ஏற்பட்டாலும் அந்தச் சந்தேகத்தின் பலனைக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குச் சாதகமாகத் தந்து தீர்ப்பு வழங்கிவிடுகிறார்கள். வழக்கறிஞர்கள் எல்லாம் தங்களுடைய புத்தி சாதுர்யத்தைக் காட்டுகிறார்கள். குற்றம் செய்கிறவர்கள் யாரும் சாட்சி வைத்துக் கொண்டு செய்வதில்லை.

ஆகவே, வழக்குகளை நடத்துவது ரொம்பச் சங்கடமான காரியம். இந்த அளவு போலீஸ்காரர்கள் தொடர்ந்த வழக்குகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் இது அவர்களுடைய திறனைத்தான் காட்டும். அவ்விலாகா குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் மேற்கொள்கிற நடவடிக்கைகளின் திறனைத்தான் காட்டும்.

## பொதுமக்கள் உதவி

எந்தச் சட்டம் கொண்டுவந்தாலும் அதை மீறுகின்ற இயல்புடையவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். மதுவிலக்குக் குற்றங்கள் சரியான முறையில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆகவேதான் மறுபடியும் இதைப் போலீஸ் இலாகாவின் பொறுப்பில் இருந்து மாற்ற விரும்பவில்லை. இன்றைக்கு எத்தனையோ பேர்கள் குடியில் இருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள், அதன் பலனை அவர

வர்களுடைய குடும்பங்கள் அனுபவித்துக் கொண்டு தான் வருகின்றன.

நான் ஒன்று கூற விரும்புகிறேன். கட்சி வேறு பாடின்றி அனைவரும் இந்த மாதிரிக் குற்றங்களைக் கண்டுபிடிக்கப் போலீசாருக்கு உதவி அளிக்க வேண்டும். எங்கு இந்த மாதிரிக் குற்றங்கள் நடை பெறுகின்றன என்பதை, எந்த முறையிலே போலீசா ரிடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டுமோ அந்த முறை யில் சொல்லி, போலீசார் அந்தக் குற்றங்களைக் கண்டு பிடிக்க உதவி அளிக்க வேண்டும்.

போலீசார் ஒரு இடத்தில் 'ரெய்டு' (வேட்டை) செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் 'ரெய்டு' செய்து, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து வழக்குப் போடுகிறார்கள். இந்த மாதிரிக் குற்றங் களைக் கண்டுபிடிக்க உருப்படியான வகையில் போலீ சாருக்கு உதவி அளிக்கவேண்டும். இப்போது மக்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்று நான் சொல்ல வில்லை. நல்ல வகையில் அவர்கள் உதவி அளித்தால் இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிப்பது எளிதாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**ஜாமீன் நடவடிக்கை**

இரண்டு ஊர்களுக்கு இடையில் கட்சி அடிப்படை யில், அரசியல் வித்தியாசத்தின் காரணமாகச் சண் டைகள் ஏற்படுகின்றன என்றால் அது அரசியலையே அவதூறுக்குவதாகும். சில பிராந்தியத்திலே அரசியல் அடிப்படையில் சண்டை போடுவதாகக் கூறுகி றார்கள். மற்ற இடங்களில் அப்படி இல்லை.

ஊரில் அமைதியை நிலைநாட்டுவது போலீசாரின் பொறுப்பு. போலீசார் ஜாமீன் நடவடிக்கை எடுத்துக்

கொள்ளுகிருர்கள். ஜாமீன் நடவடிக்கை எடுத்துக் கொள்வது ஒரு முறை. ஒரு சாராரின் மீது மட்டுந் தான் ஜாமீன் நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகச் சொல்கிருர்கள். ஒரு சாராரில் இத்தனை பேர், இன்னெரு சாராரில் இத்தனை பேர் என்று அரசியல் வகையில் கணக்குப் பார்த்துச் சொல்கிருர்கள். யார் பொறுப்பாக இருந்தாலும் இரு சாரார் மீதும் ஜாமீன் நடவடிக்கை, அமைதியை நிரந்தரமாக ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன்தான், எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

## மரியாதைக்கும் வரம்பு

யாராக இருந்தாலும் போலீசார் மரியாதையுடன் தான் நடந்து கொள்வார்கள். சட்டசபை அங்கத்தினர்கள் மட்டுமல்லாது, பிரஜைகளிடத்தில்கூடப் போலீசார் மரியாதையுடன்தான் நடந்துகொள்கிருர்கள். ஆனல், அதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது.

போலீசாரிடம் சென்று புகார் செய்யலாம். ஆனல் தாங்கள் சொல்வதுதான் சரி என்ற முறையில் பிடிவாதமாக அங்கே விவாதிக்கத் தொடங்குவார்களானல் அவர்களைப் பார்த்து ‘போ’ என்றுதான் போலீசார் சொல்வார்கள். தங்களைப் பெருமிதமாக நினைத்துக் கொண்டு போலீசாரிடம் தாறுமாருகப் பேச ஆரம்பித்தால் அவர்கள் ‘போ’ என்று சொல்வதைத் தவிர வேறு வழி இல்லை. வேண்டுமானல், ‘நீங்கள் தயவு செய்து போங்கள்’ என்று சொல்ல வேண்டுமென்று போலீஸ்காரர்களுக்கும் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் கூறலாம்.

நாம் எப்படிப் போலீசாரிடம் நடந்து கொள்ள வேண்டுமென்பதும் நமக்குத் தெரிய வேண்டும். போலீசாரிடம் நிலைமையை எடுத்துச் சொல்வதில் தவறு

இல்லை. அவர்களிடம் சண்டை போடக் கூடாது, தகராறு செய்யக்கூடாது.

ஏழை மக்கள் வாழும் குடிசைகளில் சோதனை போடப்படுகிறது என்பதற்காக மதுவிலக்குச் சோதனை போடுவதையே ஆட்சேபிக்கக் கூடாது. ஏழை மக்கள், பணக்காரர்கள் என்ற வித்தியாசம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை.

**சலுகையில்லை**

பணக்காரர்களுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்துக்குக் கிடையாது. யாராக இருந்தாலும் போலீசார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தான் செய்கிறார்கள். பச்சையாகக் குற்றம் செய்தவர்கள்கூடத் தாங்கள் குற்றம் செய்ததாக ஒப்புக் கொள்வதில்லை. அக்கிரமமாகச் சோதனை போட்டார்கள் என்றுதான் சொல்வார்கள். வேண்டுமென்றே அப்படிச் செய்வதாக இருந்தால் அதுபற்றிக் கவனம் செலுத்தலாம்.

போலீசார் குற்றங்களைப் போதிய அளவு கண்டுபிடிக்கவில்லை என்று சொல்லும்போது ஒன்றை உணருவார்கள். இவ்வளவு ஜாக்கிரதையாகக் கண்டுபிடிக்கும்போதே, எத்தனையோ புகார்கள், அபாண்டமான புகார்கள் கூறப்படுகின்றன. அதைப் பார்த்துத்தான் செய்யவேண்டும். பழக்கப்பட்ட குற்றவாளிகள் சுலபமாக ஒப்புக் கொள்ளமாட்டார்கள். சிலர் சாட்சி சொல்வதற்குக்கூட மறுக்கிறார்கள். இதுபோன்ற சங்கடங்கள் இருக்கின்றன.

# 12. அரிய சேவை

போலீசார் பார்த்து வருவது ஒன்றும் சுலபமான வேலை அல்ல. கஷ்டமான வேலை. சம்பளம் எவ்வளவு கொடுத்தாலும், இந்த வேலை சுலபமான வேலை அல்ல. ஏற்கனவே நான் சொன்னதுபோல்; இது சர்க்கசில் கம்பியில் நடக்கிற மாதிரியான வேலை. ஆபத்தான வேலை. பின்னால் பார்த்தாலும் ஆபத்து, பின்னால் பார்க்காவிட்டாலும் ஆபத்து.

## சுமுக முறை

போலீசார் தங்கள் வேலையைக் கூடிய வரையில் நன்றாகச்செய்து வருகிறார்கள். ஆங்காங்கு தவறு கள் இருக்கலாம். தவறுகள் இல்லை என்று மறுக்க வில்லை. தவறுகள் இருந்தால், அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். இருந்தாலும் சில நிலைமைகள்—அசம்பாவிதமான நிலைமைகள், விபரீத மான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாதிரி யான நிலைமைகள் ஏற்பட்டபோதிலும் சுமுகமான முறையில், சிறந்த முறையில் போலீசார் இது வரை யில் நடந்துகொண்டு வந்ததற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டு நீதி இலாகா இருக்கிறதே, அதைப்போல் போலீஸ் இலாகாவும் அரசாங்கத்திற்கு மேலாக இருக்க வேண்டுமென்றும் சொல்கிருர்கள். அரசாங்கத்திற்கு மேலாக இருக்க வேண்டும் என்று சொன்ஞல், அவர்கள் யாருக்குப் பணி செய்வது? நாம் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். அந்தப் பாதுகாப்புக் கொடுப்பது யாருடைய பொறுப்பு? அது அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகையால்தான் போலீஸ் இலாகா அரசாங் கத்தின் கீழ் இருந்துவருகிறது.

## சுருக்கெழுத்துக் குறிப்பு

போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள், கூட்டங்களில் பேச்சுக்களை எழுதுவதுபற்றி புகார் கூறப்படுகிறது. நமக்கு வேண்டிய சில தகவல்களுக்காக இவர்களைக் கொண்டு பேச்சுக்களை எழுதச் செய்கிறேம். யாரோ புரட்சிகரமானவர்கள் என்று எண்ணியோ, யாரோ ஆபத்தானவர்கள் என்று எண்ணியோ, யார்மீதும் ஆத்திரம் கொண்டோ, நாங்கள் இதையெல்லாம் செய்யவில்லை.

சுருக்கெழுத்தாளர்கள், பேச்சுக்களை எழுதுவது நல்லதுதானே? அந்தப் பேச்சுக்களின் பேரில் பிறகு வழக்கு வந்தால், சுருக்கெழுத்தாளர் எழுதியது இருக்கும்போது, உண்மையில் பேசப்பட்டது என்ன என்பது தெரியும். தவருன சாட்சியங்கள் வெற்றி பெருது. சுருக்கெழுத்தாளர்கள் பேசுவதை அப்படியே எழுதுகிருர்கள். காங்கிரஸ்காரர்கள் பேசுவதை இவர்கள் எழுதவில்லை என்ருல், காங்கிரஸ் காரர்களின் பேச்சுக்கள் பற்றியும் எங்களுக்குத் தகவல் வருகிறது. ஆகையால் நாங்கள் எதிர்க்கட்சிகளின் மீது ஆத்திரப்பட்டோ, எதிர்க்கட்சிகளைக் கண்டு

பயந்தோ, ஆளும் கட்சியின் பலத்தைப் பெருக்குவதற்காகவோ, எதிர்க்கட்சிகளைப் பலவீனப்படுத்துவதற்காகவோ இவ்வாறு செய்கிறோம் என்பதில்லை; இதை நாங்கள் செய்வதற்குக் காரணங்கள் அவை அல்ல.

**பெருத்த நியூசன்ஸ்**

ஒலிபெருக்கி விஷயமாக லைசென்ஸ் வாங்க வேண்டியிருக்கிறதென்று சிலர் குறைபட்டுக் கொள்கிறார்கள். ஒலிபெருக்கி என்பது அதை உபயோகிப்பவர்களுக்குச் சௌகரியத்தை அளிக்கிறது என்பது உண்மை. ஆனால், அதில் சம்பந்தம் இல்லாதவர்களுக்குப் பெருத்த 'நியூசன்ஸ்' ஆக இருக்கிறது.

கல்யாணத்தில் அனுபவிக்கின்றவர்கள் அனுபவிக்கட்டும். கல்யாணம் என்றால், சுற்றுப்புறத்தில் இருக்கிறவர்களுக்குக் காலையில் 4 மணிக்கெல்லாமே தூக்கம் கெட்டுப்போய் விடுகிறது. இசைத் தட்டை வேறு போட ஆரம்பித்து விடுகிறார்கள். இசைத்தட்டைக் கேட்கிறவர்கள் கேட்கலாம். ஆனால் இதிலெல்லாம் கட்டுப்பாடு வேண்டும்.

தொழிலாளர் கூட்டம் என்றால்கூட லைசென்ஸ் வாங்கவேண்டியிருக்கிறதென்று சொல்லப்பட்டது. இல்லா விட்டால், தகராறுகள் வருகின்றன. ஒரே இடத்தில் இருவர் கூட்டத்தை நடத்த முற்படுகிறார்கள். இதில் ஓரளவு கட்டுப்பாடு வேண்டும். அந்த அளவில் கட்டுப்பாடு விதிக்கிறோமே தவிர, எதிர்க்கட்சியினர் நடத்தும் கூட்டத்திற்குத் தடை விதிப்பது என்பது அல்ல.

**காவலன் யார்?**

மற்றும், போலீசார் என்பதற்குத் தமிழில் "காவலர்" என்று சொல்வது எனக்கு உடன்பாடானதல்ல. "காவலன்" என்கிற வார்த்தை அகராதிகளில் அர

சனுக்குக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அரசனுக்குத் தான் அந்தப் பொறுப்பு; அதாவது காவல் புரிகின்ற பொறுப்பு. காவலன் என்னும் பெயர் அரசனுக்குத் தான் வந்தது. அப்படி அரசனுக்கு இருக்கிற பெயரை போலீசாருக்கு வைப்பது என்பதை நான் ஒப்புக் கொள்வதாக இல்லை. அப்படியே காவலர் ஆட்சியே அமைந்துவிடுகிறது என்றால், அதை ஜனநாயக ஆட்சி என்று சொல்லிவிட முடியாது. அதைச் சர்வாதிகார ஆட்சி என்று சொல்லிவிடலாம். 'காவலர்' என்பது ஒரு தமிழ் வார்த்தையாக இருந்தாலும், அது ஒரு நல்ல அர்த்தத்தைக் கொடுக்காததால், அதைத் தமிழ் வார்த்தை என்பதற்காக எடுத்துக்கொள்ளமுடியுமா? அது தமிழ் வார்த்தை என்பது சரி. ஆனால், அதிலே அர்த்தம் இருக்கவேண்டும். ஒன்றை நாம் ஏற்றுக் கொள்வதாக இருந்தால், அதிலே கருத்து அடங்கி யிருக்க வேண்டும்.

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்'களாக (காவலர்களாக) இருக்கலாம். ஆனால், எங்களால் "மன்னனர்கள்" என்று ஒப்புக்கொள்ள இயலவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிக்கு வருகின்ற காலத்திலே வேண்டுமானால், மன்னர்களாக வைத்துக் கொள்ளட்டும். அதை நாம் அப்போது வேடிக்கை பார்க்கலாம். இந்த நாட்டிலே உள்ள எல்லோருக்கும் பிரஜா உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமை போலீசாருக்கும் இருக்கிறது. ஆனால், "காவலர்" என்ற பெயரை எடுத்து விட்டதைப்பற்றிப் பிரமாதமாகச் சொன்னார்கள். ஏதோ பெயர்தானே என்று பிரமாதமாகச் சொல்லிவிடலாம்.

**விளக்குவதில் சங்கடம்**

காரணம் என்னவென்றால் இப்பொழுது சொல்கிறேன். முன்பு காவல் நிலையம் என்றிருந்தது. இப்

படி இருப்பதனுல், கோர்ட்டிலே சிரமம் ஏற்படுகிறது என்று நான் சொல்வேன். நாம் இயற்றும் சட்டங்களில் போலீஸ் விஷயம் பல வழக்குகளிலே கோர்ட்டுகளில் வரும். அதை வியாக்யானம் செய்வதில், அதாவது விளக்கங்கள் கொடுப்பதில் இப்படி 'காவல் நிலையம்' என்றிருந்தால், அதனுல் பல சங்கடங்கள் ஏற்படும். ஒவ்வொருவருடைய உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். வழக்குகளில் நீதி வழங்குவது அந்தந்த வார்த்தையின் அர்த்தத்தைப் பொறுத்ததாக இருக்கும்.

ஆகவே, 'போலீஸ்' என்கிற இடத்திலே 'காவல்' என்று குறிப்பிட்டு விட்டால், அது எப்போதும் போலீஸ் என்பதைக் குறிக்காது. காவல் என்று எழுதிவிடலாம். ஆனுல் அது போலீஸ் என்று அர்த்தப்படாது. இதைத்தான் நான் முன்பு, "நாளைக்கு இது தவறுதலாக ஆகும்" என்று சொல்லிக்கொண்டிருந்தேன்.

## புனிதப் பணிக்கு இழுக்கு

இது சம்பந்தமான விஷயங்களைப் பரிசீலனை செய்யும் "ஆட்சி மொழிக் குழு" இருக்கிறது. அவர்கள் ஆட்சிச் சொல் அகராதி போடுகிருர்கள். அவர்கள் 'சப்-மாஜிஸ்திரேட்' என்பதற்கு என்ன வார்த்தை போடுவது என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் இப்படிப் பல ஆங்கில வார்த்தைகளுக்குத் தமிழ் வார்த்தைகள் போடுவதிலே கஷ்டங்கள் எல்லாம் ஏற்படுகிறது. அதையெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆனுல், நான் குறிப்பிட விரும்புவது, நாம் 'காவலர்' என்று சொல்லிவிடலாம். ஆனுல், போலீஸ்தான் காவலர் என்று சொல்லிவிட முடியாது. 'காவலர் கூட்டம்' என்று

வந்த பிறகு, இந்த வார்த்தையைப் போட்டால் விபரீதமான குழப்பங்கள்தான் வரும்.

திருவொற்றியூரில் நடந்த ஒரு தி. மு. க. கூட்டத்திற்குக் காவலர் கூட்டம் என்று சொன்ன பிற்பாடு, அந்தப் பெயர் இனி போலீஸுக்கு ஒருக்காலும் கூடாது. அப்பெயர், புனிதமான பணியைச் செய்பவர்களுக்கு இழுக்கை ஏற்படுத்தும். இனி காவலர் என்ற பெயர் வேண்டாம், போலீஸ் என்றே இருக்கட்டும் என்று குறிப்பிட்டேன். திரும்பவும் அதைத்தான் கூறுகிறேன்.

## தவருன அர்த்தம்

ஊர்க்காவலர், நகரக் காவலர் என்றிருக்கிறது என்று சொன்னுர்கள். ஊர்க் காவலருக்கு என்ன அர்த்தமோ, அதே அர்த்தம் தானே தி. மு. க. காவலர் என்று சொன்னுலும் வரும்? அப்படியென்ருல் அவர்கள் தி. மு. க. வை காக்கக் கூடியவர்களா? இதிலே இப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அதிலும், சட்டங்கள் பண்ணுகிறபோது, அவைகள் வழக்குகளிலே வரும்போது சொற்கள் இன்ன அர்த்தத்தில் உள்ளன என்பது குறிப்பாக இருக்க வேண்டும்.

இப்படி போலீஸ் என்றிருந்து விட்டால், எதிர்க்கட்சி வக்கீல் தவருன அர்த்தம் பண்ணுவதற்கு இடமிருக்காது. வழக்கிலே சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு நீதி அளிக்கப்பட வேண்டுமென்ருல், உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ருல், இப்படிப்பட்ட வார்த்தைக்குப் பதில் 'போலீஸ்' என்றிருப்பது நல்லது. ஆங்கில மொழி இருக்கிறதே, அது ஒரு நல்ல மொழி. அது ஒரு உலக மொழி. ஆங்கிலேயர் ஆட்சி நடத்

திய காலத்திலே உபயோகப்படுத்திய வார்த்தைகளை அப்படியே நாம் வைத்துக் கொள்வதால் தவறில்லை.

## பிரிவினை மனப்பான்மைக்கு இடமில்லை

பொதுவாக சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பிரிவினைச் சக்தியை வளர்க்கக்கூடாது. பிரிவினை சக்திக்கு இடம் கொடுக்கக்கூடியவர்களுக்குச் சர்க்காரில் இடம் கிடையாது. மற்ற உத்தியோகஸ்தர்கள் ஏதோ தவருக நடந்தாலும் நடக்கலாம். போலீஸ்காரர்கள் அவர்களெல்லோரையும் விட முக்கியமானவர்கள்.

போலீஸ்காரர்கள் தங்களுடைய கடமை, பொறுப்பு என்ன என்பதை உணர வேண்டும். இந்த நாட்டைப் பாதுகாப்பது அவர்களுடைய வேலை. நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அவர்கள்தான் பொறுப்பு. அப்பொறுப்பை நிறைவேற்றும் முறையில் நாட்டின் பிரிவினைச் சக்திகளை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். பிரிவினை சக்தி என்ருலும் அதைத் தடுக்கச் சட்டம் இருக்கிறது. போலீசாருக்கும் ஒரு வரம்பு இருக்கிறது. பிரிவினைச் சக்திக்கு அவர்கள் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டார்கள்.

போலீஸ்காரர்களிடையே பிரிவினை மனப்பான்மை இருந்தால் அவர்களுக்குப் போலீஸில் இடம் கிடையாது என்பதை மீண்டும் சொல்கிறேன். நான் இதைச் சொல்லும்போது ஆவேசத்துடன் சொல்லவில்லை. ஆவேசத்தை அடக்கிக் கொண்டுதான் சொல்லுகிறேன். இதைச் சொல்லும்போது உணர்ச்சி வசப்பட வேண்டாம். நாட்டின் ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்கும் குறுக்கே யார் நின்ருலும் அப்படி நிற்பவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அவர்களுக்கு ஒருக்காலும் இடம் கொடுக்க முடியாது.

## குடும்ப நலன்

போலீசார் கஷ்டநிலையை எப்படியோ சமாளித்துச் சீரிய முறையில் மக்களுக்கு உற்சாகத்துடன் பணியாற்றி வருகிறார்கள். அதுவும் அவர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் - உயிர்ப்பலிகூட ஏற்படுகிறது—அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீசாரின் குடும்ப நலன்களைப் பொறுத்து அவர்களுக்கான தொழில்கள் எல்லாம் அமைக்கப்பட்டு வருகின்றன. அதோடு, குழந்தைகள் விஷயத்திலும், ஒய்வுபெற்ற போலீசாரின் குழந்தைகள் படிப்பு சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாம்கூடக் கவனிக்கப்பட்டு வருகிறது. அதற்காகவே 'சகாய நிதி' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே போலீசாரும் அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அரசாங்கமும் உதவி போலீசாரும் அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அரசாங்கமும் உதவி அளிக்கிறது. பொதுமக்களும் நன்கொடை அளிக்கிறார்கள். போலீஸ் துறையிலேதான் இன்றையத் தினம் அவர்களுடைய குடும்ப நலன், குழந்தைகள் நலன், ஓய்வு பெற்றவர்கள் நலன் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது.

## குடியிருப்பு வசதி

முக்கியமாகப் போலீஸாருக்கு வீட்டுப் பிரச்சினையைத்தீர்க்கவேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு வீட்டுக் கவலை இருக்கக்கூடாது. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசாங்கமும் இதில் அக்கறை காட்டி வருகிறது. இதற்காக கடன் கொடுக்கப்படுகிறது. முன்பு செலவு செய்திருந்

தைவிட அதிகமாகச் செலவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் சில காலதாமதம் ஏற்படுகிறது. அதோடு வீடு கட்டுவதற்கு வேண்டிய மனைகள் போதுமான அளவு கிடைப்பதில்லை. இருந்தாலும் கலெக்டர்கள் எல்லாம் கூடிய சீக்கிரத்தில் ஒதுக்கியிருக்கின்ற பணத்தைப் பயன்படுத்தி மனைகள் வாங்கிக் கட்டுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

போலீசாருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் தமிழ் நாடுதான் முதன்மையாக நிற்கிறது. மத்திய அரசாங்கத்திலிடமிருந்து வாங்கி, கொஞ்சம் அதிகமாகவே பணம் வாங்கிச் செய்திருக்கிறோம். மற்ற மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விகிதாசாரத்தைப் பார்த்தால் நாம் வாங்கியது கொஞ்சம் அதிகம்தான் என்று அவர்கள்கூட எடுத்துக்காட்டினார்கள். ஆனாலும், நமக்கு வேண்டியதைக் கொடுக்கத் தயங்கவில்லை. கடன் வாங்குகிறோம். மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் குறைந்தபட்சம் 100-க்கு 80 பங்கு போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்டியாக வேண்டும் என்று திட்டம் போட்டு நடத்தி வருகிறோம்.

### க்ஷேமநலத் திட்டம்

போலீஸ்காரர்களின் வசதிக்காக, முக்கியமாக அவர்களுடைய குடும்பத்திற்காக க்ஷேமநலத் திட்டங்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. போலீசாருடைய குடும்பத்தில் உள்ளவர்கள் தொழில்களில் ஈடுபட்டு, அதன்மூலம் அவர்களுடைய வருமானத்தை உயர்த்தும் வகையில், தொழில்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.

பால் பண்ணை வைப்பது, மாடுகள் வாங்கிக் கொடுப்பது, தையல் போன்ற மற்றத் தொழில்கள்

அமைக்கவும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். போலீஸ்காரர்களுடைய குடும்பத்தினருக்குக் கடன் கொடுக்கிறோம். அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக்கொள்கிறார்கள். இந்த வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து அதன் மூலம் அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்கள் ஆண்டுதோறும் லட்சக் கணக்கான ரூபாய்க்கு விற்பனையாகி வருகின்றன.

## மனோபாவத்தில் மாறுதல்

சுதந்திரம் வந்த பிறகு போலீஸாருடைய மனோ பாவம் அடியோடு மாறியிருக்கிறது. அதை நான் உறுதியாகச் சொல்ல முடியும். அவர்கள் மக்களுக்குச் சேவை புரிகிறார்கள். வெள்ளம் வந்தாலும் சரி, தீ விபத்து ஏற்பட்டாலும் சரி, புயல், காற்று அடித் தாலும் சரி, எப்படி அவர்கள் உழைக்கிறார்கள், சேவை புரிகிறார்கள்! கடுமையாக உழைக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அவர்கள் அபிவிருத்தி வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

போலீஸ் கிராமத்தை எடுத்துக்கொண்டு பார்த் தால், அங்கே அவர்கள் மண் வெட்டி, வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். இதர வேலைகளெல்லாம் செய் கிறார்கள். "இது சுதந்திர நாடு, சோஷலிஸ அமைப் பிலே மக்கள் இன்புற்று வாழ்வதற்கு உரிய வகையில் நாங்களும் பங்கு செலுத்துவோம்" என்ற எண்ணம் பரிபூரணமாகப் போலீஸுக்கு வந்திருக்கிறது.

## அரிய சேவை

எதிர்க்கட்சியினர் கேட்கிறார்கள், எங்களுக்கு என்ன போலீசைப்பற்றி பயமா என்று. எங்களுக்கு மட்டும் என்ன பயமா என்று நான் கேட்கிறேன். பிரிட்டிஷ் ஆட்சி இருந்தபோது போலீசை வைத்துக்

கொண்டா ! சுதந்திரம் பெற்ரும்? போலீசை வைத்துக் கொண்டா முனிசிபல் தேர்தல்களில் வெற்றி பெற்ரும். க்ாங்கிரஸ் கட்சிக்குப் போலீஸ் உதவி வேண்டியதில்லே.

போலீஸ் நியாயமாக நடக்கவேண்டும், பாரபட்சமில்லாமல் நடக்கவேண்டும். போலீசார், அவர்களது வேலேகளே ஒழுங்காகத்தான் செய்துகொண்டு வருகிருர்கள், அவர்களது வேலே கடினமானதுதான். அவர்களின் குறைகள் எனக்குத் தெரியாமல் இல்லே. இன்னின்ன குறைகள் இருக்கின்றன, இன்னின்ன இடத்தில் இப்படி இப்படிக் குறைகள் இருக்கிறது என்றெல்லாம் நானும் சொல்லத்தான் செய்கிறேன். இன்னின்ன அதிகாரி இன்னின்ன தவறுகள் செய்துவிட்டார் என்று சொல்கிறேன், அவர்களும் சொல்கிருர்கள்.

ஆகவே, குறைகளேப் பற்றிக் குறைகள் ஏற்படும்போது நாங்கள் கண்ணே மூடிக்கொண்டு இருக்கவில்லே. கூடியமட்டில் கலாட்டா இல்லாமல், தொந்திரவு இல்லாமல் காரியங்கள் செய்துகொண்டு வருகிருேம். ஒரு வீட்டை மூடாமல் வைத்தால் போதும், திருட்டுப்போகும்.

ஆக, போலீசின் அரிய சேவைகளேப் பாராட்ட விரும்புகிறேன். அதே சமயத்தில், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மக்களின் நல்வாழ்விற்காகப் போலீஸ் செய்யும் பணிகளுக்கு வேண்டிய ஒத்துழைப்பையும், ஆதரவையும் தயங்காமல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

# 13. ஊர்க்காவல் படை

இப்போது நடெங்கும் ஊர்க்காவல் படை அமைக்கப்பட்டு இருக்கிறது. இது பற்றிச் சில தவருன கருத்துக்கள் இருக்கின்றன. ஊர்க்காவல் படையில் சேர வேண்டுமென்று விரும்புகிறவர்கள்கூட, இதிலே சேர்ந்தால் ஏதோ உத்தியோகம் கிடைக்கும், சம்பளம் கிடைக்கும், வேலையில்லாதவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று கருதுவதாகச் சிலர் நினைக்கிருர்கள். இது மிகவும் தவருன கருத்து என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இது அவரவர் மனம்விரும்பித் தாங்களாக வந்து சேரும் படை என்றுதான் சட்டத்திலே போட்டிருக்கிறோம்.

## வேலை வாய்ப்பு அல்ல

முழு நேர ஊழியர்களா, அவர்களுக்குச் சம்பளம் உண்டா என்ருல் இதில் சம்பளம் கொடுக்கவேண்டும் என்ற பிரச்சினை வரவில்லை. எந்தத் துறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிருர்களோ, அவர்கள் எல்லோரும் அந்தந்தத் துறையிலுள்ள அதிகாரிகளின் அனுமதி பெற்று இதில் சேரலாம். அவர்களுடைய வேலைகளைப் பார்த்துக்கொண்டே இதில் பணியாற்றலாம். மற்ற துறைகளில் பணியாற்றுகிறவர்கள் இதில் சேர்ந்து பணியாற்றலாம். அவர்களுடைய சேவையை

இந்தப் படையிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். வேறு துறையில் வேலை பார்க்கிறவர்கள் அந்தந்த ஸ்தாபனத்தில் தொழில் புரிகிறவர்களை இதற்குத் தேர்ந்தெடுத்தால் அவர்களையும் இதில் பணிபுரிவதற்கு எடுத்துக் கொள்ளலாம். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கக்கூடிய காலங்களில் அந்தந்தத் துறையி லுள்ள அதிகாரிகளுடைய அனுமதி பெற்று இதில் வந்து பயிற்சி பெறலாம். அதனால்தான் இதற்கு சம்பளம் என்று வைக்கவில்லை. இதை ஒரு 'வேலை வாய்ப்பு' ஆக கருதக்கூடாது என்பதை முதலில் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**நகரங்களில் மட்டும்**

இன்னும் இந்தப் படை சம்பந்தமாக இன்னொரு குழப்பமும் தெரிவிக்கப்பட்டது. கிராமத்தில் அமைக் கப்பட்டிருக்கிற கிராமத் தொண்டர் படையைப் பற்றி குறிப்பிட்டு அத்துடன் இதை ஒப்பிட்டு பேசப்பட்டது. அந்தத் தொண்டர் படைக்கு இருக்கக் கூடிய வேலை வேறு, இந்தப் படைக்கு இருக்கக்கூடிய வேலை வேறு. நம்முடைய தமிழ் நாட்டில் கிராமத் தொண்டர் படை என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அது என்னென்ன வேலை செய்யவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் இதற்கும் ரொம்ப வித்தியாசம். இதை எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் வைக்கவேண்டும் என்றும், ஒவ் வொரு கிராமத்திலும் வைக்கவேண்டும் என்றும் சிலர் குறிப்பிட்டார்கள்.

எல்லா கிராமங்களிலும் ஊர்க்காவல் படையை அமைக்க முடியாது. குறிப்பிட்ட நகரங்களில்தான் இது அமைக்கப்படும். பெரிய ஜனத்தொகை இருக்கக்

கூடிய கிராமங்களில் இது அமைக்கப்படும். இப்படி குறிப்பிட்ட நகரங்களில்தான் அமைக்கப்படும். எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் இது அமைக்கப்படுவ தில்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

## போலீசுக்கு உதவி

மது விலக்குக் குற்றங்கள் போன்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க இவர்களை உபயோகப்படுத்துவார்களா என்றெல்லாம் கேட்கப்பட்டது. போலீஸ்காரர்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கின்றன. அவர்களுடைய வேலைகளில், குறிப்பிட்ட சில வேலைகளில் போலீஸ் காரர்களுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்பதற் காகத்தான் இவர்களை நியமிக்கிறோம். இவர்களுடைய சேவை போலீஸ்காரர்களுக்குத் தேவைப்படும்போது இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ப தற்காகத்தான் இவர்களை அமைக்கிறோம்.

நம்முடைய மாநில போலீஸ்காரர்கள் பலர் எல்லைப் போராட்டத்திற்குச் சென்றார்கள். அப்படிச் சென்ற தனால் இங்குள்ளவர்களுக்கு உதவியாக இருப்பதற்குத் தான் இவர்களை நியமிக்கிறோம். அதைப் போலவே இன்னும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டால் போலீஸ்காரர்களுக்கு அடிப்படையான வேலை ஏற்பட் டால் அவர்களுக்கு உதவியாக இருப்பதற்குத்தான் இவர்களை நியமிக்கிறோம். அந்தச் சமயத்தில் போலீஸ்காரர்களுடைய வேலைகளில் இவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்பதுதான் இவர்களுடைய வேலை.

## தேவையான பயிற்சி

அதற்கு வேண்டிய பயிற்சி இவர்களுக்குக் கொடுக் கப்படுகிறது. அதற்குத்தான் அவர்களுக்கு 1½ மாத

பயிற்சி கொடுக்கப்படுகிறது. போலீஸ்காரர்களைப் போன்று இவர்கள் குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. அதற்கு என்றால், அதற்குத் தனியாக வேறு பயிற்சி கொடுக்க வேண்டியதாக இருக்கும். கொலைக் குற்றம் முதலிய குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் அதற்கு அதிகப்படியான பயிற்சி கொடுக்க வேண்டும். ஆகவே இந்த வேலையை மட்டும் செய்ய அவர்களுக்கு அடிப்படையான பயிற்சி கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி முடிந்த பிறகு அதற்கு மேலும் அவர்களுக்கு அதிகப்படியான பயிற்சி கொடுக்கவேண்டும் என்ற தேவை ஏற்படுமானால் அப்பொழுது அதற்குத் தக்கபடி அதிகப்படியான பயிற்சி கொடுக்கப்படும். இதில் சேர்ந்த பிறகு மேலும் மேலும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யலாம் என்ற நோக்கத்துடன்தான் இந்த ஊர்க்காவல் படை அமைக்கப்படுகிறது.

சுகாதார வேலை முதலிய எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. விவசாய உற்பத்தி வேலையும் இருக்கிறது. இதற்கெல்லாம் கிராமத் தொண்டர் படை இருக்கிறது. இதையெல்லாம் அவர்கள் பார்க்கவேண்டும். எல்லாவற்றையும் ஊர்க்காவல் படை வேலையாகச் சேர்ப்பது நல்லதல்ல. ஹோம் கார்ட்களுக்கு இராணுவ வேலையாக இருக்கவேண்டும். இராணுவ வேலை என்று சொல்லும்போது, நேராகப் போர்முனைக்குப் போக வேண்டும் என்பது அல்ல. போலீசாருடைய சில வேலைகளை, அதுவும் நான் குறிப்பிட்ட சில வேலைகளை ஹோம் கார்ட்களுக்கு விடவேண்டும்.

**தமிழில் என்ன?**

பெயரில் குழப்பம் வருகிறது. எல்லாக் கிராமங்களிலும் கிராமத் தொண்டர் படை (வில்லேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ்) இருக்கிறது. ஊர்க்காவல் படையா

னது போலீஸாருக்கு உதவியாக இருக்கக்கூடிய வகையில் அமைக்கப்படுகிறது. 'கார்ட்' என்னும் வார்த்தைக்கு 'காவல்' என்னும் தமிழ் வார்த்தை நன்ருக இருக்கிறது. ஆனல், 'போலீஸ்' என்பதற்கு 'காவல்' என்ற வார்த்தை அவ்வளவு பொருத்தமாக இல்லே. ஏனென்ருல், போலீஸாருடைய வேலே காவல் மட்டுமல்ல. அதற்கு மேற்பட்ட பல வேலேகள் அவர் களுக்கு இருக்கின்றன. 'போலீஸ்' என்பதற்குக் 'காவல்' என்ற வார்த்தை பொருந்தாது என்று நான் முன்பே சொன்னேன்.

ஊர்க்காவல் படை என்பதற்கு 'அகப்படை' என்று சொல்லலாம் என்றனர். அது நல்ல பெயராக இருக்கிறது என்றே நானும் கருதுகிறேன். 'அகப் படை' என்னும்போது அது 'ஹோம் கார்ட்ஸ்' என்ப வர்களேக் குறிக்கும் என்று நாம் மனதிலே வைத்துக் கொள்ளுவோம். தமிழ் வார்த்தை கூடாது என்று நான் சொல்லவில்லே. 'ஹோம் கார்ட்ஸ்' என்பதற்கு 'அகப்படை' என்று தமிழில் வைத்துக் கொள்ளலாம். 'அகப்படை' என்ருலே ரொம்பப் பொருத்தம் இருக் கிறது. அதை ஏற்றுக்கொண்டு விடலாம் என்று நான் நினைக்கிறேன்.

**கட்சிச் சார்பற்று...**

இப்படைக்கான அதிகாரங்களேச் சட்டத்திலேயே வரையறுத்திருக்கிருேம். குறிப்பிட்ட வேலேக்குத் தான் அதிகாரம் இருக்குமே தவிர, மற்ற அதிகாரங் களே இவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்று நினேப் பதற்கு இடமில்லே.

"இதிலே அரசியல்வாதிகள் இருக்கலாமா?" என்ற பிரச்சினேயைச் சிலர் கிளப்பினுர்கள். யார் அர சியல்வாதி இல்லே என்பதை என்ருல் நிர்ணயிக்க

முடியவில்லை. யாராவது அரசியல்வாதி இல்லை யென்று சொல்லிக்கொண்டால், அவருக்குப் பிரஜா உணர்ச்சியே இல்லை என்று சொல்லிவிடலாம். "கட்சிச் சார்பற்ற முறையில் இந்த அகப்படை இருக்க வேண் டும்" என்ற மற்றொரு கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியது. கட்சிச் சார்பற்ற முறையில் அகப்படை இயங்கவேண்டும், ஒரு கட்சிக்காக இந்தப் படையைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதுதான் திட்டம்.

அகப்படைக்கு ஆட்களை எடுத்துக் கொள்ளும் போது, பார்த்துத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும். படையில் சேர்ந்துவிட்ட பிறகு சிலர் மாறலாம். பின்னால் தவறலாம். இதற்கெல்லாம் உத்தரவாதம் செய்ய முடியாது. இதையொட்டித்தான் படையிலி ருந்து நீக்கச் செய்வது பற்றிய விதி இருக்கிறது.

## அரசாங்கத்தின் ஆர்வம்

சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இதில் சேரலாம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இதில் சேருவதில் தடையில்லை. அவர்களையும் இதில் சேர்த்துக் கொள்ள லாம் என்றுதான் இருக்கிறோம். கெஜட் பதிவில்லாத அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளையும் இது பற்றிக் கேட்டோம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இந்த அகப்படையில் சேருவதற்கு ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். மற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்கள் எப்படி அங்குள்ளவர்களை இப்படையில் சேர அனுமதி கொடுக்கிறார்களோ, அம்மாதிரி சர்க்கார் உத்தியோ கஸ்தர்களுக்கும் அனுமதி கிடைக்கும். அவர்களும் பயிற்சிக்குப் போகலாம்.

எல்லாத் துறைகளில் பாடுபடுகிறவர்களுக்கும் மிகுந்த உற்சாகம் இருக்கிறது. நன்றாகப் படித்

தவர்கள், நல்ல நிலையில் இருக்கிறவர்கள், பல துறைகளில் வாழ்க்கை நடத்துகிறவர்கள் எல்லோரையும் இந்த அகப்படையில் சேர்த்துக் கொள்வதன் மூலம் இது சிறந்து விளங்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் ஆர்வம்.

அதற்கேற்றவாறு நல்ல முறையில் இதை அமைக்க வேண்டும். உயர்ந்த நிலையில் இருக்கும் அறிஞர்கள், வழக்கறிஞர்கள் ஆகிய யாவரும் இதில் சேருவதற்கு ஆவல் தெரிவித்திருக்கிறார்கள். டாக்டர்களை மட்டும் சேர்த்துக் கொள்வது இல்லை என்று முடிவு செய்திருக்கிறோம். டாக்டர்களுக்கு இதைவிட வேறு முக்கியமான வேலை இருக்கிறது. இதனால் அவர்கள் வேலை கெட்டுவிடும். ஆகவே, அவர்களைச் சேர்த்துக் கொள்ளப்போவதில்லை. ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

## பெண்கள் ஆர்வம்

இதில் பெண்களைச் சேர்த்துக் கொள்வது சரியென்று பலர் சொன்னார்கள். பெண்களைச் சேர்த்துக் கொள்வது சரியில்லை என்றும் சிலர் குறிப்பிட்டனர். ஊர்க்காவல் படையில் சேர்ந்து பணியாற்ற பெண்களுக்கும் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகவே அவர்களைச் சேர்த்துக் கொள்வது என்பது பெரிய நகரங்களைப் பொறுத்த மட்டிலும்தான். மற்ற இடங்களில் இல்லை.

சென்னை நகரில் இப்போது பெண்கள் அகப்படை அமைக்கப் பட்டுள்ளது. பலர் அதில் ஆர்வத்தோடு சேர்ந்து பாடுபட்டு வருகிறார்கள்.

இந்த ஹோம்கார்டுகள் போலீஸ்காரர்களிடம் பயிற்சி பெறவேண்டும், இவர்கள் மற்றவர்களை நடத்துவதுபோல நடத்தக் கூடாது என்பதாகவும் குறிப்பிட்டார்கள். மற்றவர்களை அவர்கள் நல்ல முறையில்தான் நடத்துகிறார்கள். அதில் தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் இந்த ஹோம் கார்டுகள் சம்பளமில்லாமல், கௌரவ ரீதியில் வேலை செய்கிறார்கள். ஆகவே இவர்களை அவர்கள் மிக்க மரியாதையுடன்தான் நடத்துவார்கள். அதைப் பற்றிக் கொஞ்சம்கூட ஐயமுற வேண்டியதில்லையென்று சொல்ல விரும்புறேன்.

# 14. கிராமத் தொண்டர்படை

நமது நாட்டில் சீன ஆக்கிரமிப்புக் காரணமாகத் தேசிய நெருக்கடி நிலை ஏற்பட்டதை முன்னிட்டு, பாது காப்புக்காக ஆள் பலம், இதர வசதிகள் முழுவதையும் திரட்டுவது அவசியமாகிறது.

## ஆள்பலம்

இப்போது தேசபக்தி உணர்ச்சியானது பல ரூபங் களில் வீறுகொண்டு கிளம்பியிருக்கிறது. கிராமப் பகுதிகளில் தோன்றியுள்ள ஆர்வத்தை ஒழுங்கான முறையில் வகைப்படுத்துவது அவசியமாகும். அந்த ஆர்வமானது தேசப்பாதுகாப்புக்கும், பொருளாதார அபிவிருத்தி என்ற நீண்ட கால லட்சியத்துக்கும் பயன் படுமாறு செய்யப்படவேண்டும்.

தேசிய முயற்சியில் பங்குகொள்ளவும், தேசிய முயற்சிகளுக்குத் தன்னால் முடிந்ததை உதவவும் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்பதே நமது அடிப்படை லட்சியமாகும்.

இந்த மாநிலத்தில் தற்போது 12,500-க்கு மேற் பட்ட பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இவற்றால் சுமார் 2·8 கோடி மக்கள் பயனடைந்து வருகிறார்கள்.

இந்தப் பஞ்சாயத்துக்கள் 373 பஞ்சாயத்து யூனியன் களாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் 21 அபிவிருத்தி மாவட்டங்களில் அமைந் துள்ளன. இந்த அபிவிருத்தி மாவட்டம் ஒவ்வொன்றி லும் ஒரு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் உள்ளது. இந்த ஊராட்சி மன்ற ஆட்சி முறையானது, கிராமப் புறங்களில் ஆள்பலத்தையும் இதர வசதிகளையும் திரட்டுவதில் தகுந்த கருவியாக அமைகின்றது.

## கிராமப் பாதுகாப்பு அணி

மேற்கண்ட காரியங்களைச் செய்வதற்காக, கிராமத் தொண்டர் படை அமைப்புக்கான திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் வகுத்துள்ளது. 1963 ஜனவரி 26-ம் தேதி குடியரசுத் திருநாளன்று பிரதம மந்திரி நேருஜி அவர்கள் இத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். பிரதம மந்திரி அவர்களைத் தலைவராகக் கொண்ட உயர் அதிகாரக் கமிட்டி ஒன்று, நாடெங்கிலும் இந்த வேலைத் திட்ட அமுலுக்கு வழி காட்டி, அவ் வேலையைக் கண்காணித்து வருகிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்தும் கிராமத் தொண்டர் படை அமைக்கவேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். அத் தொண்டர்படை வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும். கிராமப் பாதுகாப்புச் சம்பந்தமான விஷயங்களை மக்களுக்கு விளக்குவதுடன் கிராமப் பாதுகாப்பு அணியாகவும் செயல்படும். மாநிலம் முழுவதிலும் இத்திட்டத்தை அமுலாக்க அரசாங்கம் உத்தர விட்டிருக்கிறது.

## வயது வந்த நபர்கள்

மாநிலத்தின் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்துக்களின்தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், கோ ஆப்ட் செய்யப்பட்ட உறுப்பினர்கள், கிராம சகாயக்குகள், பஞ்சாயத்துப் பிரதேசத்தில் வசிக்கும் ஆசிரியர்கள், பஞ்சாயத்தின் மாதர் நலக் கமிட்டி உறுப்பினர்கள், இளம் விவசாயிகள் மன்றம், இளைஞர் மன்றம், மாதர் சங்கம் ஆகியவைகளின் பிரதிநிதிகள் ஆகியவர்களின் உதவியுடன் பஞ்சாயத்துக்களால் இது அமைக்கப்பட்டுள்ளது.

தொண்டர் படையை அமைப்பதிலும், அதன் வேலைத்திட்டத்தை அமுலாக்குவதிலும் இளைஞர் மன்றங்களுக்கும் மாதர் சங்கங்களுக்கும் குறிப்பான முக்கியப் பங்கு உண்டு. இவ் விவரம் கீழே விளக்கப் படுகிறது. கிராமத் தொண்டர் படையானது, இப்படையில் சேரத் தாமாக முன்வரும் கிராமத்திலுள்ள எல்லா தேக திடகாத்திரமுள்ள வயதுவந்த நபர்கள் அனைவரையும் கொண்டதாக இருக்கும்.

## மூன்று அம்சங்கள்

கிராமத் தொண்டர் படையின் வேலைத்திட்டம் மூன்று அம்சங்களைக் கொண்டது; அதாவது உற்பத்தி; விளக்கப்பணி; கிராமப் பாதுகாப்பு. கிராமத் தொண்டர் படை மூன்று யூனிட்டுகளைக் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு யூனிட்டும், இந்த மூன்று அம்சங்களில் ஒரு பணியைக் கவனித்துக் கொள்ளும்.

இந்த யூனிட்டுக்களை அமைப்பதில், உற்பத்திப் பெருக்கத்துக்கான யூனிட் அமைக்கும்போது, விவசாய அனுபவம் உள்ளவர்கள் எல்லோரையும் ஒன்ருகத் திரட்டி, இந்த யூனிட்டை அமைப்பது நலமாக இருக்கும். படித்தவர்களும், தற்போதைய நாட்டு நடப்புக்கள் குறித்து அறிந்தவர்களுமான தொண்டர்கள் விளக்கப் பணிக்கான யூனிட்டிலும்,

இளைஞர்கள், குறிப்பாக 21 வயதிலிருந்து 40 வயதுக்குள் உள்ள தேக திடமுள்ள இளைஞர்கள், கிராமப் பாதுகாப்பு யூனிட்டிலும் இடம் பெறலாம்.

ஒரு குறிப்பிட்ட யூனிட்டில்தான் சேர்ந்தாக வேண்டும் என்பது கட்டாயமில்லை என்பது தெளிவாக்கப்படவேண்டும். அவசியமானால், ஒரு தொண்டர் ஒன்றுக்கு மேற்பட்ட யூனிட்டுக்களில் உறுப்பினராக இருக்கலாம். உதாரணமாக ஒரு ஆசிரியர் விளக்கப் பணிக்கான யூனிட்டிலும் உறுப்பினராக இருக்கலாம்; கிராமப் பாதுகாப்பு யூனிட்டிலும் உறுப்பினராக இருக்கலாம்.

## உற்பத்திப் பெருக்க யூனிட்

தேசியப் பாதுகாப்பு வலுவாக அமைவதற்கு வேளாண்மைத் தொழில் நன்கு பலமடைந்து விளங்குவது அவசியமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம உற்பத்திப்பெருக்குத் திட்டங்கள் மூலம் தேசம் முழுவதிலும் தீவிரமாக உற்பத்தியைப் பெருக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். லட்சக் கணக்கான நமது விவசாயிகள், பாதுகாப்பு முயற்சியில் பங்குபெற வாய்ப்பளிக்கும் இந்த ஏற்பாடானது, வேலைத் திட்டத்தின் சிறந்த அம்சமாக விளங்கும். உற்பத்திப் பெருக்கத்துக்கான யூனிட், உற்பத்திப் பெருக்கத்திலும், பஞ்சாயத்து வசமுள்ள நிலங்கள் அபிவிருத்தி, கம்போஸ்ட் உரங்கள், இதர தல உரங்கள் அபிவிருத்தி, காய்கறி, பழம் சாகுபடி, கிராமக் காடுகள், மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஏரி, குளங்கள், இதர கிராம நல வேலைகள் ஆகியவைகளிலும் கவனம் செலுத்தி வருகிறது.

விரிவான சாகுபடி, தீவிர சாகுபடி ஆகியவை மூலம் உற்பத்தி அதிகரிப்புக்கான லட்சிய அளவை

நிறைவேற்றி வைப்பதிலும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு மாற்றப்பட்ட சிறு பாசன ஆதாரங்களைப் பராமரிப்பதிலும், குடி மராமத்து வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும், பஞ்சாயத்தின் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களை அமுலாக்குவதிலும், உற்பத்திப் பெருக்கத்துக்கான இதர வேலைத் திட்டங்களிலும் இந்த யூனிட்டுக்குக் கூடுதல் பொறுப்புக்கள் உண்டு.

## விசேஷத் திட்டங்கள்

மாநில அரசாங்கமும், புன்செய் சாகுபடி, உள்ளூர் உர வசதிகளைப் பெருக்குதல், பெரிய நகரங்களிலும் சுற்றுப்புறத்திலும் காய்கறிகள் உற்பத்தி செய்தல், தீவிர நெல்சாகுபடி, குறுகிய காலப் பயிர் சாகுபடி ஆகியவற்றின் மூலம் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான விசேஷத் திட்டங்களை உருவாக்கி வருகிறது. இத்திட்டங்கள் இறுதி வடிவம் அளிக்கப்பட்டு, பஞ்சாயத்துக்களுக்குத் தெரிவிக்கப்பட்டதும் பஞ்சாயத்து அளவில் இவற்றை நிறைவேற்றும் பொறுப்பு உற்பத்தி யூனிட்டைச் சார்ந்ததாக இருக்கும்.

உள்ளூர் கிராமக் கூட்டுறவில் அதிக உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலமும், அதன் நிதி வசதிகளைப் பெருக்குவதன் மூலமும் அதைப் பலப்படுத்த உற்பத்தி யூனிட் பாடுபட வேண்டும். இதனால் கிராம உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற அதன் உறுப்பினர்களுக்குப் போதிய கடனும், மற்ற உதவிகளும் அளிக்க வழி ஏற்படும். அத்துடன், உற்பத்திப் பொருள்களைக் கூட்டுறவு மூலம் விற்பனை செய்யவும் அது உதவும். இதனால் நஷ்டம் தரத்தக்க விற்பனைகளைத் தவிர்க்கலாம்.

## சிரம தானம்

இத்திட்டத்தின் முக்கியப்பகுதி சிரமதானத்தின் மூலம் மக்கள் அளிக்க முன்வரும் உழைப்பினைத் தக்க வாறு பயன்படுத்துவதேயாகும். சமுதாய அபி விருத்தி வேலைத் திட்டத்திற்குச் சிரமதானத் தத்து வம் புதியதன்று. சமுதாய அபிவிருத்தி வேலைத் திட் டத்தின் தொடக்கமே பணமாகவோ, பொருளாகவோ, உழைப்பாகவோ மக்கள் அளிக்கும் பங்கை வலி யுறுத்துவதாகும்.

சரியான நிர்வாக அமைப்பு இருப்பதோடு, சமூ கம் முழுவதும் முயற்சியில் ஈடுபட்டால்தான், சிரம தானத்தைச் சரிவரப் பயன்படுத்த முடியும். கிராம மக்கள் உடனடியாக அளிக்கக்கூடிய உழைப்பின் மூலம் சமுதாய முன்னேற்றத்தை நிலைநாட்டவும் விவ சாய உற்பத்தியைப் பெருக்கவும் கிராம அளவில் இத்தகைய நிர்வாக அமைப்பு வகை செய்யும். பாது காப்பு நடவடிக்கைகளில் அனைவரையும் முழுமன துடன் ஈடுபடுத்தவும் இது வழி கோலும்.

ஒவ்வொரு நபரும் குறைந்தது மாதத்தில் ஒரு நாள் உழைப்பையாவது, அல்லது அதற்குச் சமமான பொருளுதவியையாவது இலவசமாக அளிக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். நிலமில்லாத தொழிலா ளர்கள் இதற்கு மேல் வேலை செய்தால், அவர்களுக்கு உள்ளூர் வீதத்தில் கூலி தரப்படும். கிராமத் தொழில் வினைஞர்கள் தங்கள் தொழில் முறைகளில் அவர்களது உழைப்பினை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளவேண் டும். அதாவது, கருமான் மற்றத் தொழிலாளர்களைப் போல உடல் உழைப்பினை மட்டும் தரவேண்டும் என் பதில்லை. தனக்குத் தெரிந்த தொழில் முறையில் அவர் உதவலாம்.

## தொடர்ச்சியான உழைப்பு

மக்களில் பல்வேறு பிரிவினரிடமிருந்தும் தொடர்ச்சியாகப் பத்து நாட்களோ அல்லது அவற்றிற்கு மேலோ உழைப்பினைப் பெறப் பஞ்சாயத்து முயலவேண்டும். குறிப்பான விவசாய வேலைத் திட்டங்களை முடிப்பதற்காக அத்தகைய உழைப்பினைப் பயன்படுத்தலாம். கிராமத்தில் திட்டத்தைத் தொடங்கியதும், மேற்சொன்ன முறையில் உழைப்பினை இலவசமாக அளிக்கும்படி பஞ்சாயத்துக்கள் எல்லா மக்களுக்கும் வேண்டுகோள்விட வேண்டும். நன்கொடையாளர்கள் பெயர்களையும், அவர்கள் அளித்த உதவிகளையும் ஒரு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். பதிவேட்டைப் பஞ்சாயத்துக்கள் முக்கியமான இடத்தில் வைத்திருக்கவேண்டும்.

பஞ்சாயத்துக்கள் வேலைத் திட்டங்களை ஆராய்ந்து, உழைப்பைப் பயன்படுத்தும் வகையில் தகுந்த திட்டங்களை உருவாக்கவேண்டும். வேலைத் திட்டங்கள், எடுத்துக்கொள்ள வேண்டிய மாதம், வேலை நடைபெறவேண்டிய இடங்கள், குறிப்பிட்ட நாட்களில் வேலை செய்யவேண்டிய நபர்கள் ஆகிய விவரங்களைத் திட்டம் குறிப்பிடவேண்டும். விவசாய வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது மக்களது உழைப்பையும் கவனத்தையும் சமூக வேலைகளில் ஈடுபடுத்தாமல், தகுந்த காலங்களில் அவர்களது உழைப்பைப் பயன்படுத்தப் பஞ்சாயத்துக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். வேலையின் முன்னேற்றம், உழைப்பு பயன்பட்ட அளவு ஆகியவற்றைப் பரிசீலனை செய்து, மேற்கொண்டு செய்யவேண்டிய வேலைகளையும், உழைப்புத் தேவைகளையும் பஞ்சாயத்துத் தீர்மானிக்க வேண்டும்.

## விளக்கப்பணி யூனிட்

போர் சம்பந்தமான சரியான தகவல்களை மக்களி டையே எடுத்துரைப்பதற்காக அவசியமான எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டியது விளக்கப் பணி யூனிட்டின் பொறுப்பாகும். வீண் வதந்திகளைத் தடுக் கவும், மக்களின் மன உறுதியைப் பாதுகாக்கவும் விளக்க வெளியீடுகள், மற்றுமுள்ள நூல்கள் ஆகிய வற்றைச் சரிவரப் பயன்படுத்துவது போன்ற பாது காப்பு முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

போர் நிலவரம் பற்றிய அதிகார பூர்வமான தக வல்களைத் தெரிந்துகொள்ள அகில இந்திய ரேடியோ ஏற்ற கருவியாகும். அகில இந்திய ரேடியோவில் ஒலி பரப்பப்படும் செய்திக் குறிப்புக்கள், போர் பற்றிய விசேஷ நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒவ்வொரு கிரா மத்திலும் உள்ள எல்லா மக்களும் முடிந்தவரை கவ னித்துவரவேண்டும். பஞ்சாயத்துக்களில் அமைக்கப் பட்டுள்ள ரேடியோ செட்டுக்களில் விசேஷ நிகழ்ச்சி களையும், செய்தி ஒலிபரப்புக்களையும் கேட்கச் செய் யும் வகையில் கேட்பவர் குழுக்களை விளக்கப்பணி யூனிட்டு அமைக்க வேண்டும். ரேடியோ செட் இல் லாத கிராமங்களில் பொது இடத்தில் ஒரு ரேடியோ செட் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

## நியாய, அநியாயம்

சரியான தகவல்களைப் பரப்புவதற்கு வட்டாரத் தகவல் நிலையங்கள், சமூகக் கல்வி நிலையங்கள், முதி யோர் கல்வி நிலையங்கள், கிராம நூலகங்கள், கிராம வானொலிக் கருத்தரங்குகள், விவசாயச் சங்கங்கள்,

இளைஞர் சங்கங்கள் ஆகியவற்றைக் கிராமத் தொண்டர் படை பயன்படுத்தவேண்டும். கேட்பவர் குழுக்களை அமைத்து, யுத்த முயற்சி சம்பந்தமாகப் பத்திரிகைகள் மூலமும் யுத்த வெளியீடுகள் மூலமும் அரசாங்கம் வெளியிடும் செய்திகளைப் படிக்கவேண்டும். அவற்றை விளக்கவேண்டும்.

ஆசிரியர்களும் கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்களும் இந்தப் பணியில் ஈடுபட்டுச் சிறந்த தொண்டாற்ற முடியும். விளக்கப்பணி யூனிட்டில் அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து கிராமங்களில் கேட்பவர் குழுக்களைக் கூட்டி, சீனர்களுக்கும் நமக்கும் உள்ள தகராறு பற்றிய விவரங்களையும், நமது எல்லையில் சீனர் செய்திருக்கும் அநியாய ஆக்கிரமிப்புப் பற்றிய விவரங்களையும், நம் பக்கம் உள்ள நியாயத்தையும் எடுத்து விளக்க வேண்டும்.

**பாதுகாப்பு யூனிட்**

கிராமப் பாதுகாப்பு வேலைகள், தீ தடுப்புவேலை, முதல் உதவி, செய்திப் போக்குவரத்து லைன்களைப் பாதுகாத்தல் முதலிய வேலைகளைச் செய்யவேண்டியது கிராமப்பாதுகாப்பு யூனிட்டின் பொறுப்பாகும். கிராமப் பாதுகாப்பு யூனிட்டுக்காக உடற்பயிற்சித் திட்டத்தைச் சாதாரண அளவில் மேற்கொள்ளலாம். இதனால் அதன் உறுப்பினர்கள் உடல்பலத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும். அவசியம் ஏற்படும்போது நாட்டுக்காகப் போரிடச் செல்லவும் எளிதாக இருக்கும். போர் முயற்சியில் பங்கு கொள்ளவும், கட்டுப்பாட்டுணர்வு பெறவும் தூண்டுதலாகவும் இது அமையும்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி விவசாயிகள் மன்றங்கள், இளைஞர் மன்றங்கள், மாதர் சங்கங்கள் ஆகியன இந்த நெருக்கடிச் சமயத்தில் பணியாற்றுவதில்

முக்கியமான இடம் பெறுகின்றன. இளைஞர் மன்றங்கள் மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் விளக்கப்பணி சம்பந்தமான வேலைகளில் பங்கு கொள்ளலாம். குறிப்பாக, ஜவான்களின் குடும்ப நலத்தை மாதர் சங்க உறுப்பினர்கள் கவனிக்கலாம். கிராமப் பெண்களிடையே சரியான தகவல்களை எடுத்துரைக்கலாம். சேமிப்பின் அவசியத்தை வற்புறுத்தலாம். போர் வீரர்களுக்குத் தேவையான சாதாரண பொருள்களை உற்பத்தி செய்வதற்கான வேலைகளில் கிராமப் பெண்களை ஈடுபடுத்தலாம்.

## பொது ஏஜன்சி

கிராமத் தொண்டர் படையினருக்குப் பொதுவான அடையாளச் சின்னம் ஒன்று இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. பொது லட்சிய நிறைவேற்றத்தில் தாங்கள் அனைவரும் ஒன்று என்ற உணர்வைத் தொண்டர்களிடையே உருவாக்க இவை உதவும்.

பஞ்சாயத்து, கிராமத் தொண்டர் படையை அமைத்து அதற்கு வழிகாட்டும். கிராம நிலையில் பாதுகாப்பு சம்பந்தமான திட்டங்களை அமுலாக்கி, அபிவிருத்தி செய்யும் பொது ஏஜன்சியாகப் பஞ்சாயத்து இருக்கும்.

## தலைமைத் தொண்டர்

கிராமத் தொண்டர் படை, தலைமைத் தொண்டர் ஒருவரின் பொறுப்பில் இருக்கும். பஞ்சாயத்துத் தலைவரே தலைமைத் தொண்டராக இருக்க முடியுமானால், அது வரவேற்கத் தக்கதாகும். எந்தக் காரணத்தினாலாவது அவர் தலைமைத் தொண்டராக

இருக்க முடியாவிட்டால் பஞ்சாயத்து யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைத் தலைமைத் தொண்டராக நியமிக்கலாம்.

உற்பத்தி, விளக்கப்பணி, கிராமப் பாதுகாப்பு ஆகிய மூன்று யூனிட்டுக்களுக்கும் உடனடியாகப் பொறுப்பு ஏற்கும் நபர்களையும் பஞ்சாயத்து நியமிக்க வேண்டும். அப்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பணியைத் தலைமைத் தொண்டர் மேற்பார்வையிட்டு வழிகாட்டுவார். கிராமத் தொண்டர் படையை மேற்பார்வையிட்டு அதற்கு வழிகாட்டுவதற்காகப் பஞ்சாயத் தன்னையே ஒரு அவசரகாலக் கமிட்டியாக அமைத்துக் கொள்ளும். பஞ்சாயத்துத் தலைவர் அதன் தலைவராக இருப்பார்.

## வலுவான இணைப்பு

வட்டார நிலையில் பாதுகாப்பு சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளுக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பொறுப்பேற்றுக் கொள்ளும். பல்வேறு பஞ்சாயத்துக்களிலும் உள்ள கிராமத் தொண்டர் படைகளுக்கு இடையே ஒரு வலுவான இணைப்பை ஏற்படுத்தும்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிலையில் ஒரு இணைப்புக் கமிட்டி அமைக்கப்படும். ஒவ்வொரு கிராம சேவகர் வட்டத்திலிருந்தும் ஒருவர் என்ற விகிதத்தில் தலைமைத் தொண்டர்களும், பஞ்சாயத்து யூனியன் பொதுக் காரியக் கமிட்டி உறுப்பினர்களும் இந்த இணைப்புக் கமிட்டியில் இடம் பெறுவார்கள். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர் இக்கமிட்டியின் தலைவராகவும், கமிஷனர் காரியதரிசியாகவும்

இருப்பார்கள். பஞ்சாயத்துக்களிடையே வெளியீடுகள், துண்டறிக்கைகள், உத்தரவுகள் முதலியவற்றை உடனுக்குடன் விநியோகிப்பதும், பாதுகாப்புசம்பந்தமான சரியான தகவல்களை எடுத்துரைப்பதும் இணைப்புக் கமிட்டியின் கடமையாகும்.

# 15. அக்டோபர் இருபது

ஒற்றுமையே ஒரு நாட்டின் உயிர்நாடி. மக்களின் மன உறுதிதான் உண்மையான பலம். அமைதியான அபிவிருத்திக்கு மட்டுமல்ல, எதிர்பாராத ஆக்கிர மிப்பை முறியடிப்பதற்கும் இவை அவசியமாகும்.

சென்ற 1962 அக்டோபர் 20-ந் தேதி சுதந்திர இந்தியாவின் சரித்திரத்தில் மறக்க முடியாத நாளாகும். அன்று சீனு அராஜகப் படையெடுப்பில் இறங்கி இந்தியாவைத் தாக்கிற்று.

## உறுதிக்கு ஆணிவேர்

இந்தத் தாக்குதல் இந்தியாவைத் தட்டி எழுப்பி விட்டது. சுதந்திரம்தான் ஒரு நாட்டின் உயிர் என்பதை மக்கள் அறிந்தனர். தங்கள் நல்லுயிர் ஈந்தும் நாட்டைக் காக்க அணி திரண்டனர். இந்தியா என்பது என்ன ? மலேகளும் வயல்வெளிகளும் நிறைந்த ஒரு நிலமா ? இவை மட்டும் இந்தியா அல்ல. நாற்பத்து ஐந்து கோடி மக்களும் சேர்ந்ததுதான் இந்தியா என்ற புனித பூமி. ஆகையினுல் நாம் ஒவ்வொருவரும், சீனப் படையெடுப்பால் பாதிக்கப்பட்டோம். அதைத் தகர்த்தெறிய நம்மால் ஆன கடமை

யைச் செய்ய உறுதிபூண்டோம். இந்த உறுதிக்கு ஆணிவேர் இந்திய ஒற்றுமையாகும்.

நமது நாடு ஒற்றுமையாக இருந்த நாடு. ஒற்றுமை குன்றியதால் இடைக் காலத்தில் நலம் அழிந்த நாடு. மீண்டும் ஒற்றுமை அடைந்ததால் நல மெலாம் பெற்றுப் பொலிவுபெற்றுவரும் நாடு. இந்த ஒற்றுமையைக் கட்டிக் காப்பதிலும் இதை மேலும் வலுப்படுத்துவதிலும்தான் இந்த நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. இதை வலியுறுத் தவே ஆண்டுதோறும் அக்டோபர் 20ந் தேதியன்று தேசிய ஒருமைப்பாடு தினத்தை நாம் கொண்டாடுகி ரேம். இந்தியாவின் ஒற்றுமையில் நமக்குள்ள இதய பூர்வமான விசுவாசத்தை அன்று நாம் புதுப்பித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேம்.

## தனிப் பண்பு

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னல் சிதறிக் கிடந்த பகுதிகளைப் பிணைத்து, பிரிட்டிஷார் ஒரே ஏக ஆட்சியை ஏற்படுத்தினர். ஆனல் இந்த நாட்டை அவர்கள்தான் ஒன்றுபடுத்தினர் என்பது சரியல்ல. தங்கள் வசதிக்காக ஆண்ட அந்நியர்கள் மக்க ளிடையே இல்லாத புதிய உணர்ச்சியை ஏற்படுத்த முடியாது. ஏற்கனவே இருந்த அடிப்படையான ஒற்றுமைக்கு அவர்கள் ஒரு உருவம் தந்தனர். தபால் வசதிகள், தந்திக் கம்பிகள், ரயில் பாதை ஆகியன எல்லாம் இந்தப் பாரத நாட்டின் ஒற்றுமையை வலுப் படுத்துவதில் உதவின. ஆனல் அடிப்படையான ஒற்றுமை உணர்வு ஏற்கனவே இருந்து வந்தது.

அகில இந்தியாவிலும் தொன்றுதொட்டு இருந்து வரும் ஒற்றுமை, மக்களின் வாழ்க்கையில் ஊடுருவி நிற்கிறது. இந்த நாட்டில் காலமெல்லாம் நிலைத்

துள்ள ஒரு தனிப்பண்பு உண்டு. அதுதான் இந்தியப் பண்பு. பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடியபோது "நாங்கள் இந்தியர்", "எங்கள் நாடு இந்தியா" என்றே சொன்னோம்.

## மணி மாலை

சமயம் சமூக உறவு ஆகியவைகளிலும், காலமெல்லாம் ஒருவிதமான பிணைப்பு இருந்து வந்திருக்கிறது. ஆதிசங்கரர் இந்தியாவின் நான்கு மூலைகளில் நான்கு மடங்களை ஏற்படுத்தினார். வடக்கே ஜோதிர் மடம், மேற்கே துவாரகா மடம், தெற்கே சிருங்கேரி மடம், கிழக்கே கோவர்த்தன மடம் அவர் ஏற்படுத்தியவையாகும்.

வட இந்தியாவில் இருந்து தல யாத்திரை புறப்பட்டவர்கள் ராமேஸ்வரம் வந்தனர். தென்னிந்தியாவிலிருந்து சென்ற யாத்ரீகர்கள் காசியைத் தரிசிப்பதைப் பெரும் பேருகக் கருதினர். நமது இதிகாசங்கள், கதைகள், சங்ககால நூல்கள் பலவும், தேச ஒருமைப்பாட்டை உயிர்மூச்சாகக் கொண்டுள்ளன. இந்த நாட்டின் கலாச்சாரம் ஒன்றுடன் ஒன்று பிணைந்த மணி மாலை போன்றது.

## சிறப்புக்கள் இணைந்த பண்பு

பொதுப் பாரம்பரியம், சரித்திரம், தனிப் பண்பாடு உடையவர்களாக இருப்பதால், மக்களிடையே வேற்றுமைகளே கிடையாது என்பதல்ல. மக்கள் அனைவரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள் அல்லர். அப்படி இருந்தால் அதில் அழகும் இல்லை. இந்தப் பரந்த நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பல இனத்தவர், பல மதத்தினர், பல மொழியினர் வாழ்கிறோம். ஒவ்வொரு பிரிவாருக்கும் தனிப் பழக்க வழக்கங்

களும், பாரம்பரியங்களும் உள்ளன. கால வெள்ளத்தில் இந்தத் தனிச் சிறப்புக்கள் அழிந்து போகும்படி விடாமல், காப்பாற்றப்பட்டும் வந்திருக்கின்றன. உறவும் தொடர்பும் கொண்டு வாழ்ந்ததால், எந்த மொழியும் அழிந்து விடவில்லை. எந்தக் கலாச்சாரமும் மறைந்து விடவில்லை. சிறப்பான அம்சங்கள் பலவும் செழித்து வளர்ந்தபடியே உள்ளன. இந்தப் பல சிறப்புக்களைக் கொண்ட பொதுப் பண்புதான் இந்தியப் பண்பு.

## ஒற்றுமையில் கனிந்தது

இந்திய சுதந்திரத்துக்காக நாம் போராடிய போது, நாடு முழுவதற்கும்தான் நாம் போராடினோம். வங்காளம் பிரிக்கப்பட்டபோது, வங்க மாகாணம் மட்டுமல்ல, தேசம் முழுவதுமே கொதித் தெழுந்தது. காந்தியடிகள், சம்பாரானில் குடியானவர்களுக்காகச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தபோது, நாட்டு மக்கள் அனைவருமே அந்தக் குடியானவர்கள் மீது அனுதாபம் கொண்டனர். குவெட்டா பூகம்ப நிவாரணத்துக்காகத் தேசத்தின் நாலாப் பகுதிகளிலும் மக்கள் அள்ளிக் கொடுத்தனர். காந்தியடிகள், சத்தியப் போர் மூலமும், நிர்மாணத்திட்டங்கள் மூலமும் நாடு முழுவதிலும் தேசிய உணர்ச்சியையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்தார். அந்த ஒற்றுமை உணர்ச்சியின் கனிந்த கனியாகத்தான் சுதந்திரம் கிட்டியது.

## தூய்மையான ஆசை

மனித வாழ்க்கையில் ஏற்படுவதுபோல் ஒரு நாட்டின் வாழ்விலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கறம்பு நிலமாக இருக்கும்போது அதை யாரும் கவனிப்பதில்லை. பண்படுத்தப்பட்டு, பூத்துக் குலுங்கி

நிற்கும் நிலமானுல், பலருக்குப் பலவிதமான தன்னல நாட்டம் ஏற்படுகின்றது. இந்த நாடு அடிமை நிலையில் இருந்தபோது, காணப்படாத பல கோரிக்கைகள், இன்று உரத்த குரலில் பேசப்படுகின்றன. ஜாதி வாதம், வகுப்பு வாதம், பிரதேச நலம் சம்பந்தமான கோரிக்கைகளை எல்லாம் நாம் பார்க்கிறேம்.

நாம் வாழவேண்டும். வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும் என்று விரும்புவதில் தவறில்லை. ஆனுல் அந்த ஆசையும் லட்சியமும் தூய்மையானவையாக இருக்கவேண்டும். நாம் அனைவரும் வாழவேண்டும். நாம் அனைவரும் முன்னேற்றம் காணவேண்டும். இந்த வகையில் மனநிலை விரிவடைய வேண்டும். பிளவு மூலம் சுவர் எழுப்புவோர் நாட்டுக்கோ, கலாச்சாரத்துக்கோ நன்மை செய்யவில்லை.

ஒற்றுமையை, தேச ஒருமைப்பாட்டை கல்லாலோ, காரையாலோ கட்ட முடியாது. மனத்திலே இதை வளர்க்கவேண்டும். இப்படி வளர்ப்பதற்குக் கல்விதான் கண்கண்ட வழி. இளமையிலிருந்தே குழந்தைகளிடையே ஒற்றுமை, வீரம், நாட்டுப்பற்று முதலிய பண்புகளை வளர்க்கவேண்டும். பள்ளிக்கூட நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்துக்கு முக்கிய இடம் அளிப்பது அவசியமாகும்.

## உரம்பெற்று வரும் உறவு

உறவும் நட்பும் மிகப் பெரிய செல்வங்கள். இந்தச் செல்வங்களை வளர்க்க வேண்டுமே தவிரக் குறைக்கலாகாது. இந்த நாட்டுக்குப் புதுவாழ்வை அளித்த தேசிய இயக்கம் வலுவான ஒற்றுமையையும் நல்லுறவையும் ஏற்படுத்தியுள்ளது. நாட்டு மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவேண்டும் என்ற முயற்சி, படிப்படியாகப் பயனளிக்கத்

தொடங்கி விட்டது. பல்வேறு பகுதி மக்களுக்கு மிடையே என்றும் இருந்து வந்த உறவு மேலும் உரம் பெற்று வருகிறது.

இந்தியா இன்று உலகில் மிகச்சிறந்த ஜனநாயக நாடாக மலர்ந்து வருவதைப் பார்க்கிறோம். அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் நாட்டின் வளம் பெருகி வருகின்றது. இதன் முழுப் பலனையும் காண்பதற்காகவும் நம் ஒற்றுமை வலுப்பெற வேண்டும். மாநிலங்கள் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள அவைகளுக்கிடையே உறவு பலபபடுவது அவசியமாகும். கனிப்பொருள்கள், கச்சாப் பொருள்கள் முதலியவைகளில் தேவைகளைப் பெறவும், உபரிப் பொருள்களை விற்பனை செய்யவும் மாநிலங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழவேண்டி யிருக்கின்றன. ஆறுகளின் உபரி நீரைப் பகிர்ந்துகொள்வதிலும். மாநிலங்களுக்கிடையே மின்சார இணைப்பு ஏற்படுத்துவதிலும் இன்று முக்கிய கவனம் செலுத்தப் படுகிறது. இத் துறைகளில் தக்க பலன் காண உணர்ச்சி பூர்வமான ஒற்றுமையே சிறந்த வழியாகும்.

## பயன்படுத்தும் ஆற்றல்

காந்தியடிகள் மறைவுக்குப் பின் அவரது குரலாக விளங்கிய நம் ஒப்பற்ற தலைவர் நேருஜி நம் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஜீவ சின்னமாக விளங்கினார். அவரது வாழ்வும் உழைப்பும் இந்திய மக்களுக்குக் கிடைத்த ஒப்பற்ற வாய்ப்புக்கள். அவரது விரிந்த உள்ளத்தையும் உழைப்பையும் புரிந்துகொண்டு, நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றல் நமக்கெல்லாம் வளரவேண்டும்.

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு, ஒரு இயக்கமாக நாடெங்கும் பரவி வருவது மகிழ்ச்சிக்குரிய

விஷயமாகும். 1961-ல் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு மகாநாட்டில் ஒரு நல்ல முடிவு மேற்கொள்ளப்பட்டது. மக்களில் வயது வந்த ஒவ்வொருவரும் ஒருமைப்பாடு உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டது. நாகரிக சமுதாயக் கொள்கையிலும், தகராறுகளை அமைதியான முறையில் தீர்ப்பதிலும், வன்முறைகளைத் தவிர்ப்பதிலும் நம்பிக்கை தெரிவிப்பதே அந்த உறுதிமொழியாகும்.

## இதயத் துடிப்பு

இந்த உறுதிமொழி இந்திய மக்கள் அனைவரின் இதயத் துடிப்பாகவும் இருக்கவேண்டும். ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே'' என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கூடி வாழ்ந்தால் கிடைக்கும் நன்மை நம்மை வாழ்விப்பதோடு, எதிர்காலச் சந்ததியினரையும் வாழ்விக்கும். இந்த உண்மையைப் பத்திரிகைகளும், ஆசிரியர்கள், சமூகத் தொண்டர்களும் மக்களுக்கு விளக்கிச் சொல்லி, நாட்டின் ஒற்றுமைக்குப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்.

# 16. பெரும் பொறுப்பு

"தொழுத கையுள்ளும் படையொடுங்கும்" என்பது வள்ளுவர் பொன்மொழி. இது இம்மியும் பிழையில்லாத வாசகம் என்பதைச் சீனு நமக்கு நிரூபித்து விட்டது.

எல்லா நாடுகளுடனும் நட்புடன் இருக்க வேண்டும் என்ற நமது கொள்கையை ஒட்டி, சீனுவோடு நாம் உண்மையான நேச பாவத்துடன் இருந்து வந்தோம். சீனு நம்மை நம்பிக்கை மோசம் செய்து விட்டது. ஏகாதிபத்திய வெறி பிடித்து இந்தியாவைத் திடீரென்று தாக்கியது. இதன் மூலம் அரசியல் தருமத்தை அது குழிதோண்டிப் புதைத்து விட்டது.

## திண்மையான உள்ளம்

நம்மீது திணிக்கப்பட்ட இந்தச் சண்டையை நாம் திண்மையான உள்ளத்துடன் ஏற்றுக் கொண்டோம். நாடு வீராவேசங்கொண்டு பொங்கியெழுந்தது. மக்கள் பேதங்களை மறந்தனர்; ஒருமனப்பட்டனர். எல்லா விதத்திலும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க உறுதி பூண்டனர்.

இது சாதாரண எல்லைச் சண்டையல்ல. நம்முடைய தேச சுதந்திரத்தையும் ஆதிபத்திய உரிமைகளையும் பாதிக்கும் பிரச்சினை. ஆகையினால், போர்க்களத்தில் நேரடியாக ஈடுபடும் ஜவான்களுக்கு மட்டும்தான் பொறுப்பு இருக்கிறது என்று நினைப்பது தவறு. நம் ஒவ்வொருவருக்கும் கடமை இருக்கிறது. அதனை நாம் முழு பலத்தோடும், தேசாபிமானத்தோடும், உறுதியோடும் சீராக நிறைவேற்ற வேண்டும். வீண்பிரச்சினைகளில் நமது சக்தியை விரயமாக்காது, ஒரே லட்சியத்துடன் பணியாற்ற வேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் 1962 அக்டோபரில் நமது ஜனாதிபதி நெருக்கடி நிலைமையைப் பிரகடனம் செய்தார்.

## நேருஜியின் நம்பிக்கை

நாம் வயலில் பாடுபட்டாலும், தொழிற்சாலைகளில் உழைத்தாலும், அலுவலகங்களில் பணியாற்றினாலும் நாட்டின் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருக்க முடியும. இதைத்தான் காலஞ்சென்ற நம்முடைய பிரதம மந்திரி நேரு அவர்கள் நெருக்கடி சமயத்தில் நமக்கு வலியுறுத்தினார்.

''நாம் எந்தத் தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அனைவருமாக ஒரு பெரும் பொறுப்பை ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சுதந்திரத்துக்குரிய முழு விலையையும் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நம் தாய் நாட்டினுடைய மக்களுடைய சுதந்திரத்திற்கு எந்த விலையும் பெரிதல்ல; நீங்கள் எந்த மதம், எந்தக் கட்சி, எந்தக்கோஷ்டியைச் சேர்ந்தவராயினும் சரி. நம்மீது திணிக்கப்பட்ட இந்தப் பெரும் போராட்டத்தில் தோழர்களாகப் பங்குகொள்ள வருமாறு உங்கள் அனைவரையும் அழைக்கிறேன். எனக்கு, மக்களிடத்

திலும், லட்சியத்திலும், நாட்டின வருங்காலத்திலும் பூரண நம்பிக்கை உண்டு,'' என்ருர் நேருஜி.

## தொழில் அமைதி

இந்த உணர்ச்சி மொழிகள் நாட்டில் ஒவ்வொரு வர் உள்ளத்திலும் எதிரொலித்தன. தொழிலாளர் களும், தொழிலதிபர்களும் இவற்றுக்குச் செவி சாய்த் தார்கள். நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப் பட்ட ஒரு வாரம் கழித்து 1962 நவம்பர் 3-ல் புது டில்லியில் கூடி, நாட்டுப் பாதுகாப்புக்கு முழுமனத் துடன் ஒத்துழைக்க இருசாராரும் உறுதி பூண்டனர். கிடைக்கின்ற மனித சக்தியையும், இயந்திர சாதனங் களையும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கவும், ஒற்றுமையைப் பேண வும் முடிவெடுத்தனர். பல்வேறு தொழில்களை மேற் கொண்டுள்ள தொழிலாளர், தொழிலாளர்களின் பிரதி நிதிகள் தங்களிடையே அரசியல் வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவையனைத்தையும் மறந்துவிட்டு, நாடு முழுவதிலும் தொழில் அமைதி நிலவப் பிரமா ணங்களை எடுத்துக் கொண்டனர்.

## ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்

உற்பத்தியைப் பாதிக்கும் வேலை நிறுத்தம், கத வடைப்பு போன்ற எச்செயலிலும் ஈடுபடுவதில்லை என்று உறுதி பூண்டனர். உற்பத்தித் திறனைப் பொறுத்த அளவில் கிடைக்கின்ற மனித சக்தியையும் யந்திர சாதனங்களையும் முழு அளவில் பயன்படுத் திக்கொள்ள வேண்டும் என்றும், எதுவும் வீணுகாத வாறு பார்த்துக்கொள்வது என்றும், தொழிற்சாலைத் திறனைப் பெருக்குவது என்றும், அதிக நேரம் உழைப் பதுஎன்றும், நாள் தவருமல், நேரந்தவராமல் வேலைக்கு வருவது என்றும், தொழில் நுணுக்க அலுவலர்களைப்

பாதுகாப்பு முயற்சிக்குக் கொடுத்து உதவுவது என்றும் தீர்மானித்தனர்.

மக்களுக்கு அத்யாவசியமான பொருள்களின் விலை யேற்றத்தைக் குறைக்கப் பாடுபடவும் இந்த வகையில் பெரிதும் உதவியாக இருக்கப் பயன்படுத்துவோர் கூட்டுறவுகளைத் திறக்கவும் அவர்கள் முடிவு செய்தனர். தொழிலாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தைப் பேணி வளர்க்கவும், தேசியப் பாதுகாப்பு நிதிக்குத் தாராளமாக நன்கொடை யளிக்கவும், பாதுகாப்புப் பத்திரங்களில் முதலீடு செய்து வரவும் தீர்மானித்தனர். இவை யெல்லாம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஆகும்.

இவற்றில் உள்ளன்போடு பங்குகொள்ளத் தமிழ்நாடு தொழிலாளர்கள் தவறவில்லை. மாநில அரசாங்கம் 1962 நவம்பவர் 14–ல் சென்னையில் கூட்டிய மகாநாட்டில் தொழிலாளர்களின் தலைவர்களும், தொழிலதிபர்களின் தலைவர்களும் தொழில் முறையில் அமைதியைப் பாதுகாப்பதாக டில்லியில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். அத்துடன் அதைத் தீவிரமாக அமுலாக்குவதற்கான விரிவான வேலைத் திட்டத்தையும் வகுத்தனர்.

## மனச்சாட்சி காட்டும் வழி

மகாநாடு கூடித் தீர்மானம் நிறைவேற்றியதோடு, தங்கள் தீர்மானத்திலும் உறுதியாக நின்று தொழிற் துறையில் அமைதியைப் பாதுகாத்துவரும் தொலாளர்களையும் தொழிலதிபர்களையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். வேலை நிறுத்தம், கதவடைப்புக்களுக்கு இடம் வைக்காமல் இருசாராரும் தங்கள் தொழில் தகராறுகளைச் சுமுகமாகப் பேசித் தீர்த்துக் கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. எனினும்

கோவையில் சில மில்களில் ஒழுங்குபடுத்துவது சம்பந்தமாக நீண்டநாள் வேலை நிறுத்தங்கள் ஒன்றிரண்டு நடைபெற்றிருப்பது வருத்தப்பட வேண்டிய விஷயமாகும். உற்பத்தியைப் பாதிக்காதவகையில் இந்தத் தகராறுகளைத் தீர்த்துக்கொண்டிருக்க முடியும் என்பது எனது நம்பிக்கை. நாட்டின் நலனை உத்தேசித்து எதிர்காலத்தில், எந்தச் சந்தர்ப்பத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் தங்கள் மனச்சாட்சி காட்டும் வழியைக் கடைப்பிடிக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## தேசாபிமான விளக்கு

தொழில் துறையில் சமாதானக் கொள்கையை ஒரு சில தொழிலதிபர்கள் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றும், தொழிற் சங்கங்களில் ஈடுபட்டதற்காகத் தொழிலாளர்களைப் பழி வாங்குகிறார்கள் என்றும், இப்படிப்பட்ட தகராறுகளை மத்தியஸ்துக்கு விட மறுக்கிறார்கள் என்றும் தொழிலாளர் யூனியன் சார்பில் கூறப்படுகிறது. இப்படியே சில தொழிலாளர் சங்கங்கள் நல்லதொரு தொழிற்சங்கம் இருக்கும்போதே போட்டிச் சங்கம் அமைக்கின்றன என்றும், அதன் மூலம் ஒற்றுமைக் குலைவும், பாதகங்களும் நேரிடுகின்றன என்றும் தொழிலதிபர்கள் சார்பில் கூறப்படுகிறது. இது விஷயத்தில் பொதுநலனை முக்கியமாகக் கொள்ளும்படி இருசாராரையும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

தொழில்துறையில் சமாதானம் என்ற கொள்கையைத் தொழிலாளர்கள் ஆனாலும் சரி, தொழிலதிபர்கள் ஆனாலும் சரி, யார் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டின் நலனைப் புறக்கணித்தா

லும் அவர்கள் தேசப்பற்றற்றவர்களே ஆவார்கள். இன்று ஏற்றி வைத்துள்ள தேசாபிமான விளக்கைப் பாதுகாக்குமாறும் சுயநலத்தைத் தள்ளிவைக்குமாறும் நான் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

## உற்பத்தித் திறன் பெருக...

உற்பத்தித் திறன் சம்பந்தமாக, மாநில அளவில் ஒரு அவசர கால உற்பத்திக் கமிட்டி அமைக்கப்பட்டிருப்பதும், அதில் நானும் தொழில் அமைச்சரும் ஈடுபட்டிருப்பதும் மக்கள் அறிந்ததே. இந்திய அரசாங்கம் ஒரு தொழில் நுணுக்கப் பிரிவை அமைத்துள்ளது. சர்வதேசத் தொழிலாளர் அமைப்பிலிருந்து தொழில் வல்லுநர்களின் உதவி இதற்குக் கிடைக்கிறது. அத்துடன் தேசிய உற்பத்திக் கவுன்சிலின் கூட்டுறவும் இதற்கு இருக்கிறது. அவசர நிலை அடிப்படையில் உடனடியாகத் தொழிற்சாலைகளில் அவசர கால உற்பத்திக் கமிட்டிகளை அமைக்குமாறு முக்கிய தொழில் நிறுவனங்களுக்கு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. இவற்றுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ள போதிலும் இந்த நேரத்துக்குத் தேவையான அளவில் இது அமையவில்லை. ஆகையினால், பெரிய தொழிலதிபர்களும், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களும் இந்த வகையில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு அதிக உற்பத்தியை அடைவதற்கு அவசர கால உற்பத்தி கமிட்டிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## கூட்டுறவு பண்டகசாலை

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை ஸ்திரப்படுத்துவது, தொழில்முறையில் சமாதானம்

என்ற கொள்கையில் ஒரு முக்கிய அம்சமாகும். உண வுப்பொருள், மற்ற உபயோகப் பொருள்கள் நியாய மான விலையில் மக்களுக்குக் கிடைக்குமாறு செய்வ தும், அவற்றின் விலை ஏருமல் பார்த்துக்கொள்வதும் மிகவும் அவசியம். இதற்குத் தொழிற்சாலைகளிலும் தொழிற் பிரதேசங்களிலும் பயன்படுத்துவோர் கூட் டுறவுப் பண்டகசாலைகளைத் திறப்பது நல்ல பலனைத் தரும்.

பெரிய தொழிற்சாலைகளிலும், மலைத்தோட்டங் களிலும் கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் திறப்பதற் கான திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது. இந்த வகையில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடவசதி, நடைமுதல் மூலதனம், நிர்வாக அமைப்பு போன்ற சில குறைந்தபட்ச உதவிகளைத் தொழிலதிபர்கள் செய்ய வேண்டுமென்று யோசனை கூறப்பட்டுள்ளது. இந் தத் திட்டத்திற்குத் தங்கள் முழு ஒத்துழைப்பையும் அளித்து, திட்ட நிறைவேற்றத்திற்கு உதவுமாறு எல் லாத் தொழிலதிபர்களையும் நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

### தொடர்ந்த முயற்சி

சேமிப்புத் திட்டத்திற்கு மகத்தான ஆதரவு கிடைத்திருக்கிறது. நிலைமையைச் சரியாகப் புரிந்து கொண்டு, தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் தங்கள் சொந்த நலனையே கருதாது பாதுகாப்பு நிதிக்கு வாரி வழங்கியிருக்கிருர்கள். பாதுகாப்புப் பத்திரங்களிலும் கணிசமான அளவுக்கு முதலீடு செய் திருக்கிருர்கள்.

சேமிப்பின் மூலம் நம்முடைய நாடு நன்மை பெற்று, பாதுகாப்புப் பலப்பட வேண்டுமானல் நம் முடைய முயற்சி தொடர்ந்ததாகவும், ஒழுங்கானதாக

வும் இருக்கவேண்டும். தேசாபிமான உணர்ச்சி உந்தும்போது மட்டும் சேமித்தால் போதாது. நம்முடைய முயற்சி ஒன்றுபட்டதாக இருக்கவேண்டும். மாதா மாதம் சேமித்து வரவேண்டும். இதற்கான திட்டமிட்ட வழிமுறையை வகுத்துச் செயல்படுத்துமாறு தொழிலதிபர்களின் சங்கங்களையும், தொழிலாளர்களின் யூனியன்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேசப் பாதுகாப்புக்குத் தொழிலதிபர்கள் தரும் நன்கொடைகளும், அவர்களிடம் தொழிலாளர்கள் கொடுக்கின்ற நன்கொடைகளும் வேறு காரியத்திற்குப் பயன்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இது போன்ற காரியங்களுக்கு நாம் கடுகளவும் இடமளிக்கக் கூடாது. தொழிலாளர்களின் உள்ளங்களில் இன்று கிளர்ந்தெழுந்துள்ள தேசாபிமான உணர்ச்சியை இதுபோன்ற காரியங்கள் குன்றச் செய்து விடும்.

**மகத்தான பிரச்சினை**

இறுதியாக உங்கள் அனைவரையும் நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்வது இதுதான். நாம் மெத்தனமாக இருக்க இது தருணமல்ல. 'பகைவன்தான் போய்விட்டானே, இன்னும் ஏன் நெருக்கடி நிலைப் பிரகடனம் நீடிக்க வேண்டும்?' என்று பேசப்படுகிறது. இதைப் போன்ற ஆபத்தான விஷயம் வேறு இல்லை. அதுமட்டும் அல்லாது, இது உண்மையான நிலவரமும் அல்ல.

நம்முன் உள்ள பிரச்சினை மகத்தானது. ஈவிரக்கமற்ற கொடிய விரோதியை எதிர்த்து நாம் போராட வேண்டியிருக்கிறது. நம்முடைய திடசித்தத்தைக் குலைக்கும் எதையும் செய்யக்கூடாது. இறுதி வெற்

றிக்கு நாம் லட்சிய நோக்குடன் உறுதியாகப் போராட வேண்டும். அதைத்தான் இன்று நாடும் நாட்டு மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

நாட்டின் நல்வாழ்வுக்கென்றே நம்மை அர்ப்பணித்து நமது பணியைத் தொடர்ந்து உறுதியோடும் திட சித்தத்தோடும் நிறைவேற்றுவோமாக. நம்முடைய புனித மண்ணிலிருந்து விரோதி விரட்டப்படும் வரை நமக்கு ஓய்வு இல்லை, ஒழிச்சல் இல்லை. இந்த ஒரே லட்சியத்தை நோக்கி ஒன்றுபட்டு முன்னேறுவோமாக.

★

PUBLIC LIBRARY
1965
MADRAS